மலர் : 53 இதழ் : 2

தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ஆகஸ்ட் 2022
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

இந்திய சுதந்திரத் திருநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
சென்னை, தலைமைச் செயலகக் கோட்டையில்
தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.**நரேந்திர மோடி** அவர்கள் 28.07.2022 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 44ஆவது சர்வதேசச் சதுரங்கப் போட்டி தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் உலகச் சதுரங்கச் சாம்பியன் திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் வழங்கிய சர்வதேசச் சதுரங்கப் போட்டிக்கான தீபத்தினை, சதுரங்க விளையாட்டு வீரர்கள் திருமதி விஜயலட்சுமி சுப்பராமன், திரு.டி.குகேஷ், திரு. பிரக்ஞானந்தா ஆகியோரிடம் வழங்கினார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் : ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 2022

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 2

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
அ. சுகுமார்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணைய தளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.
– குறள் : 749

போர் முனையில் பகைவரை வீழ்த்துமளவுக்கு உள்ளேயிருந்து கொண்டே தாக்குதல் நடத்தும் வண்ணம் தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்வதே அரண் ஆகும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ மக்களின் மனநிறைவே நாட்டின் வளர்ச்சி 4
★ தமிழ்குடியின் தாய்மடி தமிழ்நாடுதான் 12
★ தமிழகக் காவல்துறைக்குக் குடியரசுத் தலைவரின் வண்ணக் கொடி 22
★ போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம் 26
★ செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ஆய்வு 30
★ மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வு 32
★ ரூ.323.04 கோடியில் 6,35,947 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் 33
★ பள்ளி மாணவர்களுக்கு மனநலம், உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் தொடக்கம் 34
★ முதலமைச்சரின் அழைப்பு மையத்தில் ஆய்வு 36
★ செஸ் ஒலிம்பியாட் இந்தியாவில் நடைபெறும் உலகளாவிய பண்பாட்டுத் திருவிழா 38
★ ரூ.25 கோடி மதிப்பீட்டில் ‘ஒலிம்பிக் தங்க வேட்டை’ திட்டம் 44
★ சமூக நீதிக்கு அடிப்படை என்பதே கல்விதான் 50
★ புத்தகங்களே புத்துணர்வு அமுதம் 53
★ தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் படிக்கட்டாகும் புதிய பன்னாட்டு விமான நிலையம் 58
★ மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் 63
★ ஒரு தாயின் தாலாட்டு 68
★ மாற்றுத்திறனாளிகளுக்கான அரசுச் சிறப்புப் பள்ளிகள் 71

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2022 அன்று, சென்னை, தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

மக்களின் மனநிறைவே நாட்டின் வளர்ச்சி...

சுதந்திரத் திருநாளையொட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.08.2022 அன்று
சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில்
தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

நமது இந்திய நாடு, ஆங்கிலேயரின் காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றதன் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவை நாம் இப்போது கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

எண்ணற்ற தியாகிகளின் தன்னலமற்ற தியாகத்தால் பெற்ற விடுதலை இது!

நமது வரலாறு எத்தனையோ தியாகிகளை, போராளிகளைக் கண்டிருக்கிறது!

அத்தனை நெருப்பாறுகளையும் அகிம்சையால் கடந்த வரலாறு நம்முடையது!

அதனால்தான் உலக அரங்கில் நாம் நெஞ்சு நிமிர்த்தி 'இந்தியர்கள்' என்று பெருமையோடு சொல்கிறோம்!

இந்தப் பெருமை என்பது, 'அகிம்சைப் பாதை' என்னும் அறவழியை நமக்குக் காட்டிய 'தேசத் தந்தை' அண்ணல் காந்தியடிகளையே சாரும்!

அதனால்தான் முதலில் நாட்டு விடுதலைக்காகவும், பின்னர் சமூக விடுதலைக்காகவும் போராடிய தந்தைப் பெரியார் அவர்கள், மகாத்மா காந்தி அவர்கள் மதவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டபோது, இந்த நாட்டிற்குக் 'காந்தி தேசம்' என்று பெயரிட வேண்டும் என்று கூறினார்.

இன்று விடுதலை நாளில், நமது தேசியக் கொடியை ஏற்றும்போது, இந்த வரலாற்றையெல்லாம் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அதேபோல், இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநில முதலமைச்சர்கள் அனைவருக்கும் தேசியக் கொடி ஏற்றுகின்ற உரிமையைப் பெற்றுத்தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் இந்த நேரத்தில் நான் நினைவுகூர்கிறேன்.

தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

பட்டொளி வீசிப் பறக்கும் மூவண்ணக் கொடிக்கு முதல் வணக்கம்!

இன்று நம் கண் முன் பறக்கும் இந்தக் கொடியை அறிமுகப்படுத்தி, 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசியல் நிர்ணய அவையில், உணர்ச்சிகரமான ஓர் உரையை, தீர்மானமாக முன்மொழிந்தவர் பண்டிதர் நேரு அவர்கள். அப்படித்தான் இம்மூவண்ணக்கொடி தேசியக்கொடி ஆனது.

அதேபோல், இந்தியா விடுதலை அடைந்தபோது, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நள்ளிரவுப் பொழுதில், நாடாளுமன்றத்தில் அரசியல்

நிர்ணய அவையின் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களிடம், இந்திய நாட்டின் பெண்கள் அனைவரின் சார்பாகவும் முதல் கொடியை வழங்கியவர் ஹன்ச மேத்தா! விடுதலை இந்தியாவின் முதல் கொடியை ஒரு பெண்மணிதான் வழங்கினார்.

அத்தகைய மூவண்ணக் கொடியை வணங்குவதன் மூலமாக நாட்டை வணங்குகிறோம். நாட்டு மக்களை வணங்குகிறோம். நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றும் ஒருமைப்பாட்டு விழுமியங்களை வணங்குகிறோம்.

மூவண்ணக் கொடிக்கு முன்பு அணி அணியாய் அணிவகுத்து நிற்கும் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

75 ஆண்டுகளாக விடுதலைக் காற்றைச் சுவாசிக்கக் காரணமாக அமைந்த வீரத்தியாகிகள் அனைவருக்கும் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தகைய தியாகிகளை ஈந்த அவர்தம் குடும்பத்தினர் வாழும் திசை நோக்கி வணங்குகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்திய நாட்டின் அனைத்து மக்களுக்கும் எனது விடுதலை நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாபெரும் கோட்டையின் கொத்தளத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றும்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் அடையும் மகிழ்ச்சி ஒருபக்கம் இருந்தாலும், தமிழன் என்ற அடிப்படையில் அடையும் உணர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை.

இந்த இந்தியத் துணைக்கண்டத்திலேயே விடுதலைக்காக முதலில் குரல் கொடுத்தது தமிழ்நாடுதான்.

❖ 1600ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் காலூன்றியது என்றால் ‘ஒரு நெல் மணியைக் கூட உனக்கு கப்பம் கட்ட முடியாது’ என்று 1755ஆம் ஆண்டு சொன்னவன் நெல்கட்டாஞ்செவல் பூலித்தேவன்.

❖ சிவகங்கைக்கு அருகிலுள்ள பனையூரைச் சேர்ந்த மண்டியிடாத மானப்போர் புரிந்த மாவீரன் கான்சாகிப் மருதநாயகம் கொல்லப்பட்ட ஆண்டு 1764.

❖ ‘தானம் கேள் தருகிறேன், வரி என்று கேட்டால் தர மாட்டேன்’ என்று சொன்ன மாவீரன்தான் கட்டபொம்மன். அவர் தூக்கிலிடப்பட்ட ஆண்டு 1799. தூக்குமேடைக்குச் செல்லும்போது கூட தன்னைக் காட்டிக் கொடுத்தவர்களைப் பார்த்துச் சிரித்தபடியே கட்டபொம்மன் சென்றதாக அன்றைய கவர்னர் எட்வர்ட் கிளைவ் அவர்களுக்குத் தளபதி பானர்மென் எழுதிய கடிதம் சொல்கிறது.

❖ கட்டபொம்மனின் மொத்தப் படைக்கும் தளபதியாக இருந்தவர் மாவீரன் சுந்தரலிங்கம். அவரது மாமன் மகள் வடிவு, தற்கொலைப் படைத்தாக்குதலை நடத்தியவர்.

❖ காளையார்கோவில் தாக்குதலில் கணவர் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டதும், சினம் கொண்ட வேங்கையாக வெளியேறி, தன்னைப் போன்ற விடுதலைத் தாகம் கொண்டவர்கள் அனைவரையும் அணிசேர்த்து விடுதலைப் படை அணி கட்டியவர் வீரமங்கை வேலுநாச்சியார். பிரிட்டிஷ் ஆட்சியின் வசம் இருந்த சிவகங்கையை எட்டு ஆண்டு போருக்குப் பின்னால் மீட்டு மீண்டும் ராணியாக அமர்ந்தவர் வேலு நாச்சியார்.

❖ தனது உடையில் நெருப்பை வைத்துக் கொண்டு பிரிட்டிஷ் ஆயுதக் கிடங்கில் தாக்குதல் நடத்தியவர் குயிலி.

❖ சின்னமருதுவும், பெரிய மருதுவும் பீரங்கிகளுக்கு முன்பு வளரியால் வாகை சூடியவர்கள். இவர்கள் வைத்திருந்த வளரிக்கு முன்னால் பீரங்கிகள் சரியும் என்று எழுதினான் பிரிட்டிஷ் அதிகாரி கர்னல் வெல்ஷ்! இது 1801ஆம் ஆண்டு!

❖ ‘சென்னிமலைக்கும் சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை’ என்று சொல்லி மறைந்து, இன்றும் வரலாற்றில் பெரும் மலையாக வாழ்பவர் தீரன் சின்னமலை. அந்த மாவீரன் தூக்குமேடைக்குச் சென்ற ஆண்டு 1805!

❖ அவரது போர்ப்படையிலும் ஒற்றர்படையிலும் செயல்பட்ட தளபதி பொல்லான் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

❖ 1806ஆம் ஆண்டு வேலூர்க் கோட்டையில் பிரிட்டிஷ் இராணுவத்துக்குப் பயம் என்றால் என்னவென்று காட்டப்பட்டது.

❖ நான் சொன்னவை அனைத்தும் 1857ஆம் ஆண்டுக்கு முன்பே நடந்தவை.

❖ 1857 சிப்பாய் புரட்சியைத்தான் முதலாவது இந்திய விடுதலைப் போர் என்று சிலர் சொல்கிறார்கள். அதற்கு முன்னால் தெற்கில், அதுவும் தமிழ்நாட்டில் நடந்தவைதான் இவை.

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் நின்று கொடியை ஏற்றும்போது தமிழனாகப் பெருமைப்படும், உணர்ச்சிவசப்படும் நிலை ஏற்படுவதற்கு இதுதான் காரணம்.

அடிமைப்படுத்துதல் என்று தொடங்கியதோ, அன்றைய நாளே விடுதலை முழக்கத்தை எழுப்பிய மண், நம்முடைய தமிழ் மண்!

“இருநூறு ஆண்டுகள் ஆடுபோல் வாழ்வதைவிட இரண்டே நாட்கள் புலியாக வாழ்வது மேல்”

என்று சொன்ன திப்பு சுல்தானின் தீரம் கொண்ட படைவீரர்களைக் கொண்டிருந்த மண், நம்முடைய தமிழ் மண்!

வ.உ.சிதம்பரனார் செலுத்திய கப்பலும்,

சுப்பிரமணிய சிவாவின் பேச்சும்,

பாரதியின் பாட்டும்,

'தமிழ்த்தென்றல்' திரு.வி.க. நடத்திய பத்திரிகையும்,

பெரியார் விற்ற கதர் ஆடைகளும்,

செண்பகராமன், வீர வாஞ்சி நாதன் போன்றோரது போராட்டங்களும்,

பீரங்கியால் மார்பு பிளக்கப்பட்ட நிலையிலும் நெஞ்சுயர்த்தி நின்ற அழகு முத்துக்கோனின் வீரமும்,

கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்று பாடிய காந்தியச் செம்மல் நாமக்கல் கவிஞரின் தமிழும்,

தன் போராட்டங்களால் ஆங்கிலேய அரசை உலுக்கிய சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் ஆற்றலும்,

பகத் சிங்குக்கு அளிக்கப்பட்ட தூக்குத் தண்டனையைக் கண்டு கொதித்தெழுந்த, அவரது "நான் ஏன் நாத்திகன் ஆனேன்" நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தைப் பெரியார் மூலமாக வெளியிட்டதற்காகச் சிறைக் கொடுமை அனுபவித்த பொதுவுடைமைப் போராளி தோழர் ஜீவாவின் தியாகமும்,

வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாகிரகமும், வெள்ளையனே வெளியேறு எனப் போராட்டக் களங்கள் கண்டு, கொல்கத்தா, வேலூர் எனப் பல மாதங்கள் சிறையில் கழித்த கர்மவீரர் காமராசரின் நாட்டுப்பற்றும்,

காந்தியின் 'யங் இந்தியா' இதழின் ஆசிரியராகப் பணியாற்றியதுடன், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்றதற்காக ஓராண்டுக்கும்மேல் சிறையில் அடைக்கப்பட்ட பொருளியல் அறிஞர் ஜே.சி.குமரப்பாவின் காந்தியப் பற்றும்,

அண்ணல் அம்பேத்கரோடு வட்டமேசை மாநாட்டில் பங்கேற்ற தாத்தா ரெட்டைமலை சீனிவாசனின் உழைப்பும்,

இந்திய நாட்டின்மீதும், தமிழ் மொழியின் மீதும் கொண்டுள்ள பற்றில் இணையற்றவராகவும், அனைவருக்கும் எடுத்துக்காட்டாகவும் வாழ்ந்த கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் வழிகாட்டுதலும்,

நேதாஜியின் இந்தியத் தேசிய இராணுவத்துக்குத் தமிழ்நாட்டில் இருந்து பெரும்படையை அனுப்பி வைத்த பசும்பொன் ஐயா முத்துராமலிங்கம் அவர்களின் தீரமும்,

உப்புச் சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம் எனத் தொடர்ச்சியாகப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை ஏகிய ஐயா ஜமதக்னி அவர்களின் உணர்வும்,

மூதறிஞர் இராஜாஜி நடத்திய பயணங்களும்,

திருப்பூர் குமரன் தூக்கிப் பிடித்த கொடியும் இணைந்ததுதான் இன்று நாம் சுவாசிக்கும் விடுதலைக் காற்று.

அதனால்தான் தியாகத்தைப் போற்றுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் முன்னிலையில் இருந்து வருகிறது. நாட்டுப் பற்றில் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதும் உறுதியாக இருந்து வந்துள்ளது.

❖ 1962ஆம் ஆண்டு, சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

❖ 1971ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானம் போட்டவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்!

❖ 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின்போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம்

நாட்டுப் பாதுகாப்புக்காக ரூ.6 கோடி நிதி வழங்கியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்!

❖ அன்றைய நாள் அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் ரூ.25 கோடி! அதில் ரூ.6 கோடியை வழங்கியது கலைஞர் ஆட்சி!

❖ அந்தப் போரில் வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய ஆட்சி கலைஞரின் ஆட்சி!

❖ 1999ஆம் ஆண்டு கார்கில் போரின்போது, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் முதல் தவணையாக, இரண்டாவது தவணையாக, மூன்றாவது தவணையாக என மூன்று தவணைகளாக மொத்தம் ரூ.50 கோடி வழங்கிய ஆட்சி முதலமைச்சர் கலைஞரின் ஆட்சி!

❖ இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்கள் 1,095 பேருக்கு மாதந்தோறும் தியாகிகளுக்கான நிதிக் கொடையை வழங்கி வருகிறோம்.

நாட்டுக்காகப் போராடிய தியாகிகளைப் போற்றும் வகையில் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்கள் இறக்க நேரிட்டால், வாரிசுகளுக்கும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கக்கூடிய திட்டம் 1966 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்திய விடுதலையின் பவள விழா நிறைவிற்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் சில அறிவிப்புகளைத் தற்போது வெளியிடுவதில் பெருமையடைகிறேன்.

மாநில அரசின் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியத் தொகை, ஆகஸ்ட் – 15ஆம் நாள் முதல், ரூ.18 ஆயிரத்தில் இருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். குடும்ப ஓய்வூதியம் ரூ.9 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள், சிவகங்கை முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், வ.உ.சிதம்பரனார் வழித்தோன்றல்களுக்கான மாதாந்திர சிறப்பு ஓய்வூதியம் ரூ.9 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

மற்றுமொரு மகிழ்ச்சியான அறிவிப்பையும் இந்த இனிய தருணத்தில் வெளியிட விரும்புகிறேன்.

ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு இணையாக, மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கிடும் கோரிக்கையை ஏற்று, கடுமையான நிதிச்சுமைக்கு இடையிலும், அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.07.2022 முதல் அகவிலைப்படி 31 விழுக்காட்டில் இருந்து 34 விழுக்காடாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் மூலம், 16 இலட்சம் பேர் பயன்பெறுவர். அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1,947.60 கோடி கூடுதலாகச் செலவாகும்.

இந்திய நாட்டின் தியாகிகளைப் போற்றிப் பாராட்டுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் சளைத்தது அல்ல!

❖ பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்குக் கோட்டை, பாரதியின் இல்லம் அரசு இல்லமானது, பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம், மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், தில்லையாடி வள்ளியம்மை மணிமண்டபம், வீரவாஞ்சியின் உறவினருக்கு நிதி, வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னமானது, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம், தியாகிகள் மணிமண்டபம், விடுதலைப் பொன்விழா நினைவுச் சின்னம், பூலித்தேவன் நினைவு மண்டபம், தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு, மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு, நேதாஜிக்குச் சிலை, கக்கனுக்குச் சிலை, சிப்பாய்க் கலகத்துக்கு நினைவுத்தூண்.

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றுகின்ற இயக்கம்தான், திராவிட முன்னேற்றக் கழகம்!

கடந்த ஓராண்டுக் காலத்தில் விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் போற்றும் ஏராளமான பணிகளைச் செய்துள்ளோம்.

❖ விடுதலை நாளின் 75ஆவது ஆண்டு பெருவிழாவைக் கொண்டாடும் வகையில் ஏராளமான விழாக்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டுள்ளன.

❖ செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டேன்.

❖ மகாகவி பாரதியார் மறைந்த நூறாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்திருக்கிறேன். கடந்த ஆண்டு முழுவதும் பாரதியின் நினைவைப் போற்றும் விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

❖ உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பராமரிக்க அரசு சார்பில் ரூ.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலை அமைக்க ரூ.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மருது சகோதரர்கள் சிலை அமைக்க ரூ.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ கடலூர் அஞ்சலை அம்மாள் சிலை வைக்க ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.3.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்குத் திருப்பூர் மாவட்டத்தில் நினைவு மண்டபம் அமைக்க ரூ.2.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் அரங்கம் அமைக்க ரூ.2.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் 260 ஆண்டுக்காலத் தொடர் பங்களிப்புக் குறித்து, எதிர்கால இளம் சமுதாயம் அறிந்துகொள்ளும் வகையில், நவீனத் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ‘விடுதலை நாள் அருங்காட்சியகம்’ ஒன்று சென்னையில் அமைக்கப்படும் என்பதைப் பெருமிதம் பொங்க, இவ்வரலாற்றுச் சிறப்புமிகு நாளில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கிருந்து நேராக எழும்பூர் செல்லும் நான் அங்கு அண்ணல் காந்தியடிகளின் சிலையைத் திறந்து வைக்க இருக்கிறேன்.

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று விடுதலையை முன்பே கணித்துப் பாடிய பைந்தமிழ் தேர்ப்பாகன் மகாகவி பாரதியின் கனல் மூட்டும் வரிகளும் அத்தகைய அண்ணல் காந்திக்கும், தமிழ்நாட்டுக்குமான தொடர்பு என்பது அன்பாலும், பாசத்தாலும் மட்டுமல்ல, தமிழால் ஏற்பட்ட நட்பு!

தென்னாப்பிரிக்காவில் இருந்த காந்திக்குத் துணையாக இருந்தவர்கள், தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழர்கள். தில்லையாடி வள்ளியம்மையின் தியாக உணர்வால் ஈர்க்கப்பட்டவர் காந்தி அவர்கள். முதன்முதலாக இந்தியா முழுக்க 1920ஆம் ஆண்டு சுற்றுப்பயணம் வந்த காந்தி அவர்கள், தமிழ்நாட்டில் அதிக நாட்கள் சுற்றுப்பயணம் செய்தார். தனது வாழ்நாளில் 20 முறை தமிழகம் வந்தவர் அண்ணல் காந்தி அவர்கள். தமிழைக் கற்றுக் கொண்டார். தமிழில் கையெழுத்துப் போட்டார். திருக்குறளைத் தமிழில் எழுதிப் பார்த்தார். அவ்வை மூதாட்டியை “Avvai Mother” என்று அழைத்தார். இவை அனைத்திற்கும் மேலாகப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப் போகிறேன் என்பதை 1920ஆம் ஆண்டு சென்னையில் வைத்துதான் காந்தி அவர்கள் இந்தியாவுக்கே அறிவித்தார்.

1946ஆம் ஆண்டு சென்னையில் நடந்த விழாவில் பேசிய அண்ணல் காந்தி அவர்கள், அடுத்த ஆண்டு நாம் உண்மையான விடுதலை நாளைக் கொண்டாடுவோம் என்பதையும் இங்கிருந்துதான் இந்தியாவுக்கே அறிவித்தார். அவரது வாழ்க்கையில் மிக முக்கியமான முடிவான அரையாடை அணிவது என்பதையும் தமிழ்நாட்டில், குறிப்பாக, மதுரை மண்ணில் இருந்துதான் காந்தியடிகள் எடுத்தார்.

பாரிஸ்டர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியாக வந்தவரை மகாத்மா காந்தியாக மாற்றியது தமிழ் மண்.

1921ஆம் ஆண்டு செப்டம்பர் 22ஆம் நாளன்று இந்த நிகழ்வு நடந்தது. இந்த நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டது. இதன் அடையாளமாகச் சென்னை

அருங்காட்சியகம் வளாகத்தில் காந்தியடிகளின் நினைவுச் சிலையை அமைத்துள்ளோம். அதனைத் திறந்து வைக்க இருக்கிறேன். இந்த நாட்டுக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்ட வேண்டிய அடையாளங்களில் ஒருவராக அண்ணல் காந்தியடிகள் இருக்கிறார்கள்.

எளிமை, இனிமை, நேர்மை, ஒழுக்கம், மனித நேயம், மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடையாளமாக இருக்கிறார் அண்ணல் காந்தி அவர்கள். இன்றைக்கு நாட்டுக்கு அவசிய, அவசரமான கொள்கைகள் இவைதான். இத்தகைய அனைத்து மனிதநேயக் கொள்கைகளும் கொண்ட "திராவிட மாடல்" ஆட்சியைத்தான் நாம் நடத்தி வருகிறோம்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த அடிப்படையில்தான் ஆட்சியும் அமைந்துள்ளது. வளர்ச்சி என்பதும் இதனை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் தந்தைப் பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் காணவிரும்பிய வளர்ச்சி. அதுதான் திராவிட மாடல் வளர்ச்சி!

கடந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை நீங்கள் பார்த்தால், அது ஒரே ஒரு துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

❖ பெண்கள் அனைவர்க்கும் கட்டணமில்லாப் பேருந்து வசதி தரப்பட்டுள்ளதன் மூலமாகப் பெண்களின் சமூகப் பங்களிப்பும், பொருளாதார விடுதலையும் தமிழ்நாட்டில் அதிகமாகி இருக்கிறது.

❖ ஓராண்டுக் காலத்தில் 153 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கின்றது. சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் ஏராளமாகத் தொடங்கப்பட்டுள்ளதன் மூலமாகத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெருகி இருக்கிறது. ஏற்றுமதி, இறக்குமதி அதிகமாகி இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது.

❖ வேளாண்மைத் துறைக்காகத் தனி நிதிநிலை அறிக்கையைத் தந்தோம். வேளாண்மைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தின் மூலமாகப் பாசனப் பரப்பு அதிகமாகி உள்ளது. இதன் மூலமாக விளைச்சல் அதிகமாகி உள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெருகி வரும் மழையும் நமது நல்லாட்சிக்கு நற்றுணையாக இருக்கிறது.

❖ இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் மூலமாக இலட்சக்கணக்கான குழந்தைகள் மீண்டும் கல்வி நிலையங்களை நோக்கி வரக்கூடிய கல்விப் புரட்சியை நிகழ்த்திக் காட்டி இருக்கிறோம்.

❖ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமாக ஏழை எளிய கிராமப்புற மக்களுக்கு அவர்களது வீட்டைத் தேடிச் சென்று உயர்தர மருத்துவத்தை வழங்கி வருகிறோம். இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48 திட்டமானது மரணத்தைத் தொடும் மக்களைக் காப்பாற்றும் மகத்தான திட்டமாக அமைந்திருக்கிறது.

❖ எனது கனவுத் திட்டங்களில் ஒன்றுதான் நான் முதல்வன் திட்டம்! தமிழ்நாட்டு இளைஞர்கள் அனைவரையும் கல்வியால், அறிவால், ஆற்றலால், தனித்திறமையால் 'நான் முதல்வன்' என்று ஒவ்வொருவரையும் தலை நிமிர்ந்து செல்ல வைக்கும் திட்டம்

ஆகும். கல்லூரிக் கனவுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ செஸ் ஒலிம்பியாட் விளையாட்டு விழாவை உலகமே வியக்கும் வகையில் நடத்திக் காட்டி இருக்கிறோம்.

❖ இதேபோன்ற விளையாட்டுப் போட்டிகளில் உலக அளவில் பங்குபெறும் வீரர்களையும், வீராங்கனைகளையும் தமிழகத்தில் தயாரித்து வருகிறோம். அதற்காக ஒலிம்பிக் வேட்டை நடந்து வருகிறது.

❖ புத்தக எழுத்தாளர்கள், அறிஞர்கள், பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மகிழ்ச்சி அடையும் வண்ணம் அறிவின் துறையானது செழிப்படைந்து வருகிறது.

❖ ஆலயங்களில் அன்னைத் தமிழ் மட்டுமல்ல, தகுதியுள்ளவர் அனைவரும் அர்ச்சகராகும் சமூகநீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. ரூ.2,500 கோடி மதிப்பிலான கோயில் சொத்துக்களை இந்த ஓர் ஆண்டில் மீட்டுள்ளோம்.

❖ சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக அனைத்துத் தொகுதிக்கும் சென்று பெற்ற மனுக்களில் நடைமுறைக்குச் சாத்தியமான மனுக்களில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர், முதலமைச்சரின் முகவரித் திட்டத்தின் மூலமாகச் சாதாரண, சாமானிய மக்கள் அனைவரின் கோரிக்கையும், என்னை வந்தடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற தனித்துறை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனின் கோரிக்கையையும், செயல்படுத்தித் தரும் மனிதனாக நான் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதற்கான முயற்சியில்தான் என்னை நான் நித்தமும் ஈடுபடுத்தி வருகிறேன்.

ஏழை எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து, அவர்கள் கேட்பதற்கு முன்னதாகவே அவற்றை நிறைவேற்றித் தரும் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத கோரிக்கைகளை, மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து மாவட்ட நிருவாகம் முன்னுரிமைக் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்பதுதான் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் நோக்கமாகும்.

இது அனைத்துத் தொகுதிக்கும் சேர்த்து அறிவிக்கப்பட்டுள்ள திட்டம்தான். ஆளும் கட்சி வென்ற தொகுதி, எதிர்க்கட்சி வென்ற தொகுதி என்ற பாகுபாடு எங்களுக்கு இல்லை. தமிழ்நாடு முதலமைச்சர் என்ற வகையில் அனைத்துத் தொகுதியும் எனது தொகுதிதான். அனைத்து மக்களின் அரசாகத்தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. உலக விளையாட்டுப் போட்டியை நடத்துவது முதல், ஒரே ஒரு இளைஞர்கூட போதைப் பொருளுக்கு அடிமையாகக் கூடாது என்பது வரை எங்கள் முன்னால் வரும் அனைத்துக் காரியங்களையும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துச் செயல்படுத்தி வருகிறோம்.

இதற்குக் காரணம், நான் மக்களோடு மக்களாக வளர்ந்தவன். மக்களால் வளர்க்கப்பட்டவன். மிகச் சிறுவயதில் இருந்தே, பள்ளிப் பருவக் காலத்தில் இருந்தே, அரசியல் ஈடுபாடு கொண்டு, என்னைப் பொதுவாழ்க்கையில் ஒப்படைத்துக் கொண்டவன் நான். பொதுப்பணிகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொண்டவன் நான்.

இன்றைக்கும் சிறு பிரச்சினையாக இருந்தாலும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கோ, அதிகாரிகளுக்கோ, முதலில் தொடர்பு கொண்டு கேட்கும் அளவுக்குச் செயல்பட்டு வருகிறேன். இயற்கைப் பேரிடர் எங்கு நடந்தாலும் உடனடியாக நீண்டு காக்கும் கரம் என்னுடைய கரமாக இருக்கும். பதவியைப் பதவியாக இல்லாமல், பொறுப்பாக உணர்ந்து, பொறுப்போடு செயல்பட்டு வருகிறேன்.

இந்தப் பொறுப்பை எனக்கு வழங்கிய தாய்த் தமிழ்நாட்டு மக்களுக்கு என்றும் நான் உண்மையாக இருப்பேன் என்பதை வானத்தை நோக்கிப் பட்டொளி வீசிப் பறக்கும் தேசியக் கொடியின் நிழலில் நின்று உறுதி எடுத்துக் கொள்கிறேன்.

குமரி முதல் இமயம் வரை பரந்து விரிந்த இந்திய நாட்டின் மக்கள் அனைவரும் தங்களுக்குள் இருக்கக்கூடிய வேற்றுமைகளை மறந்து ஒரு தாய் மக்களாக உணர்ந்து பாடுபட்டதால்தான் கிடைத்தது இந்த விடுதலை. ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமை உணர்வால்தான் காக்க முடியும்.

தேசியக் கொடியின் நிறம், மூன்றாக இருந்தாலும் அது ஒரே அளவோடு ஒன்றிணைந்து காணப்படுகிறது. அதுபோல, பல்வேறு வேறுபாடுகள் இருந்தாலும் ஒன்றிணைந்து வாழ்வதே இந்தியாவைக் காக்கும். வெளிப்புற சக்திகளின் தாக்குதலை வெல்ல வேண்டுமானால், உள்புற ஒற்றுமை என்பது மிகமிக அவசியம். இதுதான் உயிரைக் கொடுத்து இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட உத்தமர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

75 ஆண்டுக் கால விடுதலை இந்தியாவின் வரலாற்றை, மேல் நோக்கி நகர்த்துவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒற்றுமை உணர்வோடு வாழ்வோம். அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற்ற மாநிலங்களின் மூலமாக ஒன்றிய இந்தியாவை வளப்படுத்துவோம்.

வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்!

ஒற்றுமையில் மகிழ்ச்சியைக் காண்போம்!

மக்கள் மகிழ்ச்சியில் மனநிறைவை அடைவோம்!

மக்களின் மனநிறைவே நாட்டின் வளர்ச்சி என்பதை ஓங்கிச் சொல்வோம்!

அனைவருக்கும் விடுதலை நாள் நல்வாழ்த்துக்கள்!

வாழ்க நாடு!

வாழ்க மக்கள்!

நன்றி! வணக்கம்! ❖

படமும்/
செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்குச் சுதந்திரத் திருநாள் வாழ்த்து

சுதந்திரத் திருநாளை முன்னிட்டுச் சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் வரவேற்பு விழாவில், 15.08.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பொன்னாடை அணிவித்து உத்தமர் காந்தியடிகளின் சிலையினை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

சுதந்திர திருநாளையொட்டி விடுதலைப் போராட்ட வீரருக்கு காந்தி சிலை நினைவுப் பரிசு

சுதந்திரத் திருநாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.08.2022 அன்று சென்னை, இராயப்பேட்டையில் உள்ள விடுதலைப் போராட்ட தியாகி திரு. எஸ். ராமசாமி அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவருக்குப் பொன்னாடை அணிவித்து, உத்தமர் காந்தியடிகளின் சிலையினை நினைவுப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்க்குடியின் தாய்மடி தமிழ்நாடுதான்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.07.2022 அன்று முகாம் அலுவலகத்திலிருந்துக் காணொலிக் காட்சி வாயிலாகச் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு திருநாள் விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரை.

அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

ஜூலை 18 என்ற மதிப்புமிக்க நாளில் இத்தகைய சிறப்பான விழாவை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அரசுத் துறைகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையிலும் எனது தனிப்பட்ட முறையிலும், பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எத்தனையோ விழாக்கள், நிகழ்ச்சிகள் இருந்தாலும், தமிழ்நாடு திருநாள் என்ற நிகழ்ச்சிக்கு இணையானது எதுவுமில்லை. ஏனென்றால், 'தமிழ்நாடு நாள்', 'தமிழ்நாடு திருநாள்' என்று சொல்லும்போதே நமது உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதனைச் சொல்லும்போதே ஓர் ஆற்றல் பிறக்கிறது.

என்னுடைய ஒரே வருத்தம் என்பது, கலைவாணர் அரங்கிற்கே நேரடியாக வந்து கலந்துகொள்ள இயலவில்லையே என்பதுதான்!

கொரோனா என்ற தொற்றால் பாதிக்கப்பட்டு, இரண்டு மூன்று நாட்களாகக் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நான், இன்று காலையில்தான் இல்லம் திரும்பினேன்.

தொற்று என்பது முழுமையாக நீங்கிவிட்டது என்றாலும், மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வெடுத்து வருகிறேன். சாதாரணமான காய்ச்சலாக இருக்குமானால், அது குணமடைந்ததும் நம்முடைய பணிகளைத் தொடங்கிவிடலாம். கொரோனா தொற்று என்பதால், அது மற்றவர்களுக்கும் பரவாமல் இருப்பதற்காக, நம்மைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். தொற்று நீங்கிவிட்டாலும், சில நாட்களாவது ஓய்வெடுக்க வேண்டும். அந்த அடிப்படையில்,

நேரடியாக வந்து விழாவில் பங்கேற்பது இயலாத ஒன்று ஆகிவிட்டது.

மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைப்பது, தள்ளி வைப்பதுபோல, தமிழ்நாடு திருநாளைத் தள்ளி வைக்க இயலாது என்பதால், காணொலி மூலமாகவாவது பேசி விடுவது என்று நான் முடிவெடுத்தேன்.

தமிழ்நாடு நாளில் பேசுவது என்பது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பெருமை!

காணொலி மூலமாகப் பேசுவதன் மூலமாக, உடல்சோர்வு நீங்கிவிட்டதாகவே நான் உணர்கிறேன்.

“தமிழ்நாடு வாழ்க!
தமிழ்நாடு வாழ்க!
தமிழ்நாடு வாழ்க!”

என்று பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள், 1967ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் முழங்கிய முழக்கத்தை, மீண்டும் ஒரு முறை முழங்குவதன் மூலமாக, என் உள்ளத்தில் மலர்ச்சி ஏற்படுகிறது.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே –
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே –
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே –
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே –

என்று பாடினார் மகாகவி பாரதியார். அத்தகைய உணர்ச்சியை நாம் இன்று பெறுகிறோம். இத்தகைய உணர்ச்சியை ஊட்டும் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டிய சாதனையானது, சாதாரணமாக நடந்து விடவில்லை.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலத்துக்கு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கே நாம் பல பத்தாண்டுகளாகப் போராட வேண்டி வந்தது, வாதாட வேண்டி இருந்தது, பேச வேண்டி இருந்தது, எழுத வேண்டி இருந்தது, உயிரைத் தர வேண்டி இருந்தது, இரத்தம் சிந்த வேண்டி வந்தது, மாநிலங்களவையில் குரல் எழுப்ப வேண்டி வந்தது, சட்டமன்றத்தில் தொடர்ந்து கேட்க வேண்டி வந்தது, தீர்மானங்களைக் கொண்டு வர வேண்டி வந்தது. அத்தனைக்குப் பிறகும் ‘தமிழ்நாடு’ என்று சொல்வதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்த காரணத்தால்தான், தாய்த் தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்ததால்தான் தாய்த் தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

“தமிழாய்ந்த தமிழ்மகன்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆதல் வேண்டும்” என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டாரே...!

அத்தகைய தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் போன்றவர்கள் அமைச்சர்களாக வந்ததால்தான், இந்தத் தாய்த் தமிழ்நாட்டுக்கு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் உருவாகாமல் போயிருந்தால், தமிழ்நாட்டில் இந்த இயக்கம் ஆட்சிக்கு வராமல் போயிருந்தால், இந்த மாநிலத்திற்கு இன்று வரையில் தமிழ்நாடு என்ற பெயர் சூட்டப்படாமலே இருந்திருக்கும் என்பதை யாரும் மறந்துவிடவேண்டாம்.

உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் போல இதுவும், ‘சென்னைப் பிரதேசம்’ என்று அடையாளமற்ற மாநிலமாகத்தான், இன்று வரை இருந்திருக்கும் என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

திராவிடம் என்ன கிழித்தது என்று வாய்கிழியப் பேசுபவர்கள் இதனை அறிய வேண்டும்.

தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதைவிட, வேறு சாதனை ஏதாவது தேவையா?

மூவாயிரம் ஆண்டுப் பழமை கொண்ட தமிழ்மொழிக்குச் செம்மொழி என்ற தகுதியைப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனை அல்லவா?

இதனைவிட வேறு சாதனை தேவையா? இத்தகைய சாதனைச் சரித்திரத்துக்குச் சொந்தக்காரர்கள் நாம்.

அதனால்தான், தமிழ்நாடு நாளைத் தமிழ்நாடு திருநாளாக நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். உலகம் முழுவதும் பரந்து விரிந்து வாழும் ஓர் இனம் உண்டென்றால் அது தமிழினம்தான்.

நம்முடைய இனம், ஒரு நிலத்தில் ஒரு நாட்டில் மட்டுமே வாழும் இனம் அல்ல, உலகளாவிய இனம். முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடுதான் தாய்வீடு!

இவர்கள் அனைவருக்கும் தமிழ்நாடுதான் தாய்நாடு!

“கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன் தோன்றிய மூத்த குடி, நம்முடைய தமிழ்க்குடி!”

அத்தகைய தமிழ்க்குடியின் தாய்மடி இந்தத் தமிழ்நாடுதான்!

தமிழ்நாட்டில், கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பதை, கீழடி நமக்கு நிரூபித்துக்கொண்டு இருக்கிறது.

அதேபோல், சிவகளை முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் கி.மு.1155 எனக் கண்டறியப்பட்டுள்ளது.

‘தண் பொருநை’ என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது.

இவை அனைத்தும் உலகப்புகழ்பெற்ற மானுடவியல் ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மைகள்.

“உலகில் முதலில் பிறந்த குரங்கு, தமிழ்க் குரங்குதான்” என்று நம்மைச் சிலர் அந்தக் காலத்தில் கிண்டல் செய்வார்கள்.

அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை.

நாம் எதைச் சொன்னாலும் ஆய்வுப்பூர்வமாகத்தான் சொல்கிறோம். சிலர்போலக் கற்பனையாகச் சொல்லவில்லை. அத்தகைய வரலாற்றுப் பெருமை கொண்ட நமது தமிழினம் வாழ்ந்த நிலப்பரப்புக்கு, தமிழ்நாடு என்ற பெயர் இல்லை. அதற்காகவும் போராட வேண்டி இருந்தது என்பது அவமானம் அல்லவா? அந்த அவமானம் துடைக்கப்பட்ட நாள்தான், இந்த ஜூலை 18ஆம் நாள்!

அவமானம் துடைக்கப்பட்ட நாள் மட்டுமல்ல, தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதன் மூலமாக, தாழ்ந்து கிடந்த தமிழினத்தை, தலைநிமிர வைத்த நாள்தான் இந்த ஜூலை 18ஆம் நாள்!

“தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதால், என்ன லாபம்?” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கேட்கப்பட்டபோது, நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்கள், “இழந்த மானம் திரும்பக் கிடைக்கும்” என்று சொன்னார்கள்.

“எங்களுக்கு உணர்ச்சி பிறக்கும்” என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னார்கள்.

“தமிழ்நாடு என்று பெயர் வைப்பதற்காக சங்கரலிங்கனாரின் பிணம் வீழ்ந்தது. உங்களுக்கு ஒரு எழுத்துக்கு ஒரு பிணம் வீதம் வேண்டுமென்று சொன்னால் தயாராக இருக்கிறோம்.

ஐந்து பிணங்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறோம்.

எழுத்துக்கு எத்தனை பிணங்கள் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறோம்.

தமிழ்நாடு என்று இந்த நாட்டுக்குப் பெயரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்....” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் 10.08.1960 அன்று கனல் கக்க முழங்கினார் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழர்கள் வாழும் மற்ற பகுதிகளை, முழுமையாக நாம் பெறவில்லை என்பதைச் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டி 1957ஆம் ஆண்டே கலைஞர் அவர்கள் பேசி இருக்கிறார்கள்.

“கவர்னருடைய உரையைப் பற்றி, இங்குப் பேசிய பல நண்பர்கள், ‘கன்னியாகுமரியை வரவேற்கிறோம்’ என்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம் தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்றுகொண்டு வரவேற்காமல், சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்று கொண்டு வரவேற்கிறோம் என்று எண்ணும்போது தேவிகுளம், பீர்மேட்டைப் பெறுவதற்கு கவர்னர் உரையில் வழிவகை காணப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்....” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் 04.05.1957 அன்று நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றி உள்ளார்கள்.

தமிழர்கள் வாழும் நிலப்பகுதிகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்க்கவும் அப்படி ஒன்றாக ஆன நிலப்பரப்புக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டவுமான போராட்டம் என்பது தமிழ்நாட்டில் நடந்த மகத்தான போராட்டம் ஆகும்.

இதற்கு அடித்தளம் அமைத்த இயக்கம் திராவிட இயக்கம்!

தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற உணர்ச்சியை உருவாக்கிய இயக்கம் திராவிட இயக்கம்!

1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கிளம்பிய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம்தான், இந்த உணர்ச்சியைத் தமிழ்நாட்டில் மீண்டும் உருவாக்கிய போராட்டம்.

தந்தைப் பெரியார் போன்ற தமிழர் தலைவர்களும், மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தரப் பாரதியார் போன்ற தமிழறிஞர்களும் ஒன்று சேர்ந்து நடத்திய போராட்டம் ஆகும்.

தந்தைப் பெரியார் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா சிறை வைக்கப்பட்டார்.

திருவாரூர் வீதிகளில் 14 வயது சிறுவனாகத் தமிழ்க்கொடி ஏந்தினார் தலைவர் கலைஞர். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் போராடிச் சிறை சென்றார்கள்.

பெண்கள் மட்டுமல்ல, குழந்தைகளும் சிறைக்குப் போனார்கள்.

நடராசனையும், தாளமுத்துவையும் நாம் இழந்தோம்.

தமிழுக்காக, தமிழினத்துக்காக, தமிழ்நாட்டுக்காக, போராடவும், வாதாடவும், சிறை செல்லவும், சித்திரவதைகள் அனுபவிக்கவும், உயிர்த்தியாகம் செய்யவும் தமிழ்நாட்டுக்குப் பயிற்றுவித்த போராட்டம்தான் 1938 இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்!

தமிழ்நாடு என்பது வெறும் வார்த்தை அல்ல, இரத்தமும் சதையும் கொண்ட நமது உரிமைச் சொல் என்பதைத் தமிழ்நாட்டுக்கு உணர்த்திய போராட்டம்தான் 1938 போராட்டம்!

1938 முதல் தொடங்கிய அந்தப் போராட்ட உணர்ச்சியின் அடிப்படையாகத்தான்

- இந்தி எதிர்ப்புப் போராட்டமாக இருந்தாலும்,
- தமிழ்க்காப்புப் போராட்டமாக இருந்தாலும்,
- மொழிவாரி மாகாண உருவாக்கமாக இருந்தாலும்,
- தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கான முயற்சிகளாக இருந்தாலும், இந்த நாட்டில் தொடங்கியது.

அந்த விதையில் முளைத்தவை இந்தப் போராட்டங்கள்.

- தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுங்கள் என்று சொல்லி 72 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து மறைந்தார் விருதுநகர் தியாகி சங்கரலிங்கனார் அவர்கள்!
- தலைகொடுத்தாவது தலைநகரைக் காப்பேன் என்று முழங்கியவர் தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி.அவர்கள். தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை மொழிவாரி மாகாணம் உருவாக்க ஒப்படைத்துக் கொண்டவர் சிலம்புச் செல்வர் அவர்கள்.
- திருத்தணியில் நடந்த தடியடியில் இரண்டு தியாகிகள் இறந்து போனார்கள்.
- தென் எல்லைப் போராட்டத்தில் 11 பேர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து போனார்கள்.
- தமிழ்நாடு கேட்டுப் போராடுபவர்களை ‘நான்சென்ஸ்’ என்று சொன்னதை எதிர்த்து மும்முனைப் போராட்டம் நடத்தியது திராவிட முன்னேற்றக் கழகம்.

நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கானவர்கள், பல மாதங்கள் சிறை வைக்கப்பட்டார்கள். தூத்துக்குடியில் நான்கு பேர் துப்பாக்கிச்சூட்டில்

கொல்லப்பட்டார்கள். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இப்படி எத்தனையோ தியாகிகள் தங்களது தேகங்களைத் தந்திருக்கிறார்கள்.

எத்தனையோ தலைவர்கள் தங்களது உழைப்பை வழங்கி இருக்கிறார்கள். எத்தனையோ இயக்கங்கள் தங்களை ஒப்படைத்துக்கொண்டு இருக்கின்றன. அத்தனை தியாகிகளையும் இந்தத் தருணத்தில், நான் வணங்குகிறேன். அத்தனை தலைவர்களுக்கும் தலைதாழ்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்தனை இயக்கங்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் உருவாக்கித் தந்த தமிழ்நாட்டில்தான் நாங்கள் வாழ்கிறோம். நீங்கள் உருவாக்கித் தந்த தமிழ்நாட்டைத்தான் நாங்கள் ஆள்கிறோம்.

உங்களது தியாகத்தை எந்நாளும் காப்போம் என்று நான் உறுதி அளிக்கிறேன். அத்தகைய உறுதிகொண்ட திராவிட மாடல் ஆட்சியைத்தான் நாங்கள் நடத்தி வருகிறோம்.

சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம், மொழிப்பற்று, இன உரிமைகள், மாநில உரிமைகள், கூட்டாட்சித் தத்துவம் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம்.

'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று ஒரு காலத்தில் முழங்கினோம். அன்று அத்தகைய நிலைமை இருந்தது.

1967ஆம் ஆண்டுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி மலர்ந்ததற்குப் பின்னால், தமிழ்நாடு என்று பெயர் சூட்டியதற்குப் பின்னால், கடந்த ஐம்பது ஆண்டுக் காலத்தில் 'தெற்கு சிறக்கிறது' என்று அனைவரும் வியந்து பார்க்கும் பெருமையைப் பெற்றுத் தந்திருக்கிறோம்.

பல தடைகளையும், பாரபட்சங்களையும் மீறி, நம்முடைய சீரிய திட்டமிடுதலாலும் மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் நோக்கத்தாலும் இந்தப் பெருமையை நாம் அடைந்திருக்கிறோம்!

- இந்தியாவினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு!
- ஒன்றிய அரசினுடைய மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு!
- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பு 8.4 விழுக்காடு!
- இந்தியாவின் ஜவுளித்துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு!
- கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு!
- தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு!

இரண்டு நாட்களுக்கு முன்னால் வந்த ஒன்றிய அரசின் அறிவிப்பின்படி இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் பெரும்பாலானவை தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 100 சிறந்த கல்லூரிகளில், 32 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகள்.

இந்தியாவின் மிகச்சிறந்த பல்கலைக்கழகங்களில், 21 பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

50 சிறந்த மருந்தியல் கல்லூரிகளில், 11 மருந்தியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

இந்தியாவில் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில், 18 உயர்கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

இந்தியாவில் தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில், 16 பொறியியல் கல்லூரிகள் தமிழ்நாட்டைச் சார்ந்தவை என்று புள்ளிவிவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மூன்றாவது சிறந்த கலைக்கல்லூரி நம்முடைய சென்னை மாநிலக் கல்லூரிதான்.

சென்னை மாநிலமாக இருந்து தமிழ்நாடாக மாறியதால் தமிழ்நாடாக மாற்றப்பட்டதால் விளைந்த பயன்கள் இவை.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்ததால் ஏற்பட்ட பயன்கள் இவை. இதுதான் சிலருக்குப் பொறாமையாகவும், வயிற்றெரிச்சலாகவும் இருக்கிறது.

எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கிய ஆட்சியாக உருவாக்க நாம் அனைத்து வகையிலும் முயற்சித்து வரும் இந்த நேரத்தில், அனைவருக்கும் மன வருத்தம் ஏற்படுத்தும் வகையில் கள்ளக்குறிச்சியில் நடந்த சம்பவங்கள் அமைந்துள்ளன.

கல்வி நிலையங்கள் ஒவ்வொரு பிள்ளைகளையும் தங்களது சொந்தப் பிள்ளைகளாக நினைத்து அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்.

மாறாக, நடக்கும் எந்தச் செயல்களாக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள் என எச்சரிக்கிறேன். இந்தச் சோகமான சூழலைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் சேர்ந்து சட்டவிரோதமாக நடந்து கொண்டுள்ளார்கள்.

வன்முறைகள் என்பது வளர்ச்சிக்கு எதிரானவை என்பதை அவர்கள் உணர வேண்டும். அமைதியான தமிழகம்தான் அனைவருக்குமான தமிழகமாக அமையும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

நம்முடைய வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணம் நமக்கு இருக்கும் மொழிப்பற்றும், இன உணர்வும், மாநில சுயாட்சிக் கொள்கையும்தான்.

இன்றைக்குத் தமிழ்நாட்டையும் தாண்டி வாழும் பல அறிஞர்களும், இதனை நிரூபிக்கும் வகையில் புத்தகங்களை எழுதி வருகிறார்கள்!

நம்முடைய கல்வி வளர்ச்சியாக இருந்தாலும், தொழில் வளர்ச்சியாக இருந்தாலும், மக்கள் வளர்ச்சியாக இருந்தாலும், சமூக வளர்ச்சியாக இருந்தாலும் இதனை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் மொழிப்பற்றையும், தமிழின உரிமை வேட்கையையும், மாநில சுயாட்சித் தத்துவத்தையும் எந்தச் சூழலிலும் யாருக்காகவும் விட்டுத் தந்துவிடக் கூடாது.

தமிழ் என்று சொல்வதால் மற்ற மொழிக்காரர்களுக்கு, நாம் எதிரிகள் அல்ல. தமிழன் என்று சொல்வதால் மற்ற தேசிய இனத்தவர்க்கு, நாம் எதிரிகள் அல்ல.

மாநில சுயாட்சி பேசுவதால் அது இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது அல்ல. இன்னும் சொன்னால், மாநிலத்தில் சுயாட்சி அமைவதுதான், இந்தியாவின் ஒருமைப்பாட்டையே காப்பாற்றும்.

இந்தியா ஒற்றுமையாக விளங்க வேண்டும்.

இந்த ஒற்றுமையை எப்படி உருவாக்க முடியும்?

இங்கு வாழும் பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட மக்களை, சமமாக மதிப்பதன் மூலமாகத்தான் இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்.

செந்தமிழ்நாடு என்று பாடிய பாரதியாரைவிட தேசியக் கவி வேறு யாராவது உண்டா?

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் என்று பாடிய பாரதி குறுகிய எண்ணம் படைத்தவரா?

மாநில சுயாட்சிக்காக, மொழிவாரி மாகாணங்களை உருவாக்குவதற்காகப் போராடிய கவிமணி, மார்ஷல் நேசமணி, ம.பொ.சி. போன்றவர்கள் இந்தியத் தேசியத்தின் அசைக்கமுடியாத தலைவர்கள் அல்லவா.

எனவே, தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று பேசுவது குறுகிய எண்ணம் கிடையாது.

பரந்து விரிந்த இந்த நாட்டில் எனது மொழியும், எனது இனமும், எனது மாநிலமும் மேன்மை அடைய வேண்டும்!

இதேபோன்ற மேன்மையை அனைத்து மொழிகளும், அனைத்து இனங்களும், அனைத்து மாநிலங்களும் அடைய வேண்டும்!

இத்தகைய பரந்த பெருந்தன்மையுடன்தான், மொழி, இனம், மாநிலச் சுயாட்சி ஆகிய அனைத்தையும் பேசுகிறோம்.

இந்த மூன்று தத்துவம்தான் நம்மை உயர்த்தும்.

நம்மை வாழ வைக்கும்.

நம்மை மேம்படுத்தும்.

மொழிவாழ, இனம் வாழ, மாநிலச் சுயாட்சி வெல்ல, இந்தியா முழுமைக்கும் கூட்டாட்சி உருவாக எந்நாளும் உழைப்போம் என்பதைத் தமிழர் திருநாளாம் இந்தத் தமிழ்நாடு திருநாளில் உறுதியேற்போம்.

தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை முன்மொழிந்தபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் முழங்கியதைப்போல், என்னுடைய முழக்கத்தையும் அனைவரும் எழுந்து நின்று, மீண்டும் முழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

“தமிழ்நாடு வாழ்க!

தமிழ்நாடு வாழ்க!

தமிழ்நாடு வாழ்க!”

“வாழ்க தமிழ்! வெல்க தமிழ்நாடு!”

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
4ஆவது நினைவு நாள்

‘உடன்பிறப்பே’ என்ற உயிர்ச் சொல்லில் உயிர் வாழ்கிறோம்

மூத்த தமிழினத்தின் முத்தான தனிநிகர் தலைவரே!

உங்கள் நினைவுநாள் இன்று. உங்களை நாங்கள் மறந்த நாள் என்று ?

நிழலாய் இருந்து வழிநடத்திக் கொண்டு இருக்கிறீர்கள் என்ற மனத்துணிச்சலோடுதான் கட்சியையும் ஆட்சியையும் என் தோளில் சுமந்து கொண்டிருக்கிறேன்.

உங்கள் விழியின் ஒளியில் பயணத்தைத் தொடர்கிறோம்.

உங்கள் வழியில் எங்கள் கால்கள் செல்கின்றன.

‘உடன்பிறப்பே’ என்ற உயிர்ச்சொல்லில் நாங்கள் உயிர் வாழ்கிறோம்.

கலைஞரே வாழ்க! தலைவரே வாழ்த்துக!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (07.08.2022)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம்
காமராஜர் சாலை

சென்னை, சி.ஐ.டி. நகர் இல்லம்

தேனாம்பேட்டை –
நலத்திட்ட உதவிகள்

கலைஞர் நினைவுப் பன்னாட்டு மாரத்தான் போட்டி



கலைஞர் நினைவுப் பன்னாட்டு மாரத்தான் போட்டியில் பெறப்பட்ட பதிவுக் கட்டணத் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மருத்துவமனைக்கு வழங்கினார். (07.08.2002)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 4ஆவது நினைவு நாளை முன்னிட்டு, 07.08.2022 அன்று பெசன்ட் நகர், ஆல்காட் பள்ளி வளாகத்தில், மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் ஏற்பாட்டில் கலைஞர் நினைவுப் பன்னாட்டு மாரத்தான் போட்டி நடைபெற்றது. இம்மாராத்தான் போட்டிக்கான 5 கி.மீ., தூரப் போட்டியைச் சேப்பாக்கம் திருவல்லிக்கேணிச் சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களும், 10 கி.மீ., போட்டியை மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், 21 கி.மீ., போட்டியை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களும், 42 கி.மீ., போட்டியை மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்களும் தொடங்கிவைத்தார்கள். இந்தியாவில் இதுவரை எந்த மாரத்தானிலும் இல்லாத அளவுக்கு 43,320 பேர் பதிவு செய்து கலந்துகொண்டனர். இதில் 10,985 பேர் பெண்கள். இந்த மாரத்தான் ஓட்டத்தில் பதிவுக் கட்டணமாகப் பெறப்பட்ட ரூ.1,20,69,980 தொகையை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் பி.செந்தில் குமார், இ.ஆ.ப., அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்படைத்தார்கள். தொகை முழுவதையும், எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய் சேய் நல மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு, ஏழைக் குழந்தைகளின் மருத்துவப் பயன்பாட்டிற்காக இந்நிதி செலவிடப்படும்.

இது வெறும் மாரத்தான் ஓட்டமாக மட்டுமில்லாமல் நம் கலாச்சாரத்தைச் சார்ந்த உணர்வோடும், ஆற்றலோடும், மகிழ்ச்சியோடும் ஓடும் வீரர்கள் ஓடுபாதை எங்கும் தமிழகக் கலாச்சாரங்களை வலியுறுத்துகிற வகையில் திருவண்ணாமலைப் பெரிய மேளம், காரமடைத் துடும்பாட்டம், இராமநாதபுரம் ஜிம்பளா மேளம் உள்ளிட்ட 8 வகையான மேளங்கள் இசைக்கப்பட்டன. இம்மாரத்தான் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. 12 இடங்களில் மாரத்தான் போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்குக் குடிநீர், தர்ப்பூசணி, சாத்துக்குடிப் பழச்சாறு, வாழைப்பழம் ஆகியவை வழங்கப்பட்டன. மேலும், மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்குப் பரிசுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முன்னதாகச் சைதாப்பேட்டையில் நிறுவ உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கலச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்து மாலை அணிவித்தார்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய நினைவு மாரத்தானாக அங்கீகரிக்கப்பட்டதற்கான சான்றிதழை 'ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' நிறுவனம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினர்.

மேலும் 5 கி.மீ., மாரத்தான் போட்டியில் முதல் பரிசு பெற்ற திரு.மணிசரத்துக்கு ரூ.25,000மும், இரண்டாவது பரிசு பெற்ற திரு.தனேச்க்கு ரூ.15,000மும், 10 கி.மீ., போட்டியில் முதல் பரிசு பெற்ற கோயம்புத்தூரைச் சேர்ந்த திரு.சதீஷ்குமாருக்கு ரூ.50,000மும், இரண்டாவது பரிசு பெற்ற உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த திரு.தசந்த்குமாருக்கு ரூ.25,000மும், மூன்றாவது பரிசு பெற்ற இராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த திரு.ராம்பால்க்கு ரூ.15,000மும், 21 கி.மீ., போட்டியில் முதல் பரிசு பெற்ற புதுக்கோட்டையைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு.லட்சுமன் கோவிந்த்க்கு ரூ.1,00,000மும், இரண்டாவது பரிசு பெற்ற தேனியைச் சேர்ந்த இராணுவ வீரர் திரு.ராஜ்குமாருக்கு ரூ.50,000மும், மூன்றாவது பரிசு பெற்ற உத்திரபிரதேசம் மாநிலத்தைச் சேர்ந்த திரு.சந்திரசேகருக்கு ரூ.25,000மும், 42 கி.மீ., போட்டியில் முதல் பரிசு பெற்ற ஜெய்ப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த துணைக் காவல் ஆய்வாளர் திரு.ஷோர்சிங்க்கு ரூ.1,00,000மும் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், போட்டியில் பங்கேற்ற 12 பெண்களுக்குச் சிறப்புப் பரிசாகத் தலா ரூ.5,000 வீதம் வழங்கப்பட்டது.

மாரத்தான் போட்டியில் பங்கேற்ற முக்கிய பிரமுகர்களான தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு.சைலேந்திரபாபு, இ.கா.ப., இந்திய இராணுவத்தின் தென்னிந்தியத் தலைமை அதிகாரி, Major General S.S.Dahiya, இந்தியக் கடற்படை உயரதிகாரி Commondore J.Suresh, இங்கிலாந்து நாட்டின் அமீஸ்புரி நகரின் துணைமேயர் மோனிகா தேவேந்திரன், இரண்டு கண் பார்வையிழந்த பஞ்சாபைச் சேர்ந்த வீரர் திரு.சாவ்லா ஆகியோர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புச் செய்து சான்றிதழ்களை வழங்கினார். மேலும், அமெரிக்கா, பிரிட்டிஷ், ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிநாட்டுத் துணைத் தூதர்கள், மாரத்தான் போட்டிக்கு நன்கொடை அளித்த நன்கொடையாளர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்புச் செய்து நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

தமிழகக் காவல்துறைக்குக் குடியரசுத் தலைவரின் வண்ணக் கொடி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 31.07.2022 அன்று சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில், தமிழ்நாடு காவல் துறைக்கு, குடியரசுத் தலைவரின் கொடி வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகக் காவல்துறை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது.

குடியரசுத் தலைவரினுடைய வண்ணக்கொடி என்ற மிக மிக உயர்ந்த அங்கீகாரத்தை நம்முடைய தமிழகக் காவல்துறை பெறுகிறது. அதனை வழங்குவதற்கு மாண்புமிகு குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் வருகை தந்துள்ளார். இச்சிறப்பினை வழங்குவதற்காக வருகை தந்துள்ள குடியரசுத் துணைத்தலைவருக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது இரட்டை மகிழ்ச்சியை எங்களுக்கு வழங்குகிறது.

தமிழகக் காவல்துறைக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கே கிடைத்திருக்கக்கூடிய வரலாற்றுமிகு பெருமை இது!

தனிப்பட்ட ஒரு காவலருக்குக் கிடைத்த பெருமை அல்ல இது, ஒட்டுமொத்தமாக அனைத்துக் காவலர்களுக்கும் கிடைத்திருக்கக்கூடிய பெருமை!

தமிழ்நாடு காவல்துறையின் குறிப்பிட்ட ஒரு சாதனைக்குக் கிடைத்த விருது அல்ல, தமிழ்நாடு காவல்துறைக் காவலர்கள் 160 ஆண்டுகள் ஆற்றிய பணிக்குக் கிடைத்திருக்கக்கூடிய அங்கீகாரம் இது.

இரவு பகல் பாராது, வெயில் மழை பாராது, ஏன், தன் உயிரைப் பற்றிக் கூட கவலைப்படாமல் ஆற்றிய உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் இது. இப்போதும் இந்த இடத்தில் நம் மனக்கண் முன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் நிற்கிறார்.

இதே விருதை இதற்கு முன் தமிழ்நாட்டுக்குப் பெற்றுத் தந்தவர் நம் நெஞ்சம் எல்லாம் நிறைந்த கலைஞர் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் நாள் குடியரசுத் தலைவரின் கொடியினைத் தமிழ்நாடு காவல்துறைக்குப் பெற்றுத் தந்தார்.

தமிழக காவல்துறையானது தனக்குத்தானே சல்யூட் அடித்துக்கொள்ள வேண்டிய பெருமை இது.

தமிழகக் காவல் துறையானது தனக்குத் தானே முதுகில் தட்டிக் கொடுத்துக்கொள்ள வேண்டிய சிறப்பு இது.

பழம்பெரும் நகரமான இந்தச் சென்னை மாநகரத்தில் 1856ஆம் ஆண்டு அன்றைய மதராஸ் மாநகரில்தான் முதன்முதலில் காவல்துறை வரலாறு தொடங்கியது. 1859ஆம் ஆண்டு மதராஸ் மாகாண காவல்துறைச் சட்டம் இயற்றப்பட்டது. எனவே நமது காவல்துறை என்பது இந்தியாவின் பல்வேறு நகரங்களுக்கு முன்மாதிரியான காவல் துறை!

பொது அமைதியைக் காப்பது, குற்றங்களில் இருந்து மக்களைக் காப்பது, சட்டங்களைக் காப்பது, பொது மக்களைக் காப்பது, ஒட்டுமொத்தமாகச் சொன்னால் மக்களைக் காப்பது!

இதுதான் உங்களது முழு முதல் பணி!

இத்துறையில், முதன்முதலாக இந்தியாவிலேயே மகளிர் காவலர்களை நியமித்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

1973ஆம் ஆண்டு காவல் உதவி ஆய்வாளர் உஷா, ஒரு தலைமைக்காவலர் மற்றும் 20 காவலர்கள் சென்னை மாநகரில் பணியமர்த்தப்பட்டனர்.

இன்று காவல்துறையில் 1 டி.ஜி.பி, 2 ஏ.டி.ஜி.பி, 14 ஐ.ஜி முதலிய பெண் காவல் உயரதிகாரிகளும், 20,000 பெண் காவலர்களும் களப்பணியாற்றி வருகிறார்கள்.

பெண்களுக்குக் காவல்துறையில் அதிகாரம் அளித்ததில் முன்னோடி மாநிலம் தமிழ்நாடு. அதை அளித்தவர் கலைஞர் அவர்கள்தான்!

- கைரேகைப் பிரிவு,
- மோப்ப நாய்ப் பிரிவு,
- புகைப்படப் பிரிவு,
- கணினித் தொழில்நுட்பப் பிரிவு,
- கடலோரப் பாதுகாப்புப் பிரிவு,
- மகளிர் கமாண்டோ பிரிவு எனப் பல்வேறு பிரிவுகள், பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக மட்டுமல்ல, முன்னணியிலும் நமது தமிழ்நாடு காவல்துறை விளங்குகிறது!

அகில இந்தியக் காவல் திறனாய்வுப் போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறை கடந்த 30 ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு, பல பதக்கங்களை வென்று வருவதை நினைக்கும்போது ஒவ்வொரு தமிழ்நாட்டவரும் பெருமை கொள்ளக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது.

கடந்த ஓராண்டுக் காலமாகக் காவல்துறையின் செயல்பாடு முன்பைவிட மிக அதிகளவில் பாராட்டும்படியாக உள்ளது.

மதக்கலவரங்களோ, ஜாதி மோதல்களோ, மக்களைப் பீதிக்குள்ளாகக்கூடிய குற்ற நிகழ்வுகளோ இல்லை.

தொழிற்சாலை நிறைந்த பகுதிகளில் அமைதி நிலவுகிறது. துப்பாக்கிச் சூடு இல்லை, கள்ளச்சாராயச் சாவுகளும் இல்லை. காவல்நிலைய மரணங்கள் குறைந்துள்ளன.

காவல் நிலைய மரணம் 2018ஆம் ஆண்டு 17 மரணங்கள் என்று பதிவானது, 2021ஆம் ஆண்டு 4 மரணங்களாகக் குறைந்துள்ளது.

குறைந்துள்ளது என்றுதான் சொன்னேனே தவிர, முற்றிலும் இல்லை என்று நான் சொல்லவில்லை.

காவல் நிலைய மரணங்களே இல்லை என்று சொல்லக்கூடிய நிலையை ஏற்படுத்தித் தாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றங்களைக் குறைக்கும் துறையாக இல்லாமல், குற்றங்கள் நடைபெறாத சூழலை உருவாக்கும் துறையாக நீங்கள் இருக்க வேண்டும்.

சில சிறு குற்றம் நடந்தாலும், குற்றம் சாட்டப்பட்டவர் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடக் கூடாது. பாலியல், போக்சோ சட்டங்களில் சிக்குபவர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றவாளிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்கியாக வேண்டும். கடந்த ஆண்டுக்கான புள்ளி விபரங்களை வாங்கிப் பார்த்தேன். 2021ஆம் ஆண்டு மட்டும் சுமார் 12 இலட்சம் பேர் காவல் நிலையங்களில் புகார் அளித்திருக்கிறார்கள்.

7.56 இலட்சம் குற்ற வழக்குகள் பதிவு செய்திருக்கிறது காவல்துறை. இவற்றில் தொடர்புடைய 9.27 இலட்சம் பேரைக் காவல்துறை கைது செய்திருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கியுள்ளது.

இதுமட்டுமில்லாமல், 7.76 இலட்சம் மனுக்கள் காவல் நிலையங்களில் விசாரிக்கப்பட்டு முடிவு காணப்பட்டுள்ளது. இந்த 7.76 இலட்சம் மனுக்களில், 75 ஆயிரம் மனுக்கள் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பெறப்பட்டவை. இத்தனை பேர் காவல் நிலையங்களை நாடிச் செல்கிறார்கள் என்று சொன்னால், மக்கள் காவல்துறை மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், நன்மதிப்பும் காரணம் என்று நமக்குத் தெளிவாகிறது.

காவல்துறையினர் பெரும் சேவையை மக்களுக்குச் செய்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகிறது.

அமைதியான மாநிலமாகத் தமிழ்நாடு இருப்பதால்தான் ஏராளமான புதிய புதிய தொழிற்சாலைகள் தமிழகத்தை நோக்கி வருகின்றன.

இவை அனைத்தும் தமிழகம் அமைதியாக இருக்கிறது என்பதன் அடையாளங்கள் ஆகும்.

மக்களை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். காவலர்களை நாங்கள் பாதுகாக்கிறோம். காவலர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காகத்தான் ஓய்வு பெற்ற நீதியரசர் சி.டி.செல்வம் தலைமையில், காவல் ஆணையம்

அமைக்கப்பட்டுள்ளது. ஆணையத்தின் பரிந்துரையை ஏற்றுப் பல நலத்திட்டங்களை நிறைவேற்றித் தருவோம் என உறுதி அளிக்கிறேன்.

காவல் அதிகாரிகளும், காவல் ஆளிநர்களும் கவலையின்றிப் பணியாற்றுவதற்கான சூழல்களை அமைத்துத் தர இந்த அரசு தயாராக உள்ளது.

குடியரசுத் தலைவரின் விருது பெற்றிருக்கும் தமிழகக் காவல்துறையினர் தங்கள் காக்கிச் சட்டையில் அதன் அடையாளமான கொடியினை அணிந்து செல்வார்கள். ‘நிஸான்’ என்றழைக்கப்படும் இந்தச் சின்னம் உங்களுக்குப் பெருமை சேர்க்கும். அதோடு காவலர்களுக்கு மேலும் ஒரு நற்செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல்துறை தொடங்கி 160 ஆண்டுகள் நிறைவடைந்த இந்த நிலையில், இன்று குடியரசுத் தலைவரின் வண்ணக் கொடி பெறும் நிகழ்வை முன்னிட்டுக் காவல்துறைத் தலைமை இயக்குநர் முதல் காவலர் வரை அனைவருக்கும் தமிழ்நாடு அரசு காவல் பதக்கம் வழங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களைக் காப்போம்! மகத்தான மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்திக் காட்டுவோம்!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரங்களில் “தமிழ்நாடு நாள்” சிறப்பு மலர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் 22.07.2022 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., அவர்கள், 18.07.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு நாள் விழாவில் வெளியிடப்பட்ட “தமிழ்நாடு நாள்” சிறப்பு மலரை வழங்கினார்.

போதைப் பாதை அழிவுப்பாதை அதன் நடமாட்டத்தை முற்றிலுமாகத் தடுப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அனைத்துச்
சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் – 05.08.2022

விளையும் பயிர்களை நாசம் செய்யும் களையாகச் சமூகத்தில் முளைத்துவிட்ட போதைப் பொருட்களின் பயன்பாட்டை வேரோடும், வேரடி மண்ணோடும் களையெடுக்கத் தமிழ்நாடு அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக, மாவட்ட ஆட்சியர்களும் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்களும் பங்குபெறும் சிறப்புக் கலந்தாய்வுக் கூட்டம், வரும் ஆகஸ்ட் 10ஆம் நாளன்று, சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரிகளில் இளைய சமுதாயத்தினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

இக்கடிதத்தில், இளைய சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு மாபெரும் அச்சுறுத்தலாக இருக்கும் போதைப் பொருட்களின் பாதிப்புகள் குறித்து உங்களின் கவனத்தை ஈர்க்கவே இக்கடிதத்தை நான் உங்களுக்கு எழுதுகிறேன். சமூகத்தில் போதைப் பொருட்களின் நடமாட்டத்தையும், பயன்பாட்டையும் முற்றிலுமாக ஒழிக்க, உறுதியேற்றிருக்கும் தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளுக்குத் தாங்கள் முழு ஒத்துழைப்பும், ஆதரவும் அளிக்க வேண்டும் என்று முதற்கண் கேட்டுக் கொள்கிறேன்.

போதைப் பாதை அழிவுப் பாதை என்பதை நாடும் நாட்டு மக்களும் அறிவார்கள். தற்செயலாகவோ, தவறுதலாகவோ அதனைப்பயன்படுத்துபவர்கள் அதற்கு முழுமையாக அடிமையாகி, மொத்தமாக அதனுள் மூழ்கிவிடுகிறார்கள்.

போதைப் பொருட்கள் அவர்களது சிந்தனையை அழித்து விடுகிறது. வளர்ச்சியைத் தடுத்து விடுகிறது. எதிர்காலத்தைப் பாழாக்கி, அவர்களது குடும்பத்தையும் அழித்து விடுகிறது. இது சமூகத்தின், நாட்டின் எதிர்காலத்தைக் கடுமையாகப் பாதிக்கின்றது.

சமூகத்தின் நச்சாக விளங்கும் போதைப் பொருட்களை முற்றிலும் அழித்தாக வேண்டும். அதனை யாரும் சிறிதளவு கூடப் பயன்படுத்தாமல் தடுத்தாக வேண்டும். அதன் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசுச் சட்டவழியிலான அனைத்து முறைகளையும் பின்பற்றி வருகிறது. அதேநேரத்தில், போதைப் பொருள் பயன்பாட்டின் ஆபத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அரசின் மிக முக்கியக் கடமையாக நான் நினைக்கிறேன். போதையின் பாதையில் செல்லாமல் ஒவ்வொருவரையும் தடுக்கும் கடமை நமக்கு இருக்கிறது.

இதன் ஒருபகுதியாக, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 11ஆம் நாளை, போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நாளாகத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

அன்றைய நாள், பள்ளி, கல்லூரிகளில் இதுதொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. போதையின் தீமைகள் குறித்த காணொளிக் காட்சிகள் திரையிடப்பட உள்ளன. இதுகுறித்து மாவட்ட நிருவாகத்தின் சார்பில் தங்களுக்கு முறையாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

அன்றைய நாள், தங்களது தொகுதிக்குட்பட்ட இடங்களில் நடைபெறும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் தாங்களும் தவறாது பங்கேற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இது அரசியல் பிரச்சினை அல்ல; நாட்டின் எதிர்காலம் குறித்த பிரச்சினை! குறிப்பாக, இளைய சமுதாயத்தினரின் வாழ்க்கை குறித்த பிரச்சினை. எனவே, நீங்கள் இதில் உங்கள் பங்களிப்பினை வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ச்சியான பரப்புரைகளின் மூலமாகத்தான் போதைப் பொருட்களின் தீமையை உணர்த்த முடியும். அதற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய உங்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்.

போதைப் பாதை அழிவுப்பாதை என்பதை உணர்த்துவோம்! அதன் நடமாட்டத்தை முற்றிலுமாகத் தடுப்போம்!

இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். ❖

போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற போதைப் பொருள் தடுப்புக் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய முன்னுரை.

உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கம்!

தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றது முதல் இதுவரை நடந்திருக்கக்கூடிய, நான் கலந்து கொண்டிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளில் இது ஒரு மாறுபட்ட நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு நிகழ்ச்சியும், ஒவ்வொருவிதமான மனநிலையைக் கொடுக்கும் என்று சொன்னால், அந்த வகையில், கவலை அளிக்கும் மனநிலையில்தான் நான் இங்கே அமர்ந்து உங்களுடன் ஆலோசனை நடத்துவதற்கு முற்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் போதை மருந்தின் பயன்பாடும், அதற்காக அடிமையாகிறவர்களின் தொகையும் அதிகமாகி வருவதை நினைக்கும்போது கவலையும் வருத்தமும் கூடவே இருக்கிறது. கடந்த ஆட்சியில் இது பற்றி போதிய கவனம் செலுத்தாமல் விட்டது காரணமாக இந்த சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும், நாம் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறோம் என்பது மட்டுமே இப்போது எனக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு ஆறுதல்.

இந்த அடிப்படையில்தான், அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் கூடியுள்ள இந்தக் கூட்டத்தை நாம் இங்கே கூட்டி இருக்கிறோம். ஏதேனும் ஒரு திட்டத்தைத் தொடங்குவதற்காகவோ, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக்காகவோ இத்தகைய கூட்டுக் கூட்டத்தை நாம் இதுவரையில் பலமுறைக் கூட்டியிருக்கிறோம். ஆனால், இன்று போதைப் பொருள் தடுப்புக்காகக் கூட்டி இருக்கிறோம் என்று சொன்னால், இது வருங்காலத்தில் மாபெரும் பிரச்சினையாக மாறிவிடக் கூடாது என்கிற காரணத்தால்தான்!

இந்த அரங்கத்தில் இருக்கும் அனைவரும், நம் முன்னால் இருக்கும் அழிவுப்பாதையான போதைப் பாதையை, நமது முழு ஆற்றலையும் பயன்படுத்தித் தடுத்தாக வேண்டும். அதற்கான உறுதியை எடுத்தாக வேண்டும். போதை மருந்துகள், நம் மாநிலத்துக்குள் நுழைவதைத் தடுத்தாக வேண்டும். அது பரவுவதைத் தடுத்தாக வேண்டும். விற்பனையாவதைத் தடுத்தாக வேண்டும். பயன்படுத்துவதைத் தடுத்தாக வேண்டும். பயன்படுத்துபவர்களை அதிலிருந்து மீட்டு நல்வழிப்படுத்தியாக வேண்டும். புதியதாக ஒருவர் கூட இந்த போதைப் பழக்கத்திற்கு ஆளாகிவிடாமல் முனைப்புடன் இளைஞர் சமுதாயத்தைப் பாதுகாத்திட வேண்டும்.

இந்த உறுதியை மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். உங்களை நம்பி ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒப்படைத்துள்ளேன். நீங்கள்தான் அந்த உறுதியை எனக்கு வழங்கிட வேண்டும். போதைப் பொருள் நடமாட்டத்தில் குஜராத்தைவிட, மகாராஷ்டிராவைவிடத் தமிழகம் குறைவுதான் என்று நான் சமாதானம் அடையத் தயாராக இல்லை. ஒரு சிறு துளி இருந்தாலும் போதைப் பொருள் நடமாட்டம் என்பது நடமாட்டம்தான். ஒருவர் அதற்கு அடிமையானாலும் அது அவமானம்தான். எல்லாவற்றிலும் வளரும் தமிழ்நாடு, போதை போன்ற எதிர்மறையான விஷயங்களில் வளர்ந்துவிடக் கூடாது. வளர விட்டுவிடவும் கூடாது.

போதை என்பதை நல்ல பழக்கம், கெட்ட பழக்கம் என்ற பொருளில் நான் சொல்லவில்லை. உடலுக்குக் கெடுதியானது போதைப் பொருள். அதனால் கெடுதல்தான் என்ற பொருளில் நான் சொல்கிறேன். போதைப் பொருளைப் பயன்படுத்துவதற்கு ஏதோ ஒரு காரணம் தேவைப்படுகிறது, அவ்வளவுதான். அந்தக் காரணத்தில் பொருள் உள்ளதா என்றால் இல்லை.

❖ படிப்புச் சரியாக வரவில்லை

❖ மனக்கவலை ஏற்படுகிறது

❖ வாழப் பிடிக்கவில்லை

இப்படி எத்தனையோ காரணங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள்.

இவை அனைத்தும் கதைக்கு உதவாத காரணங்கள்தான். கோடிக்கணக்கான மக்கள் தன்னம்பிக்கையையும் மன உறுதியையும் மட்டுமே வைத்து வாழும்போது, ஒரு சிலர் மட்டும் அது இல்லாத காரணத்தால் போதையின் பாதையில் தீர்வு கிடைக்கும் என்று சொல்வது கோழைத்தனமே தவிர வேறல்ல. போதை என்பது அதனைப் பயன்படுத்தும் தனிமனிதரின் பிரச்சினை அல்ல. அது சமூகப்பிரச்சினை!

போதைப் பொருள் என்பதை முற்றிலுமாக தடுக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், சமூகத்தில் குற்றங்களைத் தடுக்க வேண்டும் என்பதுதான். ஒருவர் போதையைப் பயன்படுத்தி விழுந்து கிடப்பதால் மற்றவர்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்கக் கூடாது. போதைப் பொருள்தான் கொலை, கொள்ளை, பாலியல் தொல்லை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்குத் தூண்டுதலாக அமைந்து விடுகிறது. இத்தகைய குற்றம் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள் போதையைப் பயன்படுத்துபவர்களாக இருப்பார்கள், அல்லது போதை மருந்து உட்கொண்ட நிலையில் இக்குற்றத்தினைச் செய்திருப்பார்கள்.

போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுத்தல் என்பது கூட்டு நடவடிக்கை. போதைப் பொருள் பழக்கம் என்பது ஒரு சமூகத் தீமை. ஆகவே இந்தச் சமூகத் தீமையை நாம் அனைவரும் சேர்ந்துதான் தடுத்தாக வேண்டும்.

❖ போதை மருந்தைப் பயன்படுத்துபவர் அதிலிருந்து விடுபட வேண்டும்.

❖ விடுபட்டவர், போதைப் பயன்பாட்டுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

❖ பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் போதைப் பொருளைப் பயன்படுத்தாமல் கண்காணிக்க வேண்டும்.

❖ இதே கடமை பள்ளி ஆசிரியர்களுக்கும் இருக்கிறது.

❖ இதே பணி, கல்லூரிகளின் நிருவாகத்திற்கும் இருக்கிறது.

❖ வியாபாரிகள், கடைக்காரர்களும் போதைப் பொருளை விற்கமாட்டேன் என உறுதி எடுக்க வேண்டும்.

❖ போதைப் பொருள்கள், பள்ளி, கல்லூரி அருகே விற்பனையாகாமல் கண்காணிக்க வேண்டும்.

❖ மாவட்ட நிருவாகமானது, தனது எல்லைக்குள் இப்பொருள்களின் நடமாட்டத்தைத் தடுத்தாக வேண்டும்.

❖ காவல் நிருவாகமானது, போதைப் பொருள்களை முற்றிலுமாக ஒழித்தாக வேண்டும்.

❖ போதைப் பொருள் விற்கும் வியாபாரிகள் அனைவரையும் காவல்துறை கைது செய்தாக வேண்டும்.

❖ அவர்களது மொத்த சொத்துக்களும் முடக்கப்பட வேண்டும்.

❖ மாநிலம் விட்டு மாநிலம் கடத்தி வருவதை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.

❖ போதையின் தீமையை மருத்துவர்கள், குறிப்பாக, மனநல மருத்துவர்கள் பரப்புரை செய்ய வேண்டும்.

❖ போதையில் விழுந்தவர்களை மீட்கும் பணியைச் சமூகநல அமைப்புகள், அரசுசாராத் தொண்டு நிறுவனங்கள் செய்தாக வேண்டும்.

❖ போதையில் இருந்து மீள்பவர்களுக்கு மறுவாழ்வு வழங்கப்பட வேண்டும்.

இவ்வளவு காரியங்களை ஒரு சமூகம் மொத்தமும் செய்தாக வேண்டும். அப்படி ஒருசேர அந்தச் சமூகம் இயங்கினால்தான், போதைப் பொருள் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டை ஆக்க முடியும்.

இதை நான் சொல்லும்போது உங்களுக்கு மலைப்பாக இருக்கலாம். ஒவ்வொருவருக்கும் இதில் ஒரு வேலைதான் இருக்கிறது. அந்த வேலையை ஒழுங்காகச் செய்தால் போதும். ஆகவே, நீங்கள் இதைத் தடுப்பதற்கான ஆலோசனைகளை இந்தக் கூட்டத்தில் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். ''போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு'' தேவையான அனைத்துக் கருத்துக்களையும் நீங்கள் இங்கே எடுத்துச் சொல்லுமாறு கேட்டு, என்னுடைய முன்னுரையை இந்த அளவோடு நிறைவு செய்கிறேன்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10.08.2022 அன்று ஆற்றிய நிறைவுரை

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பல நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கக்கூடிய ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அனைவரும் போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் முழு மூச்சோடு செயல்படப் போகிறீர்கள் என்பதை நினைக்கும்போது, கூட்டத்தின் துவக்கத்தில் இருந்த கவலை எனக்குக் கொஞ்சம் குறைந்திருக்கிறது, முழுவதும் குறையவில்லை, கொஞ்சம் குறைந்திருக்கிறது.

அந்த மன நிறைவுடன் சில ஆலோசனைகளை, சில அறிவுரைகளை நான் உங்களிடத்தில் எடுத்துவைக்க விரும்புகிறேன். நீங்கள் இந்தச் செய்தியை உங்களின்கீழ் உள்ள ஒவ்வொரு காவலருக்கும், உதவி ஆய்வாளருக்கும், ஆய்வாளருக்கும், DSPகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முதலில், ''எனது காவல் நிலைய எல்லையில் போதை மருந்து விற்பனையை முற்றிலுமாகத் தடை செய்து விட்டேன்'' என்று உங்கள் லிமிட்டில் உள்ள ஒவ்வொரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் உறுதி எடுத்துக்கொண்டால் போதும், அதுவே முதல் வெற்றி. போதைப் பொருள் நடமாட்டத்தைத் தடுத்துவிட முடியும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ''போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு'' D.S.P. பதவி உருவாக்கப்பட்டு, இந்தப் பிரிவு வலுப்படுத்தப்படும். அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

❖ அண்டை மாநிலங்களில் இருந்து கஞ்சா கடத்தி வரப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அதற்கு மாநில எல்லைப்புற மாவட்ட அதிகாரிகள் இதில் கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டும். அண்டை மாநிலக் காவல்துறையின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளலாம். அதே நேரத்தில் எல்லைப்புற சோதனைச் சாவடிகளை வலுப்படுத்திட வேண்டும்.

❖ தேனி, திண்டுக்கல் போன்ற மலையடிவாரப் பகுதிகள், மறைவான இடங்கள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில், இதரப் பயிர்களுக்கு இடையில் கஞ்சா பயிரிடுவதற்கு வாய்ப்புள்ள காரணத்தினால், மலையை ஒட்டி அமைந்திருக்கும் வேளாண் நிலங்களில் காவல்துறையினர், வருவாய்த்துறையினர் குறிப்பிட்ட கால இடைவெளியில் சோதனைகள் செய்ய வேண்டும்.

❖ சாதாரணப் பயணிகள் மூலமாகவும் கூரியர் வழியாகவும் போதைப் பொருள் வருவதாகச் சொல்லப்படுகிறது. பயணிகள் பேருந்துகள் கண்காணிக்கப்பட வேண்டும். கூரியர் நிறுவனங்களுக்கு இது குறித்த எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

❖ கடலோர மாவட்டங்களில் கண்காணிப்பை அதிகப்படுத்த வேண்டும்.

❖ ஆயத்தீர்வைத்துறை, வனத்துறை, வருவாய்த்துறை, புலனாய்வுத் துறை, சுங்கத்துறை, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, காவல்துறையினர் ஆகியோர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

❖ போதைப் பொருள் தயாரிப்பில் முக்கிய நபர்கள் (kingpins) மற்றும் கடத்தல்காரர்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களைச் சமூகத்திற்கு அம்பலப்படுத்தியாக வேண்டும்.

❖ ஒவ்வொரு மாவட்டத்திலும் போதைப் பொருள் விற்பனை அதிகம் நடைபெறும் இடங்களைப் பட்டியலிட்டு, அங்குக் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டும். Black-Spot Villages / Areas என வகைப்படுத்திக் கண்காணிக்க வேண்டும்.

❖ போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபடுவோர் வாட்ஸ்அப், டெலிகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் தங்களுக்கெனத் தனிக் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு, அதில் பள்ளி, மாணவர்களை இணைத்து விற்பனை செய்து வருவதாகவும் தகவல்கள் இருக்கின்றது. இதனை நுண்ணறிவுக் காவல்துறையினர் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும்.

❖ கல்வி நிறுவனங்களில் உள்ள விடுதிகளைக் கண்காணிக்க வேண்டும். அந்த நிறுவனங்களின் வார்டன்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு வழிகாட்டுதலை வழங்கிட வேண்டும்.

❖ போதைப் பொருள் தொடர்பான இரகசிய தகவல்களைப் பொதுமக்கள், மாணவர்கள் தெரிவிக்கக்கூடிய வகையில் தனியாக ஒரு கட்டணமில்லா தொலைப்பேசி (Toll Free) எண் வழங்கப்பட வேண்டும்.

❖ போதைப் பொருள் தடுப்பு சட்டத்தில் உள்ள பிரிவுகளின் அடிப்படையில் போதைப் பொருள் கடத்துபவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய கூட்டாளிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

போதைப் பொருள் குற்றங்களைச் செய்தவர்களுக்கு ஜாமீன் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வாய்ப்பு NDPS சட்டத்திலே (பிரிவு 37) கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அரசு வழக்கறிஞர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் உடனே ஜாமினில் செல்வதைத் தடுத்து நிறுத்துங்கள்.

அதேபோல் ''மீண்டும், மீண்டும் இந்தக் குற்றத்தைச் செய்யமாட்டார் என நீதிமன்றத்திற்குத் திருப்தியளிக்கக்கூடிய விதத்தில் தகுந்த காரணங்களைச் சொன்னால் மட்டுமே, இக்குற்றத்தைச் செய்தவருக்கு ஜாமீன்'' என்று இதே பிரிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே திரும்பத் திரும்பப் போதைப் பொருள் குற்றத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக இச்சட்டப்பிரிவைப் பயன்படுத்த நீதிமன்றங்களின் உதவியை நாடுங்கள்.

பள்ளிகள், கல்லூரிகள், சமூகக் கூடங்கள் உள்ளிட்ட இடங்களில் போதைப் பொருள் விற்பதற்கு எதிராக அதிகபட்சத் தண்டனை வழங்க இச்சட்டத்தின் 32B (d) பிரிவை முழுமையாகப் பயன்படுத்துங்கள். அதிலும் குறிப்பாக இந்தப் பிரிவில், "the fact that offence is committed in other place to which School children and students resort for educational, sports and Social activities" என்று இருக்கும் பிரிவு மிக முக்கியமானது என உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நான் நினைக்கிறேன். அந்தப் பிரிவை

நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள். இந்தச் சட்டத்தின்கீழ் உள்ள அதிகபட்ச சிறைத் தண்டனையை நிச்சயம் பெற்றுக் கொடுக்க முடியும்.

❖ தற்போது தமிழகத்தில் தென் மண்டலக் காவல்துறைத் தலைவர் திரு. அஸ்ரா கார்க் அவர்கள் சட்டம், ஒழுங்கு, குற்றச் செயல்களைத் தடுத்தல் மட்டுமின்றி, போதைப் பொருட்கள் தடுப்பிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். இவரைப் போல இதர மண்டலங்களில் உள்ள அதிகாரிகளும் உத்வேகத்துடன் பணியாற்ற வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். இதேபோல் பலரும் சிறப்பாகப் பணியாற்றி வந்தாலும், நான் எடுத்துக்காட்டிற்காக அதைக் குறிப்பிட்டுச் சொன்னேன். போதை நடமாட்டத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளில் காவல்துறையினர் ஈடுபடும்போது, மற்றவர்கள் போதைப் பொருள் பாதிப்புக் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களைச் செய்ய வேண்டும். போதைப் பொருட்களைப் பயன்படுத்தினால் என்ன மாதிரியான விளைவுகள் ஏற்படும் என்ற பிரச்சாரத்தைச் செய்ய வேண்டும்.

❖ போதையின் பாதையில் யாரும் செல்ல வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுங்கள்.

❖ நீங்கள் பாராட்டிச் சீராட்டி வளர்த்த உடம்பை நீங்களே ஏன் கெடுத்துக் கொள்கிறீர்கள்? தீமையை நீங்களே ஏன் விலை கொடுத்து வாங்குகிறீர்கள்? கெடுதலை நீங்களே ஏன் தேடிப் போகிறீர்கள்? என்று அவர்களிடம் கேளுங்கள்.

❖ போதை உங்கள் சிந்தனையை அழிக்கும்! உற்சாகத்தைக் கெடுக்கும்! வளர்ச்சியைத் தடுக்கும்! எதிர்காலத்தைப் பாழாக்கும்! நண்பர்களிடம் இருந்து உங்களைப் பிரிக்கும்! உறவினர்களைப் பகைக்கும்! மொத்தத்தில் உங்களையே சிதைக்கும்! என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.

❖ போதைக்குத் தெரிந்தது ஒன்றே ஒன்றுதான், அழித்தல்!

❖ அழிவுக்குத் துணை போகாதீர்கள்! என்று திரும்பத் திரும்பச் சொல்லுங்கள்.

❖ போதையுடன் கைக்குலுக்காதீர்கள், வாழ்க்கையே கைநழுவிப் போய்விடும் என அறிவுறுத்துங்கள்.

மீண்டும் மீண்டும் சொல்வது இதுதான், போதைப் பாதை அழிவுப்பாதை! அதில் யாரும் செல்லாதீர்கள். மற்றவர்களையும் செல்ல விடாதீர்கள். மற்ற அனைத்து வளர்ச்சியையும் இந்தப் போதை வளர்ச்சி கெடுத்துவிடும், அழித்துவிடும். அதனால்தான் இந்தப் பிரச்சினையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று உங்களை இந்தக் கூட்டத்திற்கு அழைத்திருக்கிறோம்.

தமிழகத்தின் முதலமைச்சராக சமூக மருத்துவனான தமிழ்நாட்டு எதிர்காலம் குறித்துச் சிந்தித்துச் செயலாற்றக் கூடியவன் நான். காவல்துறை அதிகாரிகளை அழைத்துப் பூட்டிய அறைக்குள் இதனைப் பேசுவதால் பயனில்லை.

காவல்துறை மட்டுமல்ல, அத்துறையுடன் சேர்ந்து மக்கள் அனைவரும் காவலர்களாக மாறி இந்தப் போதைப் பாதையை அடைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு ஒரு சில முக்கிய அறிவிப்புகளை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்.

❖ மதுவிலக்கு அமலாக்கப்பிரிவோடு போதைப் பொருள் நுண்ணறிவுத் தடுப்புப் பிரிவு இணைக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன். அதற்கு விரைவில் அரசாணை வழங்கப்படும்.

❖ NDPS வழக்குகளை விசாரிக்க, தற்போது 12 சிறப்பு நீதிமன்றங்கள் (Essential Commodities and NDPS Court) இருக்கின்றன. இனி இரு மாவட்டங்களுக்கு ஒரு சிறப்பு நீதிமன்றம் என முதற்கட்டமாக அமைக்கப்படும்.

❖ போதைப் பொருள் தடுப்பில் தகவல் தொழில்நுட்பம் முக்கியப் பங்காற்றுகிறது. ஆகவே, இப்பிரிவிற்குத் தனியாக ஒரு “சைபர் செல்” உருவாக்கப்படும்.

❖ போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுடன் இணைக்கப்படுவதால், மதுவிலக்குப் பிரிவில் உள்ள “மத்திய நுண்ணறிவுப் பிரிவு” மேலும் வலுப்படுத்தப்படும்.

இந்த ஆலோசனைகளை, அறிவுரைகளை, புதிய அறிவிப்புகளோடு, ஒரு எச்சரிக்கையையும் விடுக்க நான் விரும்புகிறேன்.

காவல்துறையில் உள்ளவர்கள் தவறு செய்யக்கூடாது என்று திரும்பத் திரும்ப நான் சொல்லி வருகிறேன். சாதாரணத் தவறுகளுக்கே துணைபோகக் கூடாது என்றால், நம்முடைய அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, ஒரு சமுதாயத்தையே சீரழிக்கும் போதைப் பொருள் நடமாட்டத்திற்கு எந்த விதத்திலும் துணைபோகக் கூடாது.

இதை ஏதோ நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. இவர் ‘சாஃப்ட் முதலமைச்சர்’ என்று யாரும் கருதிவிட வேண்டாம். நேர்மையானவர்களுக்குத்தான் நான் சாஃப்ட். தவறு செய்வோருக்கு, குறிப்பாகப் போதைப் பொருள் நடமாட்டத்திற்குத் துணை போவோருக்கு நான் சர்வாதிகாரியாக மாறுவேன். அதற்கான அதிகாரத்தை நான் எங்கும் தேடி அலைய வேண்டிய அவசியம் இல்லை. NDPS சட்டத்தில் உள்ள 32B (a) பிரிவை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பிரிவில் உள்ள, “the fact that the offender holds a public office and that he has taken advantage of that office in committing the offence” என்ற வாசகத்தைக் குறிப்பாக நினைவில் கொள்ளுங்கள்.

ஆனால், அப்படியொரு நிலைமைக்கு என்னையோ அல்லது உங்களையோ உங்களின்கீழ் உள்ள அதிகாரிகள் தள்ளி விடமாட்டார்கள், அப்படியொரு சூழ்நிலையை உருவாக்க மாட்டார்கள் என்று இன்னமும் நம்புகிறேன்.

நமக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு, போதைப் பொருள் அறவே கூடாது! அந்த இலக்கை நோக்கி அனைவரும் நடைபோடுவோம்.

போதைப் பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

நன்றி, வணக்கம்!

செங்கல்பட்டு மாவட்டத்தில்

ரூ.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.07.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.75 கோடி மதிப்பீட்டில், நூக்கம்பாளையம் மேம்பாலம், அரசன்கழனி ஏரி, மதுரப்பாக்கம் ஓடை, தெற்கு டி.எல்.எப். ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் வெள்ளத் தடுப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தி, வரும் பருவமழைக் காலங்களில் மக்களுக்கு மழை வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் அதிக அளவில் நீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதன்படி தமிழகமெங்கும் வெள்ளத் தடுப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

செம்மஞ்சேரி, டி.எல்.எப். வளாகம் ஆகிய பகுதிகள் கடந்த பருவமழையின்போது வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட அப்பகுதிகளுக்கு வெள்ளப் பாதிப்பிலிருந்து நிரந்தரத் தீர்வு காணும் வகையில், திட்டங்கள் தீட்டப்பட்டு வெள்ளத் தடுப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, சென்னை மாவட்டம் – சோழிங்கநல்லூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் – தாம்பரம் வட்டம், பெரும்பாக்கம், செம்மஞ்சேரியில் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள கால்வாய்க்கு இருபுறமும் ரூ.24.30 கோடி மதிப்பீட்டில் தாங்கு சுவர் கட்டும் பணியில், நூக்கம்பாளையம் மேம்பாலத்தில் நடைபெற்று வரும் வெள்ளத்தடுப்புப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது இவ்வெள்ளத் தடுப்புப் பணிகளை மழைக்காலத்திற்கு முன்பாக விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

பின்னர், செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டத்தில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் அரசன்கழனி வேலன்தாங்கல் ஏரி முதல் கழுவெளி வரை மூடுதளத்துடன் கூடிய பெருவடிகால் கால்வாய் கட்டும் பணியில், அரசன்கழனி ஏரியில் நடைபெற்றுவரும் வெள்ளத்தடுப்புப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டத்தில் ரூ.21.70 கோடி மதிப்பீட்டில் மதுரப்பாக்கம் ஓடையிலிருந்து டி.எல்.எப். வளாக சாலையில் 500 மீட்டர் வரை அவசரக்கால வெள்ளநீர் கடத்தும் பெருவடிகால் அமைக்கும் பணியில், மதுரப்பாக்கம் ஓடை, தெற்கு டி.எல்.எப். பகுதியில் நடைபெற்றுவரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, இப்பணிகளைத் தரமாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள வேண்டும் என்று அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இலங்கை மக்களுக்கு மூன்றாவது முறையாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல்

இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டில் சிக்கித்தவித்து இன்னலுறும் இலங்கை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தமிழக மக்களின் சார்பில் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். இதற்கான அனுமதிகளை ஒன்றிய அரசிடம் கோரி பெற்றார்கள்.

இதன் அடிப்படையில் இலங்கையில் உணவு, மருந்து போன்ற அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதைக் கருத்தில்கொண்டு 40 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசி, 500 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித்தீர்மானம் கொண்டு வந்தார்கள், இப்பணிக்காக ரூ.177 கோடியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள், மேலும், இத்தகைய பெரும் மனிதாபிமானப் பணியில் தமிழக மக்கள் அனைவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்பதற்காக இலங்கை மக்களுக்கான நிவாரணப் பணிக்குத் தேவையான நன்கொடைகளை மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அனைவரும் மனமுவந்து நிதியளிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் இப்பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கான பணி உடனடியாகத் தொடங்கப்பட்டுப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை மக்கள் பயன்படுத்தக் கூடிய அரிசி வகைகளும் கண்டறியப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 85 அரிசி ஆலைகளிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் பால் பவுடர், ஆவின் நிறுவனத்திடம் இருந்தும், மருந்துப் பொருட்கள், தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம் மூலமாகவும் கொள்முதல் செய்யப்பட்டன. இப்பணிகள் அனைத்தும், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையால் ஒருங்கிணைக்கப்பட்டு, 9,075 மெட்ரிக் டன் பொருட்கள் அடங்கிய முதல் கப்பலை 18.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை துறைமுகத்தில் இருந்து, இலங்கைக்கு TAN BINH 99 என்ற கப்பலில் அனுப்பி வைத்தார்கள். இதில் சிறப்பு நிகழ்வாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் மாதிரித் தொகுப்பு இலங்கைத் துணைத் தூதர் அவர்களிடம் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 22.06.2022 அன்று 15,000 மெட்ரிக் டன் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய இரண்டாவது கப்பலை (VTC SUN), மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்கள். அடுத்த கட்டமாக 23.07.2022 அன்று 16,595 மெட்ரிக் டன் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மூன்றாவது கப்பலை (VTC SUN) மாண்புமிகு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு தமிழக அமைச்சர்களும் அனுப்பி வைத்துள்ளார்கள்.

இவ்வாறு மூன்று கப்பல்களில் இதுவரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு 40,000 மெட்ரிக் டன் அரிசி, 500 மெட்ரிக் டன் பால் பவுடர் மற்றும் 102 மெட்ரிக் டன் உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்து பொருட்கள் இலங்கை மக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்காகக் கப்பல் போக்குவரத்துச் செலவு உட்பட ரூ.196.83 கோடியைத் தமிழக அரசு செலவிட்டுள்ளது. இத்தொகையில் ரூ.8.22 கோடி, தமிழக முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அளித்த பங்களிப்புகள் மூலமாகவும் எஞ்சியுள்ள ரூ.188.61 கோடி தமிழக அரசின் சொந்த நிதியில் இருந்தும் செலவிடப்பட்டுள்ளது. அனைவரும் பாராட்டியுள்ள இந்த நடவடிக்கையால் இலங்கையில் பொதுமக்களுக்கு ஆறுதல் கிடைத்துள்ளது. இலங்கையில் நிலவி வரும் சூழலை, தொடர்ந்து கண்காணித்து அந்த மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகள் கிடைத்திட அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

‘மனித நேயம்’

பிறர் துயர் கண்டு மனம் நோகும் வலிதான் அன்பு!
வெறுப்புணர்வை வெறுக்கும் அறமே மனிதநேயம்!

அண்டை நாட்டு மக்கள் அல்லலுறும் சூழலில் அன்பும் மனிதநேயமும் கொண்டு தமிழ்நாட்டு மக்கள் ஈந்த உதவிப் பொருட்களைச் சுமந்து மூன்றாவது கப்பல் இலங்கை புறப்பட்டது.

தமிழ்வழி நின்று துன்பம் துடைப்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைத்தளப் பதிவு (23.07.2022)

மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு

மேட்டூர் அணையிலிருந்து 05.08.2022 அன்று மாலை 8.00 மணி முதல் 1,80,000 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காவிரி / கொள்ளிட கரையோர மாவட்ட ஆட்சியர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.08.2022 அன்று காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை மேற்கொண்டார். மேலும், இம்மாவட்டங்களுக்கு விரைந்து சென்று உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், கண்காணிப்பு அலுவலர்களையும் அறிவுறுத்தியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, 05.08.2022 அன்று இரவு சென்னை எழிலகம் வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை வளாகத்திலுள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகை புரிந்து வெள்ள நிலைமை மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார். அப்போது, கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் வெள்ள நிலைமை குறித்தும், மழை விபரம் குறித்தும், காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவு, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்கள், நிலை நிறுத்தப்பட்டுள்ள மீட்புப் படைகள், நிவாரண நடவடிக்கைகள் ஆகியன குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூறினார்.

மேட்டூர், அமராவதி அணையிலிருந்து தொடர்ந்து அதிக அளவு உபரி நீர் வெளியேற்றப்படுவதால், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்களின் பாதுகாப்புக் கருதி, பொதுவான எச்சரிக்கை நடைமுறை (CAP - Common Alert Protocal) மூலம் 22.76 இலட்சம் செல்லிடப்பேசிகளுக்கு எச்சரிக்கைக் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

கன மழையின்போது தேடல், மீட்பு, நிவாரணப் பணிகளில் மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து ஈடுபடும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 குழுக்களும், நாமக்கல் மாவட்டத்தில் 1 குழுவும், ஆக மொத்தம் 66 வீரர்களைக் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப் படையின் 3 குழுக்கள் தயார் நிலையில் உள்ளனர். மேலும், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நாமக்கல், ஆகிய மாவட்டங்களுக்குத் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 118 வீரர்களைக் கொண்ட 3 குழுக்களும் நிலைநிறுத்தப்பட்டுள்ள விபரங்களை மாண்புமிகு முதலமைச்சர் கேட்டறிந்தார்.

மேலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து 49 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 10 மாவட்டங்களில் உள்ள இந்த 49 முகாம்களில் 1,327 குடும்பங்களைச் சேர்ந்த 4,035 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கந்தன் பட்டறை நிவாரண முகாம், நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையம் வட்டம், பள்ளிப்பாளையம் நகராட்சித் திருமண மண்டபம் நிவாரண முகாம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மகாராஜா மண்டபம், பிச்சாண்டார் கோயில் நிவாரண முகாம் ஆகிய நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடம் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசி, அவர்களுக்கு அங்கு போதுமான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டறிந்தார். மேலும், ஈரோடு, நாமக்கல், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர்களிடமும் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு கள நிலவரம் குறித்துக் கேட்டறிந்து, உரிய நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். ❖

ரூ.323.04 கோடியில் 6,35,947 மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ரூ.323.04 கோடி செலவில் 11ஆம் வகுப்புப் பயின்ற 6,35,947 மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கி விழாவைத் தொடங்கிவைத்தார்.

மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் சிரமமின்றிப் பள்ளிக்குச் செல்லும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கு, தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் தமிழ்நாடு அரசால் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.07.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் சார்பில் 2021–2022ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்புப் பயின்ற 6,35,947 மாணவர்களுக்கு ரூ.323.04 கோடி செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

பள்ளி மாணவர்களுக்கு மனநலம், உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வுப் பயிற்சி முகாம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.07.2022 அன்று சென்னை, அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் “பள்ளி மாணவர்களுக்கான மனநலம், உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு” தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் பள்ளிக் கூடங்களுக்குச் செல்வதைப் போன்ற உற்சாகம் வேறு நிகழ்ச்சிகளில் நிச்சயமாக அமைவது இல்லை. நான் நீண்ட நேரம் உங்களிடத்திலே உரையாற்ற முடியாத சூழ்நிலையில் நின்று கொண்டிருக்கிறேன். அதற்கு என்ன காரணம் என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அண்மையிலே கொரோனா என்ற தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு அதிலிருந்து ஓரளவுக்கு மீண்டு, இரண்டு மூன்று நாட்களாக சில நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் அதிலும் குறிப்பாகச் சென்னையில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளுக்கு மாத்திரம் நான் சென்று கொண்டிருக்கிறேன். நான் பேசுகின்ற பேச்சிலேயே உங்களுக்குத் தெரியும், தொண்டை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. தொண்டை பாதிக்கப்பட்டிருந்தாலும், தொண்டில் பாதிப்பு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் என்னுடைய பணியை நிறைவேற்ற முன்வந்திருக்கிறேன் தவிர வேறு அல்ல.

குழந்தையின் புன்சிரிப்புத் தரும் புத்துணர்ச்சியும் பிள்ளைச் செல்வங்களின் பேச்சுத் தரும் உற்சாகமும், மருந்து மாத்திரைகளை விட வலிமையானவை.

கடந்த வாரம் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்ற நான், அதிலிருந்து சிறிது குணமடைந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தாலும், உடல் சோர்வு என்பது சற்று இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் உங்களையெல்லாம் பார்க்கும்போது அதெல்லாம் பறந்து போய்விடுகிறது, முழுநலம் பெற்றதாக நான் உணர்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகக் குறிப்பாக நம்முடைய மாணவச் செல்வங்கள் காலையிலேயே எல்லோரும் சீக்கிரமாகவே புறப்பட்டு இங்கே வந்திருப்பீர்கள். அப்படி வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்களைப் பார்த்து நான் கேட்கிற ஒரே கேள்வி, நீங்கள் எல்லாம் காலை உணவு சாப்பிட்டீர்களா? அங்கிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களைப் பார்த்துக் கேட்கிறேன், காலை உணவு சாப்பிடாதவர்கள் யாராவது இருந்தால் கையை உயர்த்திக் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இந்த மேடைக்கு நான் வருவதற்கு முன்னால் ஒரு வகுப்பறைக்குச் சென்று அங்கிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களோடு கலந்து பேசினேன். ஒரு ஐந்தாறு மாணவியர்களிடத்தில் நான் சில கேள்விகளைக் கேட்டேன். அப்படிக் கேட்கிறபோது, நீங்கள் எந்தப் பகுதியிலிருந்து வருகிறீர்கள்? எப்படி வருகிறீர்கள், காலையில் உணவு சாப்பிட்டீர்களா? என்று 5 பேர்களிடத்தில் கேட்டேன். 5 பேர்களில் 3 பேர் காலையில் சாப்பிடாமல் வந்தார்கள் என்ற செய்தியைச் சொன்னார்கள். இதுதான் உண்மை. இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நான் பள்ளிக்கூடத்தில் படிக்கின்றபோது, பலமுறை சாப்பிடாமல் பள்ளிக்குப் போயிருக்கிறேன். ஏனென்றால், பஸ் பிடிக்க வேண்டுமென்பதால், அது ஒரு சூழ்நிலை. இது நகரப்பகுதி, ஆனால், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மாணவச் செல்வங்களை எண்ணிப் பார்க்கிறபோது, எந்த அளவுக்கு அவர்கள் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளமுடியும்.

ஏன் இந்தக் கேள்வியை நான் கேட்டேன் என்றால், பெரும்பாலான பிள்ளைகள் காலையில் புறப்படும்போது சாப்பிடாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதுவும் நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன், காலையில் மட்டும் சாப்பிடாமல் இருக்கவே கூடாது.

டாக்டர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், காலையில்தான் அதிகமாகச் சாப்பிடவேண்டும். மதியம் அதைவிடக் கொஞ்சம் குறைவாகவும், இரவில் இன்னும் கொஞ்சம் குறைவாகவும் சாப்பிட வேண்டும் என்று டாக்டருடைய அறிவுரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு எல்லாம் எப்படி நடக்கிறது என்றால், காலையில் குறைவாகவும், இரவு நேரத்தில் அதிகமாகவும், வழக்கமாகச் சாப்பிடுகின்ற வழக்கத்தை வைத்திருக்கிறார்கள். அது மாதிரி இருக்கக் கூடாது. அதிலும் கட்டாயமாக, உறுதியாகக் காலை உணவை யாரும் தவறவிடக் கூடாது.

அதிகாலையில் அவசர அவசரமாக நீங்கள் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பி வரவேண்டிய சூழல் இருப்பதை மனதில் வைத்து அதிலும் குறிப்பாக, 1ஆவது முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் அரசுப் பள்ளிப் பிள்ளைகளுக்குக் காலைச் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை நம்முடைய தமிழ்நாடு அரசு தொடங்கப் போகிறது.

அதற்கான அரசாணையில் நேற்றுதான் நான் கையெழுத்துப் போட்டு வந்திருக்கிறேன். அந்த மகிழ்ச்சியான செய்தியை உங்கள் மூலமாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட இயக்கத்தின் தாய்க் கட்சியான நீதிக்கட்சித் தலைவராக இருந்த சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில்தான் முதன்முதலாக மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். அதுவும் ஆயிரம் விளக்கில்தான் தொடங்கப்பட்டிருக்கிறது. என்னை முதன்முதலாகத் தேர்ந்தெடுத்த தொகுதி ஆயிரம் விளக்குத் தொகுதிதான்.

வெள்ளுடை வேந்தர் தியாகராயர், பெருந்தலைவர் காமராசர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்ட இந்த திட்டமானது இன்றைய அரசால் அடுத்த வளர்ச்சியை அடையப் போகின்றது. மாணவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியை நாம் வழங்கப் போகிறோம். மாணவர்களாகிய நீங்கள் தன்னம்பிக்கையை முதலில் பெற்றாக வேண்டும். இந்தத் தன்னம்பிக்கை மட்டும் வந்துவிட்டால் போதும்! படிப்பு தானாகவே வந்துவிடும். அத்தகைய தன்னம்பிக்கையை ஊட்டுவதற்காகத்தான் இந்தப் பயிற்சி முகாம் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மன நலன், உடல் நலன் ஆகிய இரண்டும் சரியாக இருந்தால் அனைத்து நலன்களும் சிறப்பாக இருக்கும். எப்போதும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும். சோர்வாக இருக்கக் கூடாது. சோம்பேறித்தனம்தான் வளர்ச்சிக்கு மிகப்பெரிய தடை! எதையும் நாளைக்குப் பார்த்துக்கலாம், நாளைக்கு படிச்சிக்கலாம், நாளைக்கு எழுதிக்கலாம் என்று தள்ளிப் போடாதீங்க. வாழ்வில் எதையும் சுறுசுறுப்பாக எதிர்கொள்ளக்கூடிய அந்த உணர்வு உங்களுக்கு வந்தாக வேண்டும். அதற்கு உங்கள் உடல் நலத்தை நன்றாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும், பார்த்துக் கொள்ளவேண்டும்.

நல்ல உடற்பயிற்சியும், நல்ல எண்ணங்களும்தான் இதற்கு அடிப்படையாக அமையும். மிகச் சிறப்பான பள்ளி உங்களுக்கு அமைந்துள்ளது. இந்தப் பள்ளிக்கு ஒரு பெரிய பாரம்பரியம் இருக்கிறது. இந்தப் பள்ளி என்பது பெருந்தலைவர் காமராசர் அவர்களால் 1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளி என்பது பாராட்டுக்குரிய ஒன்று. அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆக, இந்தப் பள்ளியில் ஏறக்குறைய நாலாயிரம் பிள்ளைகள் படிக்கிறார்கள்.

அட்மிஷன் முதல் நாள் அன்றே ஹவுஸ் புல் போடக்கூடிய பள்ளியாக இந்த பள்ளி விளங்கிக் கொண்டு இருக்கிறது என்பது மிகச் சிறப்புக்குரிய ஒன்று. அப்படிப்பட்ட பெயர் பெற்ற பள்ளிதான் இந்த அசோக்நகர் பள்ளி. திறமையான ஆசிரியர்கள் நிரம்ப பேர் இருக்கிறார்கள். இதைவிட உங்களுக்கு என்ன வேண்டும்? என்ன கவலை இருக்கிறது? படிப்பைத் தவிர மற்ற வீண் சிந்தனைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டாம்.

நன்றாகச் சாப்பிடுங்கள், நன்றாக உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள், நன்றாகப் படியுங்கள், இந்த மூன்றும் தான் நான் உங்களுக்குச் சொல்வது. இப்படிச் சொல்கிறேன் என்றால் நான் முதலமைச்சர் என்ற அதிகாரத்தில் இருந்து சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். உங்கள் அப்பாவாக, அம்மாவாக உங்களுடைய பெற்றோரில் ஒருவனாக இருந்து இந்த வேண்டுகோளை இங்கே இருக்கக்கூடிய பிள்ளைகளுக்கு நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்கள், பாடங்கள் நடத்தும் கூடங்களாக மட்டுமில்லாமல் அறிவு, ஆற்றல், மனம், உடல் ஆகிய அனைத்தையும் வளப்படுத்த வேண்டும். பாதி பெற்றோர்களாக, ஆசிரியர்களும், பாதி ஆசிரியர்களாக, பெற்றோர்களும் செயல்படவேண்டும். கல்விக் கூடங்கள் மதிப்பெண் கூடங்களாக இல்லாமல், மதிப்புயர் கூடங்களாக அது மாறவேண்டும். எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கிய திராவிட மாடல் அரசு நடந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் எல்லோரும் எல்லாவற்றையும் அடைவதற்கு அனைவரும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றாகவேண்டும்.

எனது மாணவக் கண்மணிகள் முகத்தில் நான் உற்சாகத்தைப் பார்க்கிறேன். மகிழ்ச்சியைப் பார்க்கிறேன். மலர்ச்சியைப் பார்க்கிறேன். வானம் தொட்டு விடும் தூரம்தான். உங்களால் முடியும், உங்களால் மட்டுமே முடியும். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள்.

முதலமைச்சரின் அழைப்பு மையத்தில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.07.2022 அன்று சென்னை, சோழிங்கநல்லூரில் அமைந்துள்ள முதலமைச்சரின் அழைப்பு மையத்தினைப் (CM Help Line Call Centre) பார்வையிட்டு திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொதுமக்களின் தொலைப்பேசி அழைப்புகளை ஏற்று அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் முதலமைச்சரின் தனிப்பிரிவு, முதலமைச்சரின் உதவி மையம், ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு "முதல்வரின் முகவரி" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்த முறை மாற்றம் செய்யப்பட்டு அனைத்து மனுக்களும், ஒருங்கிணைந்த குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பில் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், முக்கிய மாற்றமாக, முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் மட்டுமில்லாது இணையதளம், தபால், சமூக வலைத்தளம், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பெறப்படும் திங்கள் தினக் கோரிக்கைகள், மக்கள் தொடர்பு முகாம்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என அனைத்து நிலைகளிலும் பெறப்படும் மனுக்களும் ஒருசேர இம்முறையில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இவ்வாறாக, மாநிலத்தில் அனைத்துத் தரப்பிலும் இருந்து பெறப்படும் மனுக்கள் ஒரே குடையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. 07.05.2021 முதல் இதுநாள் வரை 26,43,654 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சோழிங்கநல்லூரில் அமைந்துள்ள முதலமைச்சரின் அழைப்பு மையத்தினைப் பார்வையிட்டு, பொதுமக்களின் மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, வீட்டுமனைப் பட்டா பெற்ற அடையாறு பகுதியைச் சேர்ந்த பயனாளியிடமும், முதியோர் ஓய்வூதியம் பெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிடமும் உரையாடினார். அப்போது அப்பயனாளிகள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றப்பட்டதற்காக நன்றி தெரிவித்தனர். தொடர்ந்து, குடும்ப அட்டை இடமாறுதல் கோரிய அம்பத்தூர், அயப்பாக்கத்தைச் சேர்ந்த பயனாளியிடம் பேசிய மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் அவருக்கு உடனடியாகக் குடும்ப அட்டை மாறுதல் செய்து வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், திருப்பூர் வடக்கு வட்டாட்சியரைத் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் முகவரித் துறையிலிருந்து பெறப்பட்ட மனுக்கள்மீது விரைவாக நடவடிக்கை எடுத்துத் தீர்வு கண்டதற்காகப் பாராட்டினார்.

தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல உதவி ஆணையரைத் தொலைப்பேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெறப்பட்ட மனுக்கள்மீது தாமதமின்றி விரைந்து நடவடிக்கை எடுத்துத் தீர்வு காணவேண்டும் என்று உத்தரவிட்டார்.

மேலும், முதலமைச்சரின் அழைப்பு மையத்தில் அதிக எண்ணிக்கையிலான அழைப்புகளை ஏற்று, கோரிக்கைகளை நிவர்த்தி செய்த பணியாளர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ள மனுக்கள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது பெறப்படும் மனுக்கள்மீதும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு, முதலமைச்சரின் முகவரித் துறையில் பெறப்படும் அனைத்து மனுக்களும் கோரிக்கைகளின் தன்மைக்கேற்பப் பகுத்தாய்வு செய்து அம்மனுக்களை விரைவாகவும், உரிய முறையிலும் தீர்வுக் காணவேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

“முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் அறிக்கை (27.07.2022)

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களுக்கான கோப்புகளில் கையெழுத்திட்ட போதிலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கான கோப்பில் கையெழுத்திட்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

சமூக நீதியை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டம்தான் இந்தக் காலை உணவுத் திட்டம். வயிற்றுக்கு நிறைவும், செவிக்கு அறிவும் ஊட்டுபவையாகப் பள்ளிச் சாலைகளை மாற்றும் முயற்சி இது!

இலட்சக்கணக்கான மாணவக் கண்மணிகளின் மனம் குளிர நான் காரணம் ஆகிறேன் என்பதே எனக்கு ஏற்பட்டுள்ள பெருமகிழ்ச்சி!

திராவிட இயக்கக் கொள்கைகளில் உணர்வுப்பூர்வமாகத் தோய்ந்துபோன எனக்கு, ஏழைக் குழந்தைகளின் பள்ளிப் படிப்பை ஊக்குவிக்கும் இந்தத் திட்டம் ஒரு கனவுத் திட்டம்! முதலமைச்சராகப் பெருமிதம் தரும் திட்டம்!

மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள், மலைப் பகுதிகள் எனத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் முதற்கட்டமாக இந்தத் திட்டம் தொடங்கப்படுகிறது. தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்குச் சமைப்பதில் எடுத்துக் கொள்கிற சிரத்தையோடு, தங்கள் அன்பைக் கொட்டி, தூய்மையுடன் உணவைப் பரிமாற, களப்பணியாளர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம், தனது நோக்கத்தில் மகத்தான வெற்றி அடைவதை மக்கள் பிரதிநிதிகளும். பொதுமக்களும் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டி உறுதிப்படுத்த வேண்டும்.

வாய்ப்பு மறுக்கப்பட்ட கோடானுகோடி மக்களுக்குக் கல்வி வாய்ப்பை உருவாக்கித் தருவதும், கல்வியைப் பரவலாக்குவதன் மூலம் அதிகாரத்தில் அடித்தட்டு மக்களை அமர வைப்பதும் திராவிட இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகள். அந்தக் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியைத் திராவிட இயக்கம் கண்டுள்ளது என்பது தமிழ்நாடு பெருமைப்படத்தக்க ஒன்று!

பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்குவது, கற்றலை இனிமையாக்குவது என்ற நோக்கத்தில் “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதிலும், ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கையில் மகத்தான மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதிலும் சந்தேகம் இல்லை. இந்த முன்னோடியான திட்டத்தின் வெற்றி நாட்டையே திரும்பிப் பார்க்க வைக்கும். பிற மாநிலங்களிலும் திராவிட மாடல் ஆட்சியின் இந்தத் திட்டம் பின்பற்றப்படும் என்பதிலும் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

செஸ் ஒலிம்பியாட்
இந்தியாவில் நடைபெறும் உலகளாவிய பண்பாட்டுத் திருவிழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 28.07.2022 அன்று
சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில்
நடைபெற்ற 44ஆவது சர்வதேசச் சதுரங்கப் போட்டி
தொடக்க விழாவில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

Today is a day of great pride for India. International Chess Olympiad has never happened in India before. Hosting the Chess Olympiad for the first time in India is a big honour for us. We are further delighted that Tamil Nadu has got this honour.

இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்த நேரு உள்விளையாட்டு அரங்கத்துக்கு இன்றைய தினம் பன்னாட்டு அங்கீகாரம் கிடைக்கும் வகையில், இந்த அரங்கில் தொடக்கவிழாவானது மிக எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

Our Hon'ble Prime Minister himself has come to inaugurate this historic event, for he knows this is a proud moment for India. I welcome him both as the Chief Minister of Tamil Nadu and in my personal capacity.

Hon'ble Prime Minister!

We all know you are very fond of Chess. During your tenure as the Chief Minister of Gujarat, you conducted a Grand Chess Festival with more than 20 thousand players.

When the Bhutan Royal Family visited India, you presented a Chess Set to the Prince of Bhutan.

It is very apt that such a supporter of Chess Game has come today to inaugurate the 44th Chess Olympiad.

இந்த விழாவிற்கான அழைப்பிதழுடன் டெல்லி சென்று நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து நேரில் அழைக்கலாம் என்று நான் திட்டமிட்டு இருந்தேன். ஆனால் இடையில் எனக்கு ஏற்பட்ட கொரோனா தொற்றுக் காரணமாக நேரில் செல்ல இயலாத ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த என்னை நலம் விசாரிப்பதற்காக மாண்புமிகு பிரதமர் அவர்கள் தொடர்பு கொண்டார்கள். என்னை நலம் விசாரித்த அவர்களிடத்தில், எனது நிலையை நான் விளக்கினேன். அவர் பெருந்தன்மையோடு சொன்னார் 'நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள், நான் நிச்சயம் கலந்து கொள்வேன், இந்த விழாவானது இந்தியாவுக்கே பெருமை தரக்கூடிய விழா' என்று பிரதமர் அவர்கள்

குறிப்பிட்டார்கள். அந்த வகையில் மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இங்கே வருகை புரிந்திருக்கிறார்கள்.

Your presence has enhanced the magnitude of this function and I thank you for making it.

I convey my heart-felt thanks to Hon'ble Union Sports Minister Anurag Thakur and other officials for providing all help and support to conduct this event in Tamil Nadu.

44ஆவது பன்னாட்டு ஒலிம்பியாட் போட்டி என்பது ரஷ்ய நாட்டில்தான் நடப்பதாக முதலில் சொல்லப்பட்டது. கொரோனா மற்றும் சில பிரச்சினைகள் காரணமாக, ரஷ்யாவில் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

வேறு எந்த நாட்டில் நடைபெறலாம் என்பதற்கான ஆலோசனைகள் நடந்ததை அறிந்து, இந்தியாவில் நடக்கும் வாய்ப்பு வருமானால், தமிழ்நாட்டில் நடத்தும் வாய்ப்பை நாம் பெற வேண்டும் என்று அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டேன்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இது பற்றி நமக்குத் தகவல்கள் கிடைத்தன. கடந்த மார்ச் 16ஆம் நாள் இதற்கான முறையான அறிவிப்பை நான் வெளியிட்டேன். இந்த விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக 18 துணைக் குழுக்களைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியது.

இது போன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குக் குறைந்தது 18 மாதங்களாகும் என்பார்கள். ஆனால் நான் பெருமையோடு சொல்கிறேன், நான்கே மாதங்களில் பன்னாட்டுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செய்திருக்கிறது. இதற்குக் காரணமான மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் அவர்களையும், விளையாட்டுத்துறையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும், இதற்குத் துணைநின்ற அனைத்துத் துறை அதிகாரிகளையும் நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

44ஆவது பன்னாட்டுச் சதுரங்க ஒலிம்பியாட் போட்டி என்பது உலக அளவில் தமிழ்நாட்டின்மீது கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியாக இன்று துவங்கியுள்ளது. இப்போட்டியின் மூலமாகத் தமிழ்நாட்டின் விளையாட்டுத் துறை மட்டுமல்ல, சுற்றுலாத் துறையும், தொழில் துறையும் மிகப்பெரிய வளர்ச்சியை அடைய இருக்கிறது. இன்னும் சொன்னால், தமிழ்நாட்டினுடைய மதிப்பும், தமிழ்நாடு அரசினுடைய மதிப்பும் பெருமளவு இன்று முதல் மேலும் மேலும் உயர்கிறது. இந்த உயர்வு என்பது மிகச் சாதாரணமாகக் கிடைத்து விடுவது அல்ல. சரியான திட்டமிடல், கடின உழைப்பு, அதனுடைய விளைவே இந்த உயர்வு.

இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாகவும், ஆசியா கண்டத்தில் மூன்றாவது முறையாகவும் இந்த செஸ் போட்டிகள் நடக்க இருக்கின்றன.

கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே இந்தியத் துணைக்கண்டத்தில் விளையாடப்பட்டு வந்த சதுரங்க விளையாட்டுதான், இன்று உலகம் முழுக்கவும் செஸ் என்ற பெயரால் பரவி இருக்கிறது. சில சில மாறுதல்களுடன் உலகின் பல்வேறு நாடுகளில் சதுரங்கம் விளையாடப்பட்டு வருகிறது.

தொடக்கவிழா இங்கு நடைபெற்றாலும், போட்டிகள் முழுமையாக, இயற்கை எழில் கொஞ்சும் மாமல்லபுரத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாட்டைத் தமிழ்நாடு அரசு செய்திருக்கிறது.

மாமல்லபுரம் இந்தியக் கட்டடக்கலையின் அருங்காட்சியகம். அதற்குப் பக்கத்தில்தான் சதுரங்கப்பட்டினம் என்ற கடலோரப் பகுதி இருக்கிறது. சென்னைப் பட்டனத்தை மெட்ராஸ் என்று அழைத்ததைப் போல சதுரங்கப்பட்டனத்தை சத்ராஸ் என்று அழைத்தார்கள். மன்னர் காலத்தில் இருந்து புகழ்பெற்ற ஊர் அந்த ஊர். இன்றைக்கு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் அந்த ஊர் கோட்டை இருக்கிறது.

அத்தகைய சதுரங்கப்பட்டனத்துக்கு அருகில்தான் உலகப்புகழ் பெற்ற சதுரங்கப் போட்டி நடக்க இருக்கிறது.

- 1961ஆம் ஆண்டு உலக செஸ் சாம்பியனாகப் புகழ் பெற்ற மானுவல் ஆரோன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பது நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய மிகப்பெரிய பெருமை ஆகும். இந்தியாவில் செஸ் விளையாட்டை முன்னோக்கி நகர்த்தி, பல்வேறு திறமையாளர்களுக்கு ஊக்கமளித்ததும் மானுவல் ஆரோன்தான்.
- 1972ஆம் ஆண்டே சென்னையில் இருந்த சோவியத் கலாச்சார மையத்தில் செஸ் க்ளப் ஒன்றினை உருவாக்கியவர் ஆரோன். செஸ் விளையாட்டில் உலகப்புகழ் பெற்ற வீரர்களை உருவாக்கிய சோவியத் நாடே, ஆரோனின் ஆலோசனையைப் பெற்றுத்தான் செயல்பட்டது. தமிழ்நாடு செஸ் அசோசியேஷனை உருவாக்கியவரும் இவர்தான்.

that TN excels in this game. Chennai can be rightly called the Chess Capital of India. The Government of Tamil Nadu immediately allotted 102 crore rupees to host this Chess Olympiad event. Also, we are more than happy to bear all the expenses of our Indian players.

பள்ளி மாணவர்களுக்கு செஸ் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.1 கோடி நிதியை பள்ளிக்கல்வித் துறை ஒதுக்கீடு செய்திருக்கிறது.

We also designed the mascot as a knight dressed in the traditional Tamil attire, saying Vanakkam. We named him Thambi. The term Thambi is a symbol of brotherhood. To indicate that we are all one fraternity.

The iconic mass leader of Tamil Nadu “Perarignar Anna” used to fondly call everyone as ‘Thambi”. This mascot’s name is in honour of such an endearing term.

- உலகக் கிராண்ட் மாஸ்டராகப் புகழ் பெற்ற விஸ்வநாதன் ஆனந்த் அவர்களைப் பற்றி உங்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை.
- 1988ஆம் ஆண்டு தனது 19ஆவது வயதில் உலகப் புகழைப் பெற்றவர் ஆனந்த் அவர்கள். இன்று வரை உலக சதுரங்க ஆட்டத்தில் வலிமையான வீரராக அவர் விளங்கிக் கொண்டு இருக்கிறார்.
- 2001ஆம் ஆண்டு பெண் கிராண்ட் மாஸ்டராக பட்டம் வென்றவர் விஜயலட்சுமி சுப்பராமன்.
- 2018ஆம் ஆண்டு மிக இளம் வயதில் கிராண்ட் மாஸ்டராக உயர்ந்தார் பிரக்ஞானந்தா.
- Out of 73 Grand Masters in India, 26 are from Tamil Nadu. It means 36% of Indian Grand Masters are from Tamil Nadu. This is a game of intelligence and Strategy. And I am proud

அதற்கான சிறப்புமிகுந்த விளம்பரப் பாடலை தமிழ்நாட்டில் பிறந்து, உலகளாவிய இசை உலகத்தின் புகழைத் தனது இளமைக் காலத்திலேயே பெற்ற என்னுடைய அருமைச் சகோதரர் திரு. ஏ.ஆர்.ரகுமான் அவர்கள் இசை அமைத்துக் கொடுத்தார்.

இப்படி செஸ் ஒலிம்பியாட் என்பது விளையாட்டுப் போட்டியாக மட்டுமல்ல, விளையாட்டு விழாவாக மட்டுமல்ல, இந்தியாவில் நடைபெறும் உலகளாவிய பண்பாட்டுத் திருவிழாவைப்போல் ஒரு சகோதரத்துவ மனப்பான்மையுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத்தகைய விழாவைத் தொடங்கி வைக்க வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன், என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது போன்ற வாய்ப்புகளைத் தொடர்ந்து நீங்கள் தமிழகத்துக்குத் தாருங்கள் என்றும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஓர் அரசன், ஓர் அரசி, இரு அமைச்சர்கள், இரு குதிரைகள், இரு கோட்டைகள், எட்டுச் சிப்பாய்கள் என கருப்பு, வெள்ளை இராணுவ மைதானமாகவே காட்சி அளிப்பது சதுரங்கம்.

கீழடியைப் பற்றி நான் அதிகம் விளக்க வேண்டியது இல்லை. பல்லாயிரம் ஆண்டுப் பழமையைக் கொண்ட தமிழினம் வாழ்ந்த அடையாளம் கொண்ட பகுதியாக கீழடி நமக்கு வரலாறு சொல்லிக்கொண்டு இருக்கிறது.

கீழடியில் ஏராளமான பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அங்கு இரண்டு வகையான ஆட்டக்காய்கள் கிடைத்துள்ளன. தந்தத்தினால் ஆன காய்கள் இவை. இவ்வகையான பொருட்கள், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். இவை அனைத்தும் சுடுமண்ணால் சுடப்பட்டு பெரும்பாலும் கருப்பு நிறம் கொண்டவையாக உள்ளன. குழந்தைகள் விளையாட்டில் பயன்படுத்தப்படும் சில்லுகள் கருப்பு சிவப்பு கொண்டவையாக உள்ளன.

போரில் யானையும் உண்டு, குதிரையும் உண்டு.

கோட்டையும் உண்டு வீரர்களும் உண்டு.

அரசனும் உண்டு, அரசியும் உண்டு.

போர் மரபுக்கும் தமிழர்களுக்கும் தொடர்பு இருப்பதை கீழடி நமக்குச் சொல்கிறது.

‘ஆனைக்குப்பு’ என்று சதுரங்க விளையாட்டுக்குத் தமிழ் இலக்கியத்தில் பெயர் இருந்துள்ளது. ‘ஆனைக்குப்பு ஆடுவோரைப் போலவே’ என்று நாலாயிர திவ்ய பிரபந்தம் சொல்கிறது.

அந்தளவுக்குப் பல்லாயிரம் ஆண்டு தொடர்பு, சதுரங்க விளையாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் உண்டு. அறிவுக்கூர்மையும், வியூகமும் கொண்ட விளையாட்டு இது. அத்தகைய உலகளாவிய அறிவு விளையாட்டு தொடங்குகிறது.

அறிவுதான் இறுதிக்காலம் வரைக் காப்பாற்றும் கருவி என்று ஈராயிரம் ஆண்டுக்கு முன்பே சொன்ன வள்ளுவர் மண்ணில் உலகத்தின் அறிவுப் போட்டியானது தொடங்குகிறது.

ஒரு காலத்தில், அரசர்களின் விளையாட்டு என்று சொல்லப்பட்டது. இன்று அது மக்கள் அனைவரின் விளையாட்டாக மாறிவிட்டது. மூளை சார்ந்த போர்க்கலையாகச் சொல்லப்படும் விளையாட்டு இது.

அதிர்ஷ்டத்தை நம்பிய விளையாட்டு அல்ல, அறிவை நம்பிய விளையாட்டு!

இந்த விளையாட்டினைத் தமிழகத்தில், இந்தியாவில், மேலும் பரவச்செய்ய, இந்தப் போட்டிகள் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

இன்றைய மாணவ சமுதாயத்திற்குக் கல்வியோடு விளையாட்டையும் கலந்து அளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக அறிவுத்திறனைப் பெருக்கும் சதுரங்கத்தின் பங்கும் இடம்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு இந்த ஒலிம்பியாட் ஒரு சிறப்பான துவக்கப்புள்ளியாக இருக்கும் என நம்புகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் என் நன்றிகள்! வணக்கங்கள்!

I welcome each and every player from around the world to Tamil Nadu. Thank you all for coming. It is indeed an honour for Tamil Nadu and India to host you all.

I once again thank our Hon’ble Prime Minister and with this few words, I conclude my speech.

நன்றி! வணக்கம்!

படமும் / செய்தியும்

செஸ் ஒலிம்பியாட் - 2022 போட்டி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டுக் கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.08.2022 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற 44ஆவது செஸ் ஒலிம்பியாட்–2022 போட்டியைப் பார்வையிட்டு, விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 31.07.2022 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற 44ஆவது செஸ் ஒலிம்பியாட்–2022 போட்டியைப் பார்வையிட்டு விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

ரூ. 25 கோடி மதிப்பீட்டில் ‘ஒலிம்பிக் தங்க வேட்டை’ திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
09.08.2022 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற
44ஆவது சர்வதேசச் சதுரங்கப் போட்டி நிறைவு விழாவில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Ancient Tamil poet கணியன் பூங்குன்றனார் in his 2,000 years old Sangam Era poem has said “யாதும் ஊரே யாவரும் கேளிர்”! which means, “the whole world is my home and everyone is my kith and kin”.

With this spirit of universal brotherhood, Tamil Nadu Government has organised this prestigious event.

(ஈராயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த சங்க இலக்கியப் பாடலில் கணியன் பூங்குன்றனார், “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்றார். அத்தகைய உலகளாவிய உடன்பிறப்புணர்வோடுதான் தமிழ்நாடு அரசு இந்தப் பெருமைமிகு போட்டியை நடத்தியுள்ளது.)

அனைவரும் மெச்சத்தக்க வகையில் **44**ஆவது பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை மிகக் குறுகிய காலத்தில் தமிழ்நாடு அரசு வெகு சிறப்பாக நடத்தி முடித்துள்ளது.



கடந்த 28ஆம் தேதி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், இதே நேரு உள்விளையாட்டு அரங்கில் மாபெரும் கண்கவர் கலை நிகழ்ச்சிகளோடு செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

அப்போது நான் பேசும்போது, ''இந்திய நாடு இதுவரை அடையாத ஒரு பெரும்புகழை அடையும் நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. பன்னாட்டுச் சதுரங்க ஒலிம்பியாட் போட்டியானது, முதன்முதலாக இந்தியாவில் நடக்கிறது என்பது நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய பெருமை! அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நடைபெறுவது அதைவிட மிகப்பெரிய பெருமை!'' என்று நான் அன்றைக்குச் சொன்னேன்.

''இதன் மூலமாக இந்தியாவின் புகழ், தமிழ்நாட்டின் புகழ் உலகம் முழுக்க பரவும், உலக நாடுகளிடையே நம்முடைய செல்வாக்கு உயரும்'' என்று குறிப்பிட்டேன். அதனைத்தான் கடந்த இரண்டு வாரங்களாக நாம் பார்த்து வருகிறோம்.

இங்கு வருகை தந்த செஸ் விளையாட்டு வீரர்களும், பயிற்சியாளர்களும், தமிழ்நாடு அரசின் சார்பில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், வசதிகள் குறித்துச் சமூக ஊடகங்களில் பாராட்டி நன்றி தெரிவிக்கும்போது நான் அடையும் மனமகிழ்ச்சிக்கு இணையானது எதுவுமில்லை. போட்டியில் வெற்றி பெற்றவர்களைவிட, நான் அதிகமான மகிழ்ச்சியில் இருக்கிறேன்!

செஸ் ஒலிம்பியாட் போட்டி நடத்தத் திட்டமிட்ட உடனேயே, அதற்காக ரூ.102 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. 18 துணைக் குழுக்களை உருவாக்கியது. நான்கே மாதங்களில் பன்னாட்டுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செய்தது. உலகமே வியக்கும் அளவுக்குப் போட்டியை நடத்தி முடித்துவிட்டோம்.

இதற்குக் காரணமான, தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் அவர்களையும், இத்துறையைச் சேர்ந்த செயலாளர் அபூர்வா அவர்களையும், அவருக்குத் துணை நின்ற அரசு அதிகாரிகளையும், அரசு அலுவலர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். உங்களிடம் தரப்பட்ட பணியை மிகமிகச்

சிறப்பாகச் செய்துள்ளீர்கள். உங்களது திறமையும், செயலும் தமிழ்நாடு அரசுக்கு மிகப்பெரிய பெருமையை ஏற்படுத்தித் தந்துள்ளது.

தொடக்க விழாவில் நான் குறிப்பிட்டதைப்போல, இந்த செஸ் ஒலிம்பியாட் என்பது விளையாட்டுப் போட்டியாக மட்டுமல்லாமல், இந்தியாவில் நடைபெறும் உலகளாவிய பண்பாட்டுத் திருவிழாவைப்போல் நடந்துள்ளது. இதில் கலந்துகொள்ள வருகை தந்த செஸ் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது நன்றி!

கடந்த இரு வாரங்களாகப் பல்வேறு நாடுகளில் இருந்தும் செஸ் வீரர்கள், அதிகாரிகள் உலகின் பழம்பெரும் மரபுச்சின்னங்களுள் ஒன்றாக விளங்கும் மாமல்லபுரத்தில் தங்கி ஒலிம்பியாட் போட்டிகளில் பங்கேற்கும் நல்வாய்ப்பைப் பெற்றனர்.

My Dear players, I strongly believe that you have really enjoyed your stay and arrangements in Chennai. It was also a great opportunity for us to know and understand your nation, culture and heritage from you.

(என் அன்புக்குரிய வீரர்களே, சென்னையில் உங்களுக்குச் செய்து தரப்பட்ட ஏற்பாடுகளும், இங்குக் கழித்த நாட்களும் உங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும் என்று உளமார நம்புகிறேன். உங்களது நாடு, பண்பாடு, மரபு குறித்து நாங்கள் அறிந்துகொள்ளவும் இது ஒரு சிறப்பான நல்வாய்ப்பாக அமைந்தது.)

I have no doubt that the players and officials who participated in this prestigious mega chess event will take home not only memories of competitions but also the tradition, culture and taste of Tamil food. I am sure that you will always cherish these memories.

(செஸ் போட்டியில் பங்கேற்ற நினைவுகளுடன், இம்மண்ணின் பண்பாடு, கலாச்சாரம், உணவின் சுவை ஆகியவற்றையும் நீங்கள் திரும்பிச் செல்கையில் உங்களுடன் கொண்டுசெல்வீர்கள் என்பதில் எனக்கு எந்த ஐயமுமில்லை.)

தமிழ்நாட்டை விளையாட்டில் ஒரு முன்னோடி மாநிலமாக ஆக்குவதற்கு 'திராவிட மாடல்' தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

❖ தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்கள், ஒலிம்பிக் பதக்கங்கள் வெல்வோரை உருவாக்கும் பொருட்டு 'ஒலிம்பிக் தங்க வேட்டை' என்ற திட்டம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

❖ உலக அளவிலும், தேசிய அளவிலும் பதக்கங்கள் வென்று நாட்டிற்கும். மாநிலத்திற்கும் பெருமை தேடித் தரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், கடந்த ஓராண்டில் 1,073 விளையாட்டு வீரர்களுக்கு மொத்தம் ரூ.26.85 கோடி உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இதில் அதிகமான நிதிக் கொடைகள் செஸ் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்களுக்கு அதிநவீன

கருவிகள் மற்றும் பயிற்சி வசதிகளை அளிப்பதற்கான திட்டத்தைப் பெரிய அளவில் விரிவுபடுத்த உள்ளோம். இதன்படி, 50 விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு, நான்கு ஆண்டுகளில் அவர்களை மெருகேற்ற ரூ.60 கோடி செலவு செய்யப்படும்.

❖ இதேபோல் கராத்தே, ஸ்குவாஷ், துப்பாக்கி சுடுதல், டோக்கியோ ஒலிம்பிக், பாரா ஒலிம்பிக், வாள் சண்டை போட்டிகளில் பதக்கங்கள் வென்றவர்களுக்கும் சிறப்பு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

ஒருவரின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் விளையாட்டு மிக முக்கிய பங்காற்றுகிறது என்பதைத் தமிழ்நாடு அரசு நன்கு உணர்ந்துள்ளது.

❖ அதனால்தான் அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் மினி விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளன.

❖ தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு, பன்னாட்டுப் பயிற்சியாளர்களைக் கொண்டு பயிற்சியளிக்கப்பட உள்ளது.

❖ வட சென்னையிலும், கோபாலபுரத்திலும் குத்துச்சண்டை அகாடமிகள் நிறுவப்பட உள்ளன.

❖ தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு எனப்படும் ‘‘ஏறுதழுவுதலுக்கு’’ பிரம்மாண்டமாகத் தனி விளையாட்டுக் களம் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

அனைத்து விளையாட்டுகளையும் ஊக்கப்படுத்தும் வகையில் இந்த அரசு, நம்முடைய தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

I am glad to share that We are taking steps to host ‘Chennai Open’ WTA International Championship and also Asian Beach Games in Tamil Nadu.

(சென்னை ஓப்பன் டென்னிஸ் தொடரையும், ஆசியக் கடற்கரை விளையாட்டுப் போட்டிகளையும் சென்னையில் நடத்தவும் நாங்கள் முனைப்போடு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறோம் என்பதையும் உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.)

We will continue our efforts in making Tamil Nadu, a global destination for sports.

(தமிழ்நாட்டை உலகளாவிய விளையாட்டு மையமாக உயர்த்துவதற்கு நாங்கள் தொடர்ந்து முயல்வோம்.)

மேலும், நமது மண்ணின் விளையாட்டுகளை உலக அரங்குக்குக் கொண்டு செல்வதிலும் கவனம் செலுத்தி வருகிறோம்.

தொடக்க விழாவில் உங்கள் அனைவரின் முன்பும் நிகழ்த்திக் காட்டப்பட்ட சிலம்பாட்டத்துக்குத் தேசிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தரவும் முயன்று வருகிறோம்.

தமிழ்நாடு அரசு எடுத்துவரும் முயற்சிகளின் காரணமாகச் சிலம்பாட்டத்தில் ஒளிரும் வீரர்களுக்கு மற்ற விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படுவதைப் போலப் பரிசுத் தொகைகளும், தமிழ்நாட்டின் கல்வி நிறுவனங்கள், பணிவாய்ப்புகளில் இட ஒதுக்கீடும் வழங்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகள், இளைஞர்களிடையே விளையாட்டை ஊக்குவிக்க நாங்கள் பாடுபட்டு வருகிறோம்.

12 ஒலிம்பிக் விளையாட்டுகள், கபடி, சிலம்பாட்டம் ஆகிய இரண்டு பாரம்பரிய விளையாட்டுகளுக்காக மாநில, மாவட்ட அளவிலான ‘‘முதலமைச்சர் கோப்பை’’க்கான விளையாட்டுப் போட்டிகள் விரைவில் நடைபெற உள்ளன என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் வழியாகப் புதிய திறமைசாலிகள் அடையாளம் காணப்பட்டு, பல இளைஞர்கள் விளையாட்டைத் தங்கள் பாதையாகத் தேர்ந்தெடுக்க உதவும்.

நவீன தேவைகளுக்கு ஏற்ப நம்முடைய விளையாட்டு உட்கட்டமைப்பைப் புதுப்பிக்க உள்ளோம்.

அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர வேண்டும் என்று உழைத்து வருகிறோம். அதில் விளையாட்டுத்துறையும் முக்கியமானது என்பதை மனதில் வைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறோம்.

இந்த செஸ் ஒலிம்பியாட் போட்டிகளுக்குப் பிறகு தமிழ்நாடு அரசின் விளையாட்டுத்துறையானது முன்னிலும் அதிக பாய்ச்சலோடு செல்லும் என்று நான் உறுதி அளிக்கிறேன்.

“அதற்குள் முடிந்து விட்டதா ?” என்று ஏங்கும் வகையில் மிகச் சிறப்பாக இந்தப் போட்டிகள் நிறைவு பெற்றுள்ளன.

வெற்றி பெற்ற வீரர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். அடுத்தடுத்த ஆண்டுகளில் வெற்றிப் பெறப் போகும் வீரர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். எதிலும் வெற்றி, தோல்வி முக்கியமல்ல, பங்கேற்புதான் முக்கியமானது. இந்தப் பங்கேற்பு ஆர்வத்தை எப்போதும் விட்டுவிடாதீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

My Dear players, I appeal to you all to act as the ambassadors of Tamil Nadu.

(எனதருமை வீரர்களே, நீங்கள் அனைவரும் உலக அளவில் தமிழ்நாட்டின் தூதுவர்களாக விளங்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.)

On this occasion, I would like to thank the FIDE for having given us the opportunity of hosting of 44th Chess Olympiad at Chennai.

(இந்த இனிய வேளையில், பன்னாட்டு செஸ் ஒலிம்பியாட் போட்டிகளைச் சென்னையில் நடத்தும் வாய்ப்பினை வழங்கியமைக்காக பன்னாட்டு செஸ் கூட்டமைப்பிற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.)

I would also like to thank the officials of Government of Tamil Nadu who made this mega event happen in a short span of time.

(மிகக் குறுகிய காலத்தில் இத்தகைய மாபெரும் போட்டியை நடத்திக் காட்டக் காரணமாக அமைந்த தமிழ்நாடு அரசைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.)

I also like to thank the A.I.C.F. officials for their contributions in successfully conducting the events.

(மேலும், இப்போட்டியை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதில் பெரும் பங்காற்றிய அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் அதிகாரிகளுக்கும் எனது நன்றி.)

I wish the next host, the city of Budapest, all the very best.

(அடுத்த செஸ் ஒலிம்பியாட் போட்டியை நடத்த இருக்கும் புதாபெஸ்த் நகருக்கு என் வாழ்த்துக்கள் !)

Dear International Players, you should all come to Chennai again. Don’t forget that you have a brother here.

(என் அன்புக்குரிய பன்னாட்டு வீரர்களே, நீங்கள் அனைவரும் மீண்டும் சென்னைக்கு வருகைதர வேண்டும். உங்களுக்கு இங்கே ஒரு சகோதரர் இருக்கிறார் என்பதை மறந்துவிடாதீர்கள்.)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிக்கை – 10.08.2022

செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பதக்கம் வென்ற இந்திய அணிக்கு ரூ.1 கோடி பரிசுத் தொகை

44ஆவது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் விளையாட்டுப் போட்டிகளை உலகமே பாராட்டும் வகையில் வெற்றிகரமாகத் தமிழ்நாடு அரசு நடத்தி முடித்துள்ளது.

இந்தியாவில், அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாடில் பொதுப் பிரிவில் 'இந்திய பி அணியும்' பெண்கள் பிரிவில் 'இந்திய ஏ அணியும்' என இரண்டு அணிகள் பதக்கம் வென்று செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்திருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

44ஆவது பன்னாட்டுச் சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் பொதுப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற 'இந்திய பி அணிக்கும்', பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற 'இந்திய ஏ அணி (பெண்கள்)' ஆகிய இரண்டு அணிகளுக்கும் பரிசுத்தொகையாகத் தலா ஒரு கோடி ரூபாய் வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பிக்கும். ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 10.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், 44ஆவது பன்னாட்டுச் சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் பொதுப் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற 'இந்திய பி அணி' மற்றும் பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற 'இந்திய ஏ அணி' ஆகிய இரண்டு அணிகளுக்கும் பரிசுத்தொகையாகத் தலா ஒரு கோடி ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் வீரர்கள் குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

சமூக நீதிக்கு அடிப்படை என்பதே கல்விதான்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.07.2022 அன்று சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தின் 42ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

உலகளாவிய செஸ் ஒலிம்பியாட் போட்டியை நேற்று நம்முடைய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள்.

செஸ் ஒலிம்பியாட் என்பது இந்தியாவில் நடப்பது இதுதான் முதல்முறை, ஆசியாவில் நடப்பது மூன்றாவது முறை என்கின்ற உலகளாவிய பெருமை நமக்குக் கிடைத்திருக்கிறது. உலகச் சதுரங்க அரங்கில் இந்தியாவின் மதிப்பு நேற்று முதல் வானளாவிய அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது.

தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உலக அளவில் பெருமை சேர்க்கும் செஸ் ஒலிம்பியாட் போட்டித் தொடருக்கான தொடக்க விழாவை நேற்று தொடங்கி வைத்ததற்காக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு இன்று மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்குத் தமிழ்நாட்டின் அடுத்த பெருமையைச் சொல்ல வேண்டிய தருணம், ஒன்றிய கல்வி அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட தேசிய உயர்கல்வி நிறுவனங்களுக்கான N.I.R.F தரவரிசைப் பட்டியலில் இடம்பெற்றிருக்கக்கூடிய நிறுவனங்களில் மிகப் பெருவாரியானவை தமிழ்நாட்டைச் சேர்ந்தவை என்பது அனைவருக்கும் தெரியும். இத்தகைய உயர்கல்வியில் மேன்மை பெற்ற தமிழ்நாட்டுக்கு வருகை தந்திருக்கக்கூடிய மாண்புமிகு பிரதமர் அவர்களை உங்கள் அனைவரின் சார்பில் நான் அன்புடன் வரவேற்கிறேன்.

கையில் பட்டத்துடனும், கண்களில் கனவுகளோடும் அமர்ந்திருக்கக் கூடிய மாணவ, மாணவியர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காஞ்சியில் பிறந்த வள்ளுவன், பேரறிஞர் அண்ணா அவர்களது பெயரில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது சுட்டிக் காட்டியதை நான் சுருக்கமாக, உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன், அதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

இந்த பட்டம் யாருக்காக? உங்களுக்காகவா? உங்களுக்காக மட்டுமல்ல, நாட்டுக்காக! பட்டம் பெற்ற நீங்கள்தான் இந்த நாட்டின் திருவிளக்கு. நாட்டைச் செழிக்கச் செய்யக்கூடிய வல்லுநர்கள் நீங்கள்தான்.

“தமிழ் – உமது முரசம், பண்பாடு – உமது கவசம், அறிவு – உமது படைக்கலன், அறநெறி – உமது வழித்துணை, உறுதியுடன் செல்வீர், ஊக்கமுடன் பணிபுரிவீர், ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்” என்று பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைத்தான் உங்கள் அனைவருக்கும் நான் எடுத்துக்காட்டிட விரும்புகிறேன்.

இந்தப் பட்டத்தோடு உங்களது படிப்பு முடிந்து விடவில்லை. அடுத்த பட்டத்தை நோக்கி உயருங்கள். பட்டங்கள் என்பவை, வேலைவாய்ப்புக்காக மட்டுமல்ல, உங்களது அறிவாற்றலை மேம்படுத்துவதற்காக என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

உங்களுக்குப் பட்டம் வழங்கும் விழாவுக்கு இந்திய நாட்டினுடைய பிரதமர் என்ற உயர்ந்த பொறுப்பில் இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. நரேந்திர மோடி அவர்கள் முதன்மை விருந்தினராக வருகை தந்துள்ளார். இது உங்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய மிகப்பெரிய பெருமை.

‘நான் பட்டம் வாங்கும்போது பிரதமரே வந்திருந்தார்’ என்று உங்களது எதிர்காலப் பிள்ளைச் செல்வங்களிடம் பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்! இத்தகைய பெருமைகளோடு எதிர்காலத்துக்குள் நீங்கள் நுழைகிறீர்கள். அறிவாற்றல்தான் அனைத்திலும் வலிமையானது என்பதை உணருங்கள்.

சாதி, மதம், பணம், அதிகாரம், வயது, அனுபவம், பதவி, நாடுகள், வளர்ச்சி ஆகிய அனைத்தின் தன்மையும் ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. ஆனால், அறிவு மட்டும்தான் அனைத்தையும் கடந்து ஒரே அளவுகோலோடு அளவிடப்படுகிறது.

தமிழர்கள் எப்போதும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்கள். கடல்வணிகம், கடற்படை, இரும்பு வார்க்கும் தொழில்நுட்பம், கல்லணை, தஞ்சை பெரிய கோவில் என வரலாற்றில் நிலைத்திருக்கும் பல படைப்புகளைத் தனது தொழில்நுட்ப அறிவால், எல்லோருக்கும் முன்னோடியாகத் தமிழன் படைத்திருக்கிறான்.

கல்வி என்பதுதான் யாராலும் திருட முடியாத, பறிக்க முடியாத சொத்து. அதனால்தான், படிப்புக்கு மட்டும் எத்தகைய தடைக்கல்லும் இருக்கக்கூடாது என்று நினைக்கிறோம். அதனால்தான் இன்றைய ‘திராவிட மாடல்’ தமிழ்நாடு அரசானது, கல்விக் கண்ணைத் திறப்பதையே பெரும்பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. திராவிட இயக்கத்தின் முழுமுதல் கொள்கையான சமூக நீதிக்கு அடிப்படை என்பதே கல்விதான்.

அனைவரும் படிக்க வேண்டும், அனைவரும் வேலைவாய்ப்பைப் பெற வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே திராவிட இயக்கம் தோன்றியது. அதற்காகவே சமூக நீதிக் கருத்தியலும் தோன்றியது.

அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் கல்லூரிக் கல்வி, அனைவருக்கும் உயர் கல்வி, அனைவருக்கும் ஆராய்ச்சிக் கல்வி என்ற இலக்கை நோக்கித் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

* இல்லம் தேடிக் கல்வி
* எண்ணும் எழுத்தும் திட்டம்
* முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்
* நான் முதல்வன்
* கல்லூரிக் கனவு
* அரசுப் பள்ளி மாணவிகள் உயர்கல்வி பயில மாதம் ரூ.1,000 நிதியுதவி
* அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தொழிற்படிப்புகளில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு, அவர்களுக்கான கட்டணங்களை அரசே ஏற்பு
* டாடா நிறுவனத்துடன் இணைந்து சுமார் ரூ.3,000 கோடி செலவில் I.T.I.கள் தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்வு
* இனமான பேராசிரியர் அன்பழகனார் பெயரில் பள்ளிகள் சீரமைப்பு
* பெருந்தலைவர் காமராசர் பெயரால் கல்லூரிகள் சீரமைப்பு ஆகிய ஏராளமான திட்டங்களின் மூலமாகத் தமிழகத்தில் கல்விப் புரட்சியை நிகழ்த்தி வருகிறோம்.

படிப்பு என்பதைவிடப் பட்டத்தோடு மட்டுமே சுருக்கி விடாமல், வேலைவாய்ப்பு, வாழ்க்கைத் தரம், சமூக வளர்ச்சி ஆகிய படிநிலையிலும் உயர்த்தும் அரசாகத் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருவதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். படித்து முடித்து வெளியில் வருபவர்களுக்கான வேலை வாய்ப்புகளை உடனுக்குடன் உருவாக்கித் தரும் சூழலை உருவாக்கி வருகிறோம்.

இளைஞர்களின் எதிர்காலத்தை மனதில் வைத்துத் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்தி இருக்கிறோம். இதன் மூலமாக, ஏராளமான தொழில் நிறுவனங்கள் தமிழகத்தை நோக்கி வருகின்றன. அதனால்தான், தொழில் தொடங்க சிறந்த மாநிலங்களின் பட்டியலில் 14ஆவது இடத்தில் இருந்து ஒரே ஆண்டில் 3ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது நம்முடைய தமிழ்நாடு.

புதிய புதிய தொழில்களை ஈர்ப்பதற்காகத் தமிழக அரசு தன்னை வடிவமைத்துக் கொண்டுள்ளது. கடந்த ஓராண்டில், செமி–கண்டக்டர்கள், மின் வாகனங்கள், லித்தியம்–அயன் பேட்டரிகள், ஒருங்கிணைந்த சூரிய ஒளி மின்னழுத்திகள் (Solar Photovoltaic) உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன் (Green Hydrogen), தரவு மையங்கள் (Data Centre) போன்ற துறைகள் சார்ந்த திட்டங்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன. இதற்குத் தேவையான அறிவுத் திறனை உருவாக்கவே ‘நான் முதல்வன்’ திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.

ஆண்டுதோறும் மாநிலம் முழுவதிலும் உள்ள சுமார் 10 இலட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் திட்டமிட மேற்கொண்டுள்ளோம். அவர்களுக்கு வேலை பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்து, அவர்களின் திறமையை அவர்களுக்கு உணர்த்தி, அதன் மூலம் ஒட்டு மொத்த இந்தியாவே நன்மை பெற்றிடும் வகையில், இந்தத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி (Industry 4.0) என்ற அந்த அடிப்படைக்கேற்ப, நமது இளைஞர்கள் தயாராக வேண்டும் என்பதே என்னுடைய வேண்டுகோள். தொழிற்சாலைகளையும் தரம் உயர்த்த தொழில் புத்தாக்க மையங்களை (Industrial Innovation Centres) உருவாக்கி வருகிறோம்.

நான் அடிக்கடி சொல்லி வருவதுபோல, 2026ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தின் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு அடைய வேண்டும். அதில் நீங்களும் இடம் பெற்றாகவேண்டும். 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். அதிலும் உங்கள் பங்கு இருக்க வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கிய உலகத்தை உருவாக்க நீங்கள் உங்களை ஒப்படைத்துக் கொள்ளுங்கள். உங்களை அனைத்து வகையிலும் தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது வளர்ச்சிக்குத் தடையாக எது இருந்தாலும், அதனைத் தகர்த்து முன்னேற்றம் காணுங்கள்.

உங்களது கனவுகளை மட்டுமல்ல, உங்களது பெற்றோர் கனவுகளையும் நிறைவேற்றுங்கள். உங்களிடம் இருந்து இந்த மாநிலமும், இந்திய நாடும் நிறைய எதிர்பார்க்கிறது. தமிழ்நாட்டின் தலைசிறந்த தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பட்டம் பெற்றிருக்கிறீர்கள்.

அரசியலமைப்பு வலியுறுத்தும் அறிவியல் மனப்பான்மையை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பழமைவாதத்தைப் புறந்தள்ளி, புதிய கருத்துக்களை ஏற்று, பகுத்தறிவுப் பாதையில் நடைபோட்டால்தான் நீங்கள் பெற்ற பட்டத்திற்குப் பெருமை!

இன்றுமுதல் நீங்கள் பட்டதாரிகள் மட்டுமல்ல; உலகெங்கும் வலம்வரப் போகும் இந்தியாவின், தமிழ்நாட்டின் நல்லெண்ணத் தூதுவர்கள்!

என் அன்புக்குரிய மாணவ, மாணவியர்க்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்களும், அறிவான பாராட்டுக்களும் எப்போதும் உண்டு.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் உயர்கல்வியின் பொற்காலத்தை உருவாக்கத் தொடர்ந்து அயராது உழைப்போம்! உழைப்போம்! உழைப்போம்!

❖ ❖ ❖

புத்தகங்களே புத்துணர்வு அமுதம்

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பதினெட்டாவது ஈரோடு புத்தகத் திருவிழாவைக் காணொலி வாயிலாகத் தொடங்கிவைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி வெளியூர் பயணங்களைச் சில நாட்களுக்குத் தவிர்க்க வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால், நேரடியாக வந்து கலந்துகொள்ள இயலாதவனாக இருக்கிறேன். இதனை தாங்கள் அனைவரும் பெருந்தன்மையோடு பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று முதலில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஈரோட்டுக்கு வருவதில் மிக மிக மகிழ்ச்சி அடைபவன் நான் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல!

ஈரோடு, எங்கள் உயிரோடு கலந்த ஊர்.

நம் உணர்வோடு கலந்த ஊர்.

நமக்குச் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டிய ஊர்.

பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம், ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார் என்று எழுதினார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய புகழ் பெற்ற தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஊர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த ஊர். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் குடியிருந்த ஊர்.

திராவிட இயக்கம் இன்று இத்தனைப் பேரும் புகழும் பெற்ற இயக்கமாக இருக்கிறது என்றால், நம்முடைய தமிழினம் இத்தகைய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
05.08.2022 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து
காணொலிக் காட்சி வாயிலாக
ஈரோடு, சிக்கய்யநாயக்கர் கல்லூரி
மைதானத்தில் புத்தகத் திருவிழாவைத்
தொடங்கிவைத்து ஆற்றிய உரை.

என்றால் அதற்குக் காரணம் நிச்சயமாக இந்த ஈரோடு ஆகத்தான் இருந்திட முடியும்.

அறிவாசான் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஊரில், அறிவுத் திருவிழாவான புத்தகத் திருவிழாவைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அதிலும் என்னை அழைத்திருப்பவர் சாதாரண குணசேகரன் அல்ல, ஸ்டாலின் குணசேகரன் என்பதால் எனக்குத் தனிப்பட்ட முறையில் பாசம் உண்டு. நாங்கள் இருவரும் ஒரே பெயர்களைக் கொண்டவர்கள் மட்டுமல்ல, ஒரே கொள்கை கோட்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் என்னுடைய கொள்கைச் சகோதரர் அழைப்பை ஏற்று இக்கண்காட்சியை மகிழ்ச்சியோடு நான் திறந்துவைக்கிறேன்.

இந்திய விடுதலை வேள்வியில் தமிழ்நாட்டு வீரர்கள் ஆற்றிய பங்களிப்பைத் தொகுத்து, 'விடுதலை வேள்வியில் தமிழகம்' என்ற நூலை ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் 1999ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்த வரலாற்றுப் புதையலான நூலுக்கு அன்றைய முதலமைச்சர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அணிந்துரை வழங்கினார்கள்.

“நாட்டுப் பற்றில் தமிழக வீரர்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை இன்றைய இளைஞர்கள் உணர வழிகாட்டுகிறது இந்த நூல். எழுத்தாளர் பெருமக்கள் பலர் நெய்த நூல் கொண்டு அரியதோர் ஆடையாக இதனை உருவாக்கியுள்ள அன்பர் ஸ்டாலின் குணசேகரன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்”, என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள்.

தமிழாகவே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்களிடம் பாராட்டைப் பெறுவது என்பது எளிதல்ல. அவரிடமே பாராட்டைப்பெறும் அளவுக்கு வரலாற்று நூலை உருவாக்கிக் கொடுத்தவர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள்.

தன்னைப் போன்ற எழுத்தாளர்களை, பேச்சாளர்களை, அறிஞர்களை, தமிழ்ப்புலவர்களை, படைப்பாளிகளை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஈரோட்டில் புத்தகத் திருவிழாவை நடத்தத் தொடங்கிப் பதினெட்டு ஆண்டுகளாகத் தொய்வில்லாமல் நடத்தி வருகிறார் என்றால், அவரது அயராத தமிழ் ஆர்வத்தை அனைவரும் பாராட்ட வேண்டும்.

இதுபோன்ற ஆர்வலர்கள் தமிழ்நாடு முழுவதும் உருவாக வேண்டும்.

ஒவ்வொரு ஊரிலும் ஸ்டாலின் குணசேகரன்கள் உருவாக வேண்டும்!

புத்தக வெளியீட்டு விழாக்களில் கலந்துகொள்வதும், புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைப்பதும் மகிழ்ச்சிக்குரியது. ஏனென்றால் இவை அறிவுத்திருவிழா! தமிழ்த் திருவிழா!

தமிழாட்சி, தமிழர்களின் ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது தமிழ்நாட்டில். இத்தகைய தமிழாட்சி நடக்கும் நாட்டில் தமிழ்த் திருவிழாக்களும் அதிகம் நடந்தாக வேண்டும்.

சென்னையில் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றேன்.

சென்னையைத் தொடர்ந்து மேலும் சில மாவட்டங்களில்தான் இதுபோன்ற கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் அரசின் உதவியோடு இத்தகைய புத்தகக் கண்காட்சி நடக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளேன். அதற்காக இந்த ஆண்டு, ரூ.4.96 கோடி நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் புத்தகக் கண்காட்சி நடத்த முதலில் ஜனவரி மாதம் தேதி குறிக்கப்பட்டது. கொரோனா பரவிய காரணத்தால் தேதியில் மாற்றம் செய்யப்பட்டது. ஏற்கெனவே அரங்கம் அமைத்துவிட்ட காரணத்தால் பதிப்பாளர்களுக்கு இழப்பும் ஏற்பட்டது. இதனை முன் வைத்து பதிப்பாளர் சங்கத்தினர் கோரிக்கை வைத்தனர். உடனடியாக ரூ.50 இலட்சத்தை இழப்பீடு தொகையாக வழங்கிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி!

வழக்கமாக, சென்னைப் புத்தகக் கண்காட்சிக்குத் தமிழ்நாடு அரசு வழங்கும் 75 இலட்சத்துடன் இந்த ஐம்பது இலட்சத்தையும் சேர்த்து ஒன்றே கால் கோடி ரூபாயை வழங்கினோம். இதைத் தொடர்ந்து, பதிப்பாளர்களின் நெடுநாள் கோரிக்கையான நிரந்தப் புத்தகப் பூங்கா அமைப்பதற்கான ஒப்புதலையும் தமிழக அரசு வழங்கி இருக்கிறது.

- 2007ஆம் ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைத்த அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னையில் மிகப் பிரம்மாண்டமான நூலகம் அமையப் போகிறது என்ற அறிவிப்பினை வெளியிட்டார். அதுதான், இந்தத் தமிழ்ச் சமுதாயம் அரசியல் விழிப்புணர்வு பெற்ற சமுதாயமாக உயரப் பாடுபட்ட பேரறிஞர் அண்ணாவின் பெயரால் சென்னையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம்!
- அதே போல் மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால் ரூ.114 கோடி மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்க அரசு திட்டமிட்டு, இடத்தைத் தேர்வு செய்துள்ளது. மிகப் பிரம்மாண்டமாக மதுரையில் விரைவில் எழ இருக்கிறது.
- தமிழ்நூல்கள் நாட்டுடைமை
- எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள்
- குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு
- திராவிடக் களஞ்சியம் உருவாக்கம்
- இதழியலாளர்க்குக் கலைஞர் எழுதுகோல் விருது
- உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள்
- நூலகங்களுக்குச் சிற்றிதழ்கள்
- இலக்கியமாமணி விருதுகள்

- உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம்
- திசை தோறும் திராவிடம்
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் என ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது.

பதிப்பகங்களோடு போட்டிப் போடக்கூடிய அளவுக்குத் தமிழ்நாடு அரசும் ஏராளமான நூல்களை வெளியிட்டு வருகிறது என்பதை நான் கம்பீரமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

- 1960–1970ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பில் வெளியிடப்பட்ட 875 நூல்களில் 635 நூல்களை இந்த ஓராண்டுக் காலத்தில் மறுபதிப்பாகக் கொண்டு வந்துள்ளோம்.
- தமிழின் மிகச் சிறந்த படைப்புகள் ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகி உள்ளது. இத்தகைய மொழிபெயர்ப்பு பணி தொடர்ந்து கொண்டு இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா குறித்த ‘மாபெரும் தமிழ்க் கனவு’ ஆங்கிலத்திலும், வைக்கம் போராட்டம் மலையாளத்திலும், கலைஞரின் திருக்குறள் அதனுடைய உரை தெலுங்கிலும், தி.ஜானகிராமன் சிறுகதைகள் கன்னடத்திலும் வரப் போகின்றன.

- கால்டுவெல்லின் ‘திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்’ நூலை மொழி அறிஞர் பா.ரா.சுப்பிரமணியம் அவர்கள் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். அதனை அரசு வெளியிட்டுள்ளது.
- சங்க இலக்கிய நூல்களைச் செம்பதிப்பாகக் கொண்டு வர இருக்கிறோம். அதற்கான பணிகள் நடந்து வருகின்றன.
- பிறமொழியில் இருந்து தமிழுக்கும் பல்வேறு நூல்கள் கொண்டு வரப்பட இருக்கின்றன.
- குழந்தை இலக்கிய நூல்கள், 100 வெளியிட இருக்கிறோம். அதில் 27 இதுவரை வெளியாகி உள்ளது.

இலக்கியத்தையும், படைப்புலக அறிவையும் அனைவருக்கும் புகுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறியலாம்.

உலகில் எந்த மொழிக்கும் இல்லாத பழமைச் சிறப்பும், இலக்கிய இலக்கண வளமையும் தமிழ் மொழிக்கு உண்டு. இந்த தமிழ்மொழிதான் தமிழ் இனத்தைக் காக்கும் காப்பரணாக அமைந்திருக்கிறது.

எத்தகைய படையெடுப்புகள் வந்தாலும் அத்தனை படையெடுப்புகளையும் தாங்கி நிற்கும் வல்லமை நம்முடைய தமிழ்மொழிக்கு உண்டு.

- அயல் நாட்டுப் படையெடுப்புகள்
- அயல் இனப் படையெடுப்புகள்
- அயல் மொழிப் படையெடுப்புகள்
- அயல் பண்பாட்டுப் படையெடுப்புகள்

இப்படி எது வந்தாலும் தமிழ் மொழியானது தன்னையும் காத்தது, தமிழினத்தையும் காத்தது, தமிழ்நாட்டையும் காத்தது.

‘வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என்று தலைவர் கலைஞர் சொன்னதைப் போல உயிரைக் கொடுத்து மொழியைக் காத்த தியாக மறவர்கள் வாழ்ந்த நாடு இந்தத் தமிழ்நாடு. தமிழைக் காக்கச் சிறையில் இருந்து நடராசனும் தாளமுத்துவும் மரணம் அடைந்தார்கள். சின்னச்சாமியும் அரங்கநாதனும் தீக்குளித்தார்கள். மாணவன் சிதம்பரம் ராசேந்திரன் துப்பாக்கிக் குண்டுக்கு மார்பைக் காட்டினான்.

இலட்சக்கணக்கான தமிழர்கள் ‘அஞ்சா நெஞ்சர்’ பட்டுக்கோட்டை அழகிரிசாமி தலைமையில் திருச்சியில் இருந்து சென்னைக்குத் தமிழ்ப்படையாக நடந்து போனார்கள். இவை எல்லாம் வேறு எந்த மொழியிலும், இனத்திலும் நாட்டிலும் பார்க்க முடியாது. ஆண்களும், பெண்களும் தங்கள் மொழிப் பெயரை தங்களுக்கு வைத்துக்கொள்வது இங்குதான்.

இத்தகைய தமிழின் பெருமையை, சிறப்பை தமிழர்கள் அனைவரும் உணருவதற்கு இதுபோன்ற புத்தகத் திருவிழாக்கள்தான் அடித்தளமாக அமைக்கின்றன.

பட்டங்கள் வாங்குவதற்காக மட்டுமில்லாமல், அறிவின் கூர்மைக்காக, நம்முடைய சிந்தனையை வளர்த்துக்கொள்வதற்காக, நாம் கடந்து வந்த பாதையை அறிந்துகொள்வதற்காக, நாம் போக வேண்டிய திசையைச் சென்றடைவதற்காக, அறிவார்ந்த புத்தகங்களை அனைவரும் வாசிக்க வேண்டும்.

அதனால்தான் என்னைச் சந்திக்க வருபவர்கள் மாலைகள், சால்வைகள், போர்வைகள் அணிவிக்க வேண்டாம், புத்தகங்களைத் தாருங்கள் என்று நான் கேட்டுக் கொண்டேன்.

புத்தகம் வழங்குவது இன்றைக்கு ஒரு இயக்கமாகவே தமிழ்நாட்டில் மாறி இருக்கிறது. இந்த இயக்கம் விரிவடைய வேண்டும், வலுவடைய வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

அறியாமை எனும் இருட்டில் தத்தளிப்பவர்களுக்கு ஒளி கொடுக்கும் அறிவுச்சுடர்தான் புத்தகங்கள்!

பொய்யும் புரட்டும் கலந்த பழமைவாதம் எனும் கடலில் சிக்கித் தவிக்காமல், நாம் கரை சேர உதவுகிற பகுத்தறிவுக் கப்பல்கள்தான் புத்தகங்கள்!

'வீட்டுக்கு ஒரு நூலகம் அமைய வேண்டும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள்.

அப்படி அனைவரும் தங்கள் வீட்டில் சிறு நூலகமாகவாவது அமைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது புத்தகங்களைப் பரிமாறிக்கொள்ளும் பண்பாடு வளர வேண்டும்!

வாசிக்கும் பழக்கம் உள்ளவர்கள் அறிவார்ந்த நூல்களை நண்பர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்!

சிந்தனையில் தெளிவு ஏற்படும் புத்தகங்களை வாசிக்கத் தூண்டுங்கள்!

இளைஞர்களே... நிறையப் படியுங்கள்!

ஏன்... எதற்கு... எப்படி ? என்று கேளுங்கள்!

ஒரு செய்தி உங்களை வந்தடைகிறது என்றால், அதனை உடனே முழுமையாக நம்பிவிடாதீர்கள்!

அதன் உண்மைத்தன்மையை ஆராயுங்கள்!

எது உண்மை என்று அறிய வேண்டும் என்றால் நிறையப் படிக்க வேண்டும்!

இட்டுக்கட்டிக் கட்டுக்கதைகளை அவிழ்த்து விடுபவர்கள், அந்தக் கலையில் தேர்ந்தவர்கள்! ஆண்டாண்டு காலமாகக் கட்டுக்கதைகளை நம்ப வைக்கும் திறனைப் பெற்றவர்கள்!

ஆனால், தமிழ்ச்சமூகம் பகுத்தறிவுச் சமூகம்!

பொய்களையும், கட்டுக்கதைகளையும் வென்ற சமூகம்!

தமிழகம் அறிவுப் புரட்சி மாநிலமாக, பகுத்தறிவுப் புரட்சி மாநிலமாக மாறுவதற்கு இதுபோன்ற புத்தகத் திருவிழாக்கள் அனைத்து நகரங்களிலும் நடைபெற வேண்டும்.

அறிவே அனைத்துக்கும் அரண்.

புத்தகங்களே புத்துணர்வு அமுதம்.

எல்லாவற்றுக்கும் ஈரோடு வழிகாட்டியது போலப் புத்தகத் திருவிழாவுக்கும் வழிகாட்டுகிறது ஈரோடு!

விழா சிறக்க என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

படமும்/செய்தியும்

ஆதிதிராவிடர் நலத்துறையால் புதியதாகக் கட்டப்படும் மாணவர் விடுதி இடத்தில் ஆய்வு

தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் 15.07.2022 அன்று சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள மரியாதைக்குரிய திரு. எம்.சி.ராஜா அவர்களின் பெயரிலான ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவர் விடுதி வளாகத்திற்குள்ளேயே 6 தளங்களுடன் நவீன வசதிகள் கூடிய மாணவர் விடுதி கட்டப்பட உள்ள இடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆகஸ்ட் 3 : சுதந்திரப் போராட்ட வீரர்
தீரன் சின்னமலை நினைவு நாள்

“விடுதலை வீரர்”

தாயகத்தின் மானத்துக்கு இழுக்கு நேர்ந்தபோது, தன்னுரிமை மிதித்துத் துவைக்கப்படும்போது, “சின்னமலை வரி தரமாட்டான்! ஆங்கிலேயருக்கு அடிபணிய மாட்டான்!” என முழங்கி, உயிர் போகும் வேளையிலும் தன்மானத்தை விட்டுக்கொடுக்காத விடுதலை வீரர் தீரன் சின்னமலையின் நினைவுநாளில் அவருக்கு என் புகழ்வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டுள்ள
சமூக வலைத்தளப் பதிவு (03.08.2022)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.08.2022 அன்று சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மாமல்லபுரத்தில்
45 அடி உயர சிற்பக்கலைத் தூண்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார். (27.07.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.07.2022 அன்று தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் அமைக்கப்பட்டுள்ள 45 அடி உயர சிற்பக்கலைத் தூணை திறந்துவைத்தார்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) கைவினைஞர்களின் மேம்பாட்டிற்காகவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை மேம்படுத்திடவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாமல்லபுரத்தின் கற்சிற்ப கைவினைஞர்களின் கற்சிற்பங்களை உலகளவில் எடுத்து செல்லும் வகையில் பல்வேறு முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், மாமல்லபுரத்தில் கைவினை கலையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் நலனுக்காக "கைவினை சுற்றுலா கிராமம்" என்ற திட்டம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் 45 அடி உயரத்தில் அழகிய "சிற்பக்கலைத் தூண்" கலைநயமிக்க பல்லவர் கால சிம்மம், யாழி, தோகை விரித்தாடும் மயில்கள், யானைக் கூட்டம், ஆகியவைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டு மாமல்லபுரத்திற்கு வருகைப் புரியும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாமல்லபுரத்தில் 28.07.2022 முதல் 10.08.2022 வரை நடைபெறவுள்ள 44ஆவது செஸ் ஒலிம்பியாட் சர்வதேச சதுரங்கப் போட்டியில் பங்குபெறும் சதுரங்க வீரர்களையும், போட்டியினை காண வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளையும், பொதுமக்களையும் கவரும் வகையில் இக்கற்சிற்பக் கலைத்தூண் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள், தொழில் காப்பகங்கள் சந்திப்பு நிகழ்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கிவைத்தார். (02.08.2022)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.08.2022 அன்று சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்கள், தொழில் காப்பகங்கள் சந்திப்பு நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து, தமிழ்நாட்டில் இயங்கும் தொழில் காப்பகங்கள், தொழில் காப்பகங்களின் ஆதரவு பெற்ற புத்தொழில் நிறுவனங்கள் ஆகியவை தங்களின் தயாரிப்புகள், சேவைகளை காட்சிப்படுத்தும் வகையில் அமைத்துள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்.

புத்தொழில்களுக்கு, உந்து சக்தியாகவும், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான துடிப்பான தொடக்கச் சூழலைக் கட்டமைப்பதற்கும், புத்தாக்கத்தால் தமிழ்நாட்டில் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தவும், தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கத்தின் வாயிலாகத் தமிழ்நாடு அரசு பல்வேறு சீர்மிகு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி

தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கும், புத்தொழில் முனைவோர்களுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு தகுதியான நிறுவனங்களுக்கு மானிய நிதியினைத் ‘‘தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி–TANSEED’’ திட்டத்தின்கீழ் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி திட்டத்தின் மூன்றாவது பதிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 31 புத்தொழில் நிறுவனங்களுக்கு, தலா ரூ.5 இலட்சம் என மொத்தம் ரூ.1.55 கோடி காசோலைகளை மானியமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

முதல் நிலை நகரமான சென்னையில் இருந்து 11 புத்தொழில் நிறுவனங்களும், இரண்டாம் நிலை நகரங்களான மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இருந்து 12 புத்தொழில் நிறுவனங்களும், மூன்றாம் நிலை நகரங்களான ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர், கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, விருதுநகர் ஆகிய நகரங்களில் இருந்து 8 நிறுவனங்களும் என மொத்தம் 31 நிறுவனங்கள், தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் பயனாளிகள் இருக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் 16 நிறுவனங்களில் நிறுவனர் / இணை நிறுவனராகப் பெண்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டாரப் புத்தொழில் மையங்கள்

பெருநகரங்களில் மட்டுமில்லாமல் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களிலும் புத்தொழில் முனைவை ஊக்குவிக்கும் விதமாக மதுரை, திருநெல்வேலி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள வட்டாரப் புத்தொழில் மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்துவைத்தார்.

தொழில் முடுக்ககம் (Accelerator)

பல்வேறு துறை சார்ந்து இயங்கும் 100 புத்தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் வளர்ச்சியை விரைவாக்கப் பயிற்சிகளை வழங்கும் 5 தொழில் முடுக்ககங்களை (Accelerator) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு புத்தொழில், புத்தாக்க இயக்கமானது, வேளாண் தொழில்நுட்பம், காலநிலை மேலாண்மை, வணிகத் தொழில்நுட்பம் / செயலிகள், வாழ்வாதாரம், சமூக மாற்றம் ஆகிய பல்வேறு தலைப்புகளில், ஒவ்வொரு பிரிவின் கீழும் 20 தொழில் முனைவோர் கொண்ட குழுவினை உருவாக்கி, ஒவ்வொரு குழுவிற்கும் 3 மாதங்களில் இருந்து 12 மாதங்கள் வரையிலான தொழில் முடுக்க பயிற்சிப் பட்டறைகளை ஒருங்கிணைக்க உள்ளது.

புத்தொழில் சமூகக் குழுக்கள்

தமிழ்நாட்டின் புத்தாக்க மற்றும் புத்தொழில் முயற்சிகள் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக்கும் நோக்கில், பல்வேறு பங்களிப்பாளர்களை (Stake holders) ஒருங்கிணைக்கும் வகையில் புத்தொழில் சமூகக் குழுக்கள் (Startup TN Community Circles) தொடங்கப்பட உள்ளன. அதன் முதற்கட்டமாக 8 புத்தொழில் சமூகக் குழுக்களின் கிளைகளை (Startup TN Community Circles) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

தொழில் காப்பகங்கள் தரவரிசை வழிமுறை வரைவு வெளியீடு

தொழில் காப்பகங்களின் திறன் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு மாநிலத்தில் இயங்கும் Incubator நிறுவனங்களுக்கான தரவரிசை வழிமுறை திட்ட வரைவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். இது உலகத்தர நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தும் Maturity Model முறையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

நான் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த நேரத்தில், இந்த அரங்கத்திற்கு வெளியிலே அமைக்கப்பட்டிருக்கக் கூடிய ஸ்டார்ட் அப் அரங்குகளில் நம்முடைய இளைய சமுதாயத்தைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் புதிய முன்னெடுப்போடு அமைத்திருக்கக்கூடிய இந்தக் காட்சியைப் பார்த்து நான் பிரமித்துப்போய் நிற்கிறேன். அப்படி அமைத்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களை இந்த நல்ல நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர், செயலர்களிடம் இந்த Conclave-க்கு மாணவர்கள் வருகிறார்களா என்று நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். வருகிறார்கள், 300 மாணவர்களுக்குக் குறையாமல் வந்துகொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை எனக்குச் சொன்னார்கள். மகிழ்ச்சி. அதே நேரத்தில் என்னுடைய கோரிக்கை என்னவென்று கேட்டீர்களானால், தமிழ்நாடு தொழில் படிப்பு படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இதனைக் கொண்டு சேர்க்கக்கூடிய வகையில் அடுத்த முறை நீங்கள் “நான் முதல்வன்” திட்டம் மூலமாக இதனை இளைஞர்களுக்கு ஒரு உந்துசக்தியாகக் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்று உங்களை உரிமையோடு இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய வகையில் அந்த உன்னத இலக்கோடு திராவிட மாடல் ஆட்சியானது தமிழகத்தில் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி அனைவருக்குமான வளர்ச்சியாக அதனை வடிவமைத்து, அதன்படியே நாம் திட்டங்களைத் தீட்டி வருகிறோம். நமது இலக்கை நோக்கிப் பெருமுன்னேற்றம் கண்டு வருகிறோம்.

அனைத்துத் துறைகளுமே முன்னோக்கிய பாய்ச்சலில் இன்றைக்குப் போய்க்கொண்டு இருக்கின்றன. அதில் சிறுகுறு, நடுத்தரத் தொழிலும் மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. இதற்குக் காரணமாக இதற்கு அடித்தளம் அமைத்து, துடிப்புடன் பணியாற்றிவரும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களையும், துணை நின்று பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அதிகாரிகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

தொழில் புரிய எளிதான மாநிலங்களின் பட்டியலில் பார்த்தீர்கள் என்றால் ஏற்கெனவே நாம் 14ஆவது இடத்தில் இருந்தோம். அந்த 14ஆவது இடத்திலிருந்து இப்போது தமிழ்நாடு மூன்றாவது இடத்திற்கு முன்னேறியிருக்கிறது. அதேபோல் அண்மையில் “ஸ்டார்ட் அப் இந்தியா”

வெளியிட்ட தரவரிசைப் பட்டியலில், பல படிகள் முன்னேறி அரசின் சிறந்த புத்தொழில் செயல்பாடுகளுக்காக “லீடர்” அங்கீகாரத்தினை இப்போது நம்முடைய தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

ஏராளமான புத்தொழில்களை நாம் உருவாக்கி வருகிறோம். அதற்காக “ஸ்டார்ட் அப் தமிழ்நாடு” என்ற இந்த மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறது. மாநாடு என்று நீங்கள் சொன்னாலும், இது மாநாட்டைப் போலத்தான் நடந்து கொண்டிருக்கிறது.

1,240 புதிய தொழில் நிறுவனங்கள் இங்கு வந்துள்ளன. தொழில் காப்பகங்கள் வந்துள்ளன. 92 நிறுவனங்கள் பங்கேற்கும் மாபெரும் கண்காட்சி இங்கே நடந்து கொண்டிருக்கிறது. கருத்தரங்கமும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைவிட மாபெரும் மாநாடு வேறு இருக்க முடியாது என்று சொல்லும் அளவுக்கு நீங்கள் இதை எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். அதற்காக உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

புத்தாக்கம் மற்றும் புத்தொழில்கள் சார்ந்து இந்த நிதியாண்டின் இறுதியில் இரண்டு மிகப்பெரிய மாநாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று தொழில்நுட்ப மாநாடாகவும், இன்னொன்று புத்தாக்க மாநாடாகவும் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இன்றைய நிகழ்வில் டான்சீட் (TANSEED) திட்டத்தின் கீழ் அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 31 புத்தொழில் நிறுவனங்களுக்குத் “தமிழ்நாடு அரசு புத்தொழில் ஆதார நிதி” வழங்கப்பட்டு இருக்கிறது. இது தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானிய நிதி. இன்று இந்த நிதியைப் பெற்ற 31 நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் பெண் தொழில் முனைவோர்களால் நடத்தப்படுவது என்பது மிகமிகச் சிறப்பு!

- இன்றைக்கு ஆக்சிலரேட்டர் (Accelerator) எனப்படும் 5 தொழில் முடுக்ககங்களைத் தொடங்கி வைத்திருக்கிறேன். இதன் மூலம், இளம் தொழில் முனைவோர்கள் தங்கள் தொழிலில் விரைவாகவும், தெளிவாகவும் வளர்ச்சி அடைவதற்கான நுட்பங்களை கற்றுக் கொள்ளலாம்.
- வட்டார அளவிலான புத்தொழில் மையங்களை மதுரை, திருநெல்வேலி, ஈரோடு மாவட்டங்களில் இன்றைக்குத் திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமில்லாமல், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் புத்தொழில்கள் வளர்ச்சிப் பெற வேண்டும் என்கிற நல்ல நோக்கத்துடன் இந்த வட்டாரப் புத்தொழில் மையங்கள் தொடங்கப்பட்டிருக்கிறது. இளைய தலைமுறையினர் தங்களது புதுமையான தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் “ஆடுகளம்”, சவால்களைச் சந்திக்கக் கற்றுத்தரும் “தடை அதை உடை” போன்ற பல நிகழ்வு இந்த வட்டார மையங்களின் வழி நடைபெறும்.
- தமிழ்நாட்டில் உள்ள தொழில் காப்பகங்களுக்கு தரவரிசைக் கட்டமைப்பு வழிமுறைகள் என்னால் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான தொழில் காப்பகங்கள் இயங்கி வருவதாகத் தரவுகள் கூறுகின்றன. தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்துப் புத்தொழில் காப்பகங்களையும் உலகத் தரத்திற்கு உயர்த்துவதுதான் நம்முடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சியாக, இன்னும் பல்வேறு முயற்சிகளில் இத்துறை ஈடுபட்டிருக்கிறது. அதனைத் தலைப்புச் செய்திகளாக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- வளர்ந்துவரும் நவீனத் துறைகளை மையமாகக் கொண்டு இயங்கும் புத்தொழில் மற்றும் தொழில் முனைவு நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- அண்ணா பல்கலைக்கழகத்தில் "தமிழ்நாடு தொழில்நுட்பப் புத்தாக்க மையத்தை" (i-TNT Hub) சுமார் ரூ.54.06 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டன. 25,000 சதுர அடியில் அமையவிருக்கும் இந்த மையமானது, I.I.T. ஆராய்ச்சிப் பூங்காவைப் போன்று (IIT Research Park) உலகத்தரம் மிக்க நிறுவனங்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த தொழில்நுட்பத் துறைகளுக்கான காப்பகம், தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்துக் கல்லூரிகளுக்கும், வளர்ந்து வரும் எதிர்கால தொழில்நுட்பங்கள் சார்ந்து இயங்கும் அனைத்துப் புத்தொழில் முனைவோர்களுக்கும் பயன் தரும் வகையில் தொழில் முனைவோர்கள் தங்கள் தயாரிப்புகளைச் சந்தைப்படுத்துவதற்காக "ஸ்டார்ட் அப் தமிழ்நாடு பிராண்ட் லேப்ஸ்" (StartUpTamilNadu Brand Labs) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் இளம் தொழில் முனைவோர்கள் சந்திக்கும் பல்வேறு சந்தைப்படுத்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். வணிகமும் பெருகும்.
- புத்தொழில் நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் "லான்ச் பேட்" (Launch Pad) நிகழ்வுகளையும் நடத்த இருக்கிறோம்.
- ஊரகப்பகுதிகளில் உள்ள பெண்கள், தொழில் முனைவில் ஈடுபட உதவும். அந்த வகையில் "தொழிலணங்கு" என்ற பெயரில் நிகழ்வினை நடத்துகிறது டான்சிம்.
- உலகெங்கும் உள்ள தமிழ் முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்துத் "தமிழ் ஏஞ்சல்ஸ் நெட்வொர்க்" (Tamil Angels Network) தளம் விரைவில் அமைக்கப்படும்.
- புத்தொழில் நிறுவனங்களையும் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கும் துறைசார் வல்லுநர்களையும் இணைக்கும் வகையில் திறன்மிக்க "வழிகாட்டி மென்பொருள்" ஒன்று வடிவமைக்கப்பட்டு வருகிறது.
- சென்னை நந்தனத்தில் புத்தொழில் மையம் மூன்று மாதத்தில் செயல்படத் தொடங்கும்.
- புதிய "புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை" விரைவில் வெளியிடப்படும்.

2030ஆம் ஆண்டில் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் கனவுடன் பயணிக்கும் நமக்கு, இவை அனைத்தும் உதவிக்கரமாக அமையப் போகின்றன.

நமது அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, தொழில்துறை சார்பில் ஆறு முதலீட்டு மாநாடுகளை நடத்தி இருக்கிறோம். அந்த ஆறு முதலீட்டு மாநாடுகள் மூலமாக இதுவரை மொத்தம் ரூ.2,20,000 கோடி அளவுக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு இருக்கிறது. தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு மாற வேண்டும் என்பதுதான் என்னுடைய முழுமுதல் ஆசை.

புத்தாக்க மற்றும் புத்தொழில் சார்ந்த முன்னெடுப்புகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்க வேண்டும் என்ற குறிக்கோள் காலத்தின் கட்டாயம். அதற்காக இந்த நடப்பு நிதியாண்டில், தமிழக நிதிநிலை வரலாற்றிலேயே முதல் முறையாகச் சுமார் ரூ.250 கோடிக்கும் மேற்பட்ட மதிப்பில் திட்டங்களை அறிவித்துத் திறம்பட செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

நல்ல பல முன்னெடுப்புகளை நான் பார்க்கிறேன். இவை அனைத்தையும், அனைத்து அமைச்சர்களும், அனைத்துத் துறை அதிகாரிகளும் வாரம்தோறும் கண்காணிக்க வேண்டும். கண்காணித்தால் மட்டும்தான் அந்தத் திட்டம் உருவாக்கியதற்கான பயன் நிச்சயம் கிடைக்கும். தொய்வு இருந்தால், அதை முடுக்கிவிட வேண்டும். சிறுகுறு மற்றும் நடுத்தரத் துறைக்கு மட்டுமல்ல அனைத்துத் துறைக்குமே இது பொருந்தும்.

வாரந்தோறும் ஆய்வுக் கூட்டங்களை நான் தொடர்ச்சியாகத் தலைமைச் செயலகத்தில் நடத்துகிறேன் என்றால், அதற்கு இதுதான் காரணம்.

முற்போக்கான திட்டங்கள், தேவையான நிதி ஆதாரங்கள், துறைகள் ஒருங்கிணைப்பு, தொடர் கண்காணிப்பு ஆகிய நான்கும் இணையும்போதுதான் மக்களுக்கு முழுமையான நன்மை கிடைக்கும்.

இதில் ஒன்று பலவீனம் அடைந்தாலும் முழுப்பலனை நாம் பெற முடியாது. அந்த வகையில் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டாக வேண்டும். புத்தொழில்களை நீங்கள் உருவாக்குகிறீர்கள். இதற்கான மனித வளத்தை உருவாக்க, "நான் முதல்வன்" போன்ற திட்டங்கள் கைக்கொடுக்கும்.

படித்த அனைவருக்கும் வேலைகள், அவர்களது படிப்புக்கு ஏற்ற வேலைகள், நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ற பணியாளர்கள் என்ற சூழலைத் தமிழகத்தில் உருவாக்குவோம்!

புத்தொழில் மாநிலமாகவும், புத்தொளி மாநிலமாகவும் தமிழ்நாட்டை உருவாக்குவோம்! உயர்த்துவோம்!

மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.08.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் வெள்ளிவிழாவில் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மாநில மனித உரிமை ஆணையத்தின் 25ஆவது ஆண்டை முன்னிட்டு நடைபெறும் இந்த வெள்ளிவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமானது 1993ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டாலும், தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையமானது 1997ஆம் ஆண்டுதான் தொடங்கப்பட்டது.

இதனை உருவாக்கியவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். இதற்கான முறையான அறிவிப்பைத் தமிழகத்தினுடைய சட்டமன்றத்தில் 1997ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் தேதி, விதி எண் 110ஐ பயன்படுத்தி முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு வெளியிட்டார்கள்.

மாநிலத்தில் மனித உரிமை ஆணையம் அமைக்க வேண்டும் என்று 1993ஆம் ஆண்டு முதல் கருத்துரு இருந்தாலும், அது அமைக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஒன்றிய அரசிடமிருந்து, இதுதொடர்பாகத் தொடர்ச்சியாக அறிவுறுத்தல் வந்தாலும், ஐந்து ஆண்டுகாலமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சித் தமிழகத்தில் 1996ஆம் ஆண்டு அமைந்த பிறகுதான், மாநில மனித உரிமை ஆணையம் அமைப்பதற்கான அரசாணை 20.12.1996 அன்று பிறப்பிக்கப்பட்டது. அதன்படி ஆணையம் அமைக்கப்பட்டது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் நயினார் சுந்தரம் அவர்களைத் தலைவராக நியமித்தது கழக அரசு.

இதனைச் சட்டமன்றத்தில் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு அறிவித்தார்கள். அதன்படி உருவாக்கப்பட்ட மாநில மனித உரிமை ஆணையத்தின் வெள்ளிவிழாவைத்தான் இன்று நாம் இங்கே கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

மனித உரிமை காக்கும் மாண்பாளரான தலைவர் கலைஞர் அவர்களை இந்த இடத்தில் நினைவுகூர்வது பொருத்தமானதாக இருக்கும்!

மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். மனிதனின் மாண்புகள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள்.

தந்தை பெரியார் அவர்கள், முதன்முதலில் தான் உருவாக்கிய அமைப்புக்கு 'சுயமரியாதை இயக்கம்' என்றுதான் பெயர் சூட்டினார்.

சுயமரியாதை என்பது ஒவ்வொரு மனிதருக்கும் உயிரினும் மேலானது! மனித உரிமைக்கு அடித்தளமானதும் சுயமரியாதைதான்.

சுயமரியாதை, தன்மானம், மனிதநேயம், மனித உரிமைகள் ஆகிய அனைத்தும் ஒரே பொருளைத் தரக்கூடிய வேறுவேறு சொற்கள்தான்.

அதனால்தான் தனிமனிதனின் சுயமரியாதையாக இருந்தாலும், ஓர் இனத்தின் தன்மானமாக இருந்தாலும், மானுடக் கூட்டத்தின் உரிமைகளாக இருந்தாலும் அவை எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது; பறிக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், கவனமாகவும் இருக்கிறோம். இவை எல்லாம் ஏதோ அரசியல் கட்சியின் கருத்துக்கள் மட்டுமல்ல, அரசியலமைப்புச் சட்டம் சொல்வதும் இதனைத்தான்.

அரசியலமைப்புச் சட்டத்தின் மிகமிக அடிப்படையான அம்சம் என்பதே மனித உரிமைகள்தான்.

சமத்துவ உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, எண்ணங்களை வெளியிடும் உரிமை, ஒன்றுகூடும் உரிமை, பணிகள் செய்யும் உரிமை, மத சுதந்திரம், கல்வி உரிமை, சொத்துரிமை, பாதிக்கப்பட்டால் அதற்காகத் தீர்வு காணும் உரிமை ஆகிய பல்வேறு உரிமைகளை அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. அதனைக் காக்கும் பொறுப்பும் கடமையும் அனைத்து அரசுகளுக்கும் உள்ளது.

அந்தக் கடமையிலிருந்து நாங்கள் ஒருநாளும் தவறமாட்டோம் என்ற உறுதியை நான் இங்கே தருகிறேன்.

எனது தலைமையிலான நமது அரசு, சட்டத்தின் அரசாக, நீதியின் அரசாக, சமூகநீதியின் அரசாகச் செயல்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். எனவேதான் நீதித்துறையினரின் கோரிக்கையை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொடுத்து வருகிறோம்.

- தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சேமநல நிதியானது ரூ.7 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- நீதித்துறையின் உட்கட்டமைப்புத் தேவைகளுக்காக பல்வேறு நீதிமன்றங்கள் அமைக்கும் வகையில் சென்னையில் 4.24 ஏக்கர் நிலத்தை நீதித்துறைக்கு அரசு வழங்கி உள்ளது.
- 9 மாடிக் கட்டடம் கட்ட ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றித் தர நாங்கள் தயாராக இருக்கிறோம். நீதித்துறையின் நீடித்த சிறப்பான செயலாக்கத்துக்கு ஒத்துழைப்பு நல்கக்கூடிய வகையில் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது.

மாநில மனித உரிமை ஆணையத்தின் இந்த வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டுச் சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

- ஆணையத்தில் உள்ள காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.
- இங்குப் பேசிய உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கையின்படி, ஆணையத்தின் விசாரணைக் குழுவில் காவல் துறையினரின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்று சொன்னார். இது குறித்தும் விரைவில் ஆய்வு செய்து முடிவு செய்யப்படும்.
- அதேபோல் மனித உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பவர்கள், விளிம்பு நிலை மக்களின் உரிமைக்காகப் போராடி வருபவர்களையும் இதில் எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்பது குறித்து ஆராயப்படும்.
- மாநில மனித உரிமை ஆணையத்தின் இணையதளம் தமிழில் உருவாக்கப்படும். மனித உரிமைத் தகவல்கள் அனைத்தும் அனைத்து மக்களையும் சென்றடையத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்படும்.
- மனித உரிமைக் கொள்கை, கோட்பாடுகள் குறித்தும், அதனை எந்த வகையில் பின்பற்ற வேண்டும் என்பது குறித்தும் அனைத்து

தரப்பினருக்கும் அறிவுறுத்தப் பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.

- ❖ எந்தவொரு தனிமனிதனின் உரிமையும் மீறப்படக் கூடாது. எத்தகைய சமூகமும் எதன் பொருட்டும் இழிவுபடுத்தப்படக் கூடாது.
- ❖ இதற்குக் காரணமான யாரும் சட்டத்தின் பார்வையில் இருந்து தப்பிவிடக்கூடாது.

இவை மூன்றும்தான் இந்த அரசினுடைய மனித உரிமைக் கொள்கை என்பதை இந்நிகழ்ச்சியின் வாயிலாக நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பங்கேற்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் எனது சில கோரிக்கைகளை முன்வைக்கவும் நான் விரும்புகிறேன்.

- ❖ பொதுமக்கள், வழக்கறிஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றத்தின் கிளை, சென்னையில் அமைய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
- ❖ சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகத் தமிழ் மொழி ஆக்கப்பட வேண்டும்.

இவை சட்டத்தின் ஆட்சியில் மக்களின் கோரிக்கைகளாக இவை அமைந்துள்ளன. இக்கோரிக்கைகளை சில மாதங்கள் முன்பு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் நான் முன்வைத்தவைதான். இருப்பினும் மீண்டும் அவற்றை இங்கு வலியுறுத்த, நினைவூட்ட நான் விரும்புகிறேன். இங்கு வந்து கௌரவித்துள்ள மாண்பமை நீதிபதிகள் அவற்றைத் தமிழ்நாட்டிற்கு நிறைவேற்றித்தரவும் உங்கள் அனைவரின் சார்பில் நான் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நீதித்துறையைப் பொறுத்தவரை நான் இங்கே கோரிக்கை வைப்பவனாகத்தான் வந்திருக்கிறேன் என்பதை நீதியரசர்கள் அறிவார்கள் என்று நான் நம்புகிறேன்.

சட்டத்தின் அரசாக, நீதியின் அரசாக, அதுவும் சமூகநீதியின் அரசாக அமைவதுதான் மக்களின் அரசாக அமைய முடியும்.

'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற சமூக நீதித் தத்துவத்தை உள்ளடக்கிய திராவிட மாடல் அரசை நாங்கள் நடத்தி வருகிறோம்.

மக்களுக்கு இன்றைய தேவை என்ன என்பது மட்டுமல்ல, முக்கியமாக நீதி மட்டும்தான் என்பதை நாங்கள் அறிவோம். உலகப் பொருளாதார மேதையான அமர்த்தியா சென் அவர்கள் கூறுகிறார். அவர் The idea of justice என்ற புத்தகத்தில், "நீதியை உருவாக்கிக் கொடுப்பதும், அநீதி ஏற்படாமல் தடுப்பதும் ஆகிய இரண்டும் முக்கியமானது" என்கிறார். அத்தகைய சூழ்நிலையை உருவாக்கவே நாங்கள் செயலாற்றி வருகிறோம்.

இதைத்தான் அய்யன் வள்ளுவர் தனது குறளில்

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூம் கோடா தெனின்" என்று கூறினார்.

இதன் பொருள், ஆட்சியாளருக்கு வெற்றி தருவது ஆயுதம் அன்று; அவரின் நெறி தவறாத ஆட்சி முறையே என்பதாகும். குறள் வழி நடக்கும் அறவழி ஆட்சியால், தமிழ் மக்களின் நலனையே முன்வைத்துச் செல்கிறோம். அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தொடர்ந்து விழைகிறோம்.

அந்த வகையில், மாநில மனித உரிமை ஆணையமானது இத்தகைய சமூக நீதி சமூகத்தை உருவாக்க அனைத்து வகையிலும் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆணையத்தின் தலைவர், உறுப்பினர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

பெரும்புலவன் பாரதியின் நினைவு நூற்றாண்டையொட்டி

“திரை இசையில் பாரதி” நிகழ்ச்சி

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு ஆகியோர் முன்னிலையில், 23.07.2022 அன்று கலைவாணர் அரங்கத்தில், சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெரும்புலவன் பாரதியின் நினைவு நூற்றாண்டையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்ற இசையமைப்பாளர் திரு. ஜேம்ஸ் வசந்தன் வழங்கும் “திரை இசையில் பாரதி” மெல்லிசை, நடன நிகழ்ச்சிகளை குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 23.07.2022 அன்று சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெரும்புலவன் பாரதியின் நினைவு நூற்றாண்டையொட்டி, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்ற இசையமைப்பாளர் திரு.ஜேம்ஸ் வசந்தன் வழங்கும் “திரை இசையில் பாரதி” மெல்லிசை, நடன நிகழ்ச்சிகளில் பாரதியார் வேடமிட்ட குழந்தைகளுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டார்.

செய்தித்துறை இணை இயக்குநர்கள் பணி ஆய்வு...

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டல இணை இயக்குநர்கள் பணி ஆய்வுக் கூட்டம் 03.08.2022 அன்று சென்னையில் நடைபெற்றது. உடன் தமிழ் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இளைஞர் திறன் திருவிழா தொடக்கம்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் 05.08.2022 அன்று திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தீனதயாள் உபத்யாய கிராமின் கௌசல் யோஜனா திட்டத்தின்கீழ் வட்டார அளவிலான வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி இளைஞர் திறன் திருவிழாவைத் துவக்கி வைத்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலிக் கருவி மற்றும் அடையாள அட்டையினை வழங்கினார்கள்.

ஒரு தாயின் தாலாட்டு

–முத்தமிழறிஞர் கலைஞர்

பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
பனைவைர நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல் முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் "கண்ணா!
பாலமுதம் இதோ பருகிட வாடா," என்பேன்!

"வரமாட்டேன் போ" என்று நிலாவெள்ளி ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடிடுவான் எதிர்வீட்டுப்
பிள்ளையுடன்!

வந்துவிடும் எனக்குக் கோபம்–கோலொன்றை எடுத்தோங்கி
"வரமாட்டேன் என்றா சொன்னாய்? இதோ வந்துவிட்டேன்"
எனத்

துரத்திடுவேன்; அடிக்கமாட்டேன்! ஆனாலும் என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

"கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்; நீ– நாளை
வேலுக்குப் போர் முனையில் என்ன பதில் சொல்வாய்?"
என்பேன்!

இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன்கலந்த பாலின் கிண்ணம் மெல்லக் கவிழ்த்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும் அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச் செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல் வளர்ந்து
விட்டான்!



தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி
யென்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, "சென்றுவா மகனே" என
அனுப்பி வைத்தேன்

அவனோ;

கொடுவாளால் களிறுகளைக் கொன்றுபோட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டிவிட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே
அடக்கவொண்ணா
ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஐயத்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான்
காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட
படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி
மிதக்கின்ற துடுப்புகளாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்.
"ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே
நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா?
அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?"
எனக் கேட்டுத் துடித்திட்டேன்!

"வாழ்கின்றேனம்மா வீரனாக!" என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றாங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்–
"உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?" என்றேன்.

"இங்கே" என்றான்; கண்டு கொண்டேன்!
"வலம்புரிச்
சங்கே!" என்றவாறு தழுவிக்கொண்டேன்!
கையில்;

தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க;
அதில்
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து
கிடந்தான்!

"வெற்றியம்மா வெற்றி" என்றான்– அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, "என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!" என்றேன்!

"ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு–வலி
உனக்குத் தாங்காதே மகனே!" என்றேன்; அழுதுவிட்டேன்!

"உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு;
உரைக்கும் வரை

நான் உணரவில்லையம்மா" என்றான்!

"உயிர்விட்டான் மடி மீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது–நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என
வாழ்த்துகின்றேன்!"

***

*"பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சி,
உயவொடு வருந்தும்மனனே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்,
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே!
உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு
மான் உளை அன்ன குடுமித்
தோல் மிசைக் கிடந்த புல் அண லோனே."

(புறநானூறு: பாடல்: 310, பாடியவர் : பொன்முடியார்)

பொருள் விளக்கம்:

மடுப்ப=உண்ணுமாறு செய்ய. செறாஅது=செல்லமாகக் கோபித்து. உயவொடு=கவலையுடன். மனனே= மனமே. களிறட்டு ஆனான்=களிறுகளைக் கொன்றவனானான். உரவோர்=மூத்தோர் (தந்தை). உன்னி=கவனித்தல். மான் உளை அன்ன குடுமி=குதிரை மயிர் போன்ற அடர்த்தியான குடுமி. தோல்=கேடயம். புல்=புல்லிய. அணலோன்=தாடியுடையவன்.

நன்றி: சங்கத்தமிழ் என்னும் நூலிலிருந்து...

கர்ப்பிணித் தாய்மார்கள் இணையதளத்தில் சுயமாகப் பதிவு செய்து RCH எண் பெறும் வசதி

பேறுகால மற்றும் குழந்தை தொடர் கண்காணிப்பு, மதிப்பீடுகள் இணையதளம் கர்ப்பிணிகளைப் பின் தொடர்ந்து அவர்களின் கர்ப்பகால விவரங்களைப் பதிவு செய்தல், மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் சிசு இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கான நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிக்மி இணையதளம் ஏப்ரல் 2008இல் தேசிய தகவலியல் மையத்தால் உருவாக்கப்பட்டது. ஆண்டுதோறும் 11 இலட்சம் தாய்மார்களின் தகவல்கள் பிக்மி இணையதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

தாய்மார்களுக்கு RCH எண் என்ற ஒரு தனிப்பட்ட அடையாள எண் வழங்கப்பட்டுக் கர்ப்பப்பதிவு முதல் குழந்தை பிறந்து 5 ஆண்டுகள் வரை தாய்சேய் நலச் சேவை விவரங்கள் பிக்மியில் பதிவு செய்யப்படுகிறது.

தமிழக அரசால் பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்குத் தாய்மார்களுக்கு RCH எண் அவசியமாக்கப்பட்டுள்ளது. தற்போது கிராமச் சுகாதாரச் செவிலியர் மூலம் கர்ப்பப் பதிவு செய்து RCH எண் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தாய்மார்கள் RCH எண் பெறுவதை மேலும் எளிதாக்கும் பொருட்டு PICME 2.0 இணையதளத்தில் https://picme.tn.gov.in/picmepublic மூலம் கர்ப்பிணித் தாய்மார்கள் தாமே சுயப் பதிவு (Self Registration) செய்து RCH எண் (RCH Number) பெறும் வசதி மாண்புமிகு மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களால் 27.05.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

RCH எண் சுயப் பதிவு வசதி துவக்கி வைக்கப்பட்ட நாள் 27.05.2022 முதல் 30.06.2022 வரை 230 கர்ப்பிணித் தாய்மார்கள் இவ்விணையதள வசதியைப் பயன்படுத்தித் தங்கள் கர்ப்பத்தினைச் சுயப் பதிவு செய்து தங்களுக்கான தனிப்பட்ட அடையாள எண் (RCH எண்) பெற்றுள்ளனர்.

அனைத்துக் கர்ப்பிணித் தாய்மார்களும் எவ்வித சிரமமுமின்றித் தங்களுக்கான தனிப்பட்ட அடையாள எண்ணை PICME 2.0 இணையதளத்தில் உள்ள RCH சுயப் பதிவு வசதியைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு தமிழக அரசால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், RCH சுயப் பதிவு பற்றிய விவரங்களை அறிந்து கொள்வதற்கு https://youtu.be/8MukXt7IVsQ என்ற வலை ஒளி உரலியினை (Youtube link) பயன்படுத்திக்கொள்ளுமாறு பயனாளிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் 17.07.2022 அன்று, சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகிச் செண்பகராமன், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகிச் சங்கரலிங்கனார் ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி துணை மேயர், தமிழ் வளர்ச்சித்துறை அரசுச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாற்றுத்திறனாளிகளுக்கான அரசுச் சிறப்புப்பள்ளிகள்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின்கீழ் 10 பார்வைத்திறன் குறைபாடுடையோருக்கான அரசுச் சிறப்புப்பள்ளிகள், 10 செவித்திறன் குறைபாடுடையோருக்கான அரசுச் சிறப்புப்பள்ளிகள், கை, கால், இயக்கத்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அரசுச் சிறப்புப்பள்ளிகள்–1, மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம்–1 ஆக மொத்தமாக 22 அரசு சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ், செயல்படும் மேற்காணும் சிறப்புப் பள்ளிகளில் 2022–2023ஆம் கல்வியாண்டிற்கு மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் சேர்க்கை நடைபெறுகிறது.

இச்சிறப்புப்பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கென ஆண்கள், பெண்கள் எனத் தனித்தனி இலவச விடுதி வசதி, விடுதிகளில் தங்கிப் பயிலும் மற்றும் பள்ளிக்குச் சென்று வீடு திரும்பும் மாணவ / மாணவியர்களுக்குச் சத்தான உணவு, காற்றோட்டமான வகுப்பறைகளும், நான்கு செட் விலையில்லாச் சீருடை, விலையில்லாப் புத்தகங்கள், பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ / மாணவியர்களுக்காக ப்ரெய்லி புத்தகங்கள், 10ஆம் மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ / மாணவியர்களுக்கு, அவர்கள் எளிதாகக் கல்வி பயில்வதற்கு ஏதுவாக தமிழக அரசால் விலையில்லாமல் ஏஞ்சல் ப்ரோ எனும் உதவி உபகரணம் ஆகியன வழங்கப்படுகின்றன. மேலும், இச்சிறப்புப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களுக்குரிய உதவி உபகரணங்களும், தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளும், கல்வி உதவித்தொகையும், பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவ / மாணவியர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகையும் வழங்கப்படுகின்றன.

மேலும், மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கென கல்வி பயில்வதற்கு ஏதுவாக சிறப்புக்கல்வி பெற்ற தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு தரமான கல்வி வழங்கப்படுகிறது. இச்சிறப்புப்பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் கணினித் திறனை மேம்படுத்த ஏதுவாக சிறந்த கணினிப் பயிற்றுநர்களைக் கொண்டு கணினிப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி நலனை மேம்படுத்தத் தமிழக அரசால் நடத்தப்படும் அரசு சிறப்புப்பள்ளிகளில் சேர்க்க இணைப்பில் கண்டுள்ள சிறப்புப்பள்ளித் தலைமையாசிரியர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்களைத் தொடர்பு கொண்டு இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அரசுச் சிறப்புப்பள்ளிகளின் விவரங்கள்

வ. எண்.	சிறப்புப்பள்ளியின் பெயர் மற்றும் முகவரி	அலுவலகத் தொலைபேசி எண்
1	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி,** பூவிருந்தவல்லி ரோடு, பூவிருந்தவல்லி, சென்னை–600 056.	044–26272080
2	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி,** மேம்பாலம், தஞ்சாவூர்–613 001.	04362–272222
3	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,** புத்தூர், திருச்சி–620 017	0431–2794945
4	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி,** 572, கே.கே.நகர், மதுரை–625 020.	0452–2529502
5	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி,** பங்களா தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்–636 002.	0427–2213188

வ. எண்.	சிறப்புப்பள்ளியின் பெயர் மற்றும் முகவரி	அலுவலகத் தொலைபேசி எண்
6	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசுத் தொடக்கப்பள்ளி,** நெல்லிக்குப்பம், கடலூர்–607 001.	04142–222447
7	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசுத் தொடக்கப்பள்ளி,** உலியம்பாளையம், தொண்டாமுத்தூர், கோயம்புத்தூர்–641 109.	0422–2917113
8	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசுத் தொடக்கப்பள்ளி,** 9/1, இரயில்வே ஸ்டேசன் ரோடு, தருமபுரி–636 701.	04342–267211
9	**பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசுத் தொடக்கப்பள்ளி,** இளையான்குடி சாலை, அம்பேத்கார் சிலைசமீபம், சிவகங்கை–630 561.	04575–240458
10	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி,** கலெக்ட்ரேட் அஞ்சல், இலக்கியம்பட்டி, தருமபுரி–636 705.	04342–232418
11	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி,** மேம்பாலம், தஞ்சாவூர்–613 001.	04362–274769
12	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி,** ஸ்ரீநிவாசா காலனி, சூரமங்கலம், சேலம்–636 005.	0427–2442067
13	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி,** சி.எம்.நகர், ஆர்.என்.புதூர், ஈரோடு–638 305	0424–2535860
14	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி,** சூலக்கரை, விருதுநகர்–626 003.	04562–253105
15	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளி,** சடாவரம், ஒரிக்கை அஞ்சல், காஞ்சிபுரம்–631 502.	044–27267322
16	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி,** 14, ஸ்ரீ நாராயணசாமி நகர், (குண்டபாணிநகர் அருகில்), வரக்கல்பட்டு அஞ்சல், நத்தப்பட்டு, கடலூர்–607 109.	04142–221744
17	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி,** 8ஏ, ஹோம் ரோடு, ஜட்ஜ் காலனி, தாம்பரம் சானிடோரியம், சென்னை– 600 047.	044–29710196
18	**செவித்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி,** 66, காட்டுபுதுக்குளம், புதிய பேருந்து நிலையம் அருகில், புதுக்கோட்டை–622 001.	04322–226337
19	**கடுமையான இயக்கத்திறன் பாதிக்கப்பட்ட** **குழந்தைகளுக்கான அரசு நடுநிலைப்பள்ளி,** வில்லாபுரம் ஹவுசிங் யூனிட், மதுரை–625 011.	9499933442
20	**மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம்,** 8ஏ, ஹோம் ரோடு, சர்வீஸ் ஹோம் பின்புறம், ஜட்ஜ் காலனி, தாம்பரம் சானிடோரியம், சென்னை – 600 047.	044–22234101

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு

கடந்த 2020–2021 மற்றும் 2021–2022ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பில் 60 சதவிகிதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவியருக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பினை தாட்கோ மூலம் HCL நிறுவனம் செயல்படுத்த உள்ளது.

இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவிகள் முதல் ஆண்டில் HCL நிறுவனத்தின் மூலம் பயிற்சி வழங்கப்படும். முதல் ஆறு மாதங்களுக்கு இணையவழி மூலமாகப் பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சிக்குத் தேவையான மடிக்கணினி HCL நிறுவனமே வழங்கும். அடுத்த ஆறு மாதத்தில் சென்னை, மதுரை, விஜயவாடா, நொய்டா, லக்னோ, நாக்பூர் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள HCL நிறுவனத்தில் நேரடிப் பயிற்சி அளிக்கப்படும். முதல் ஆண்டில் ஆறாம் மாதம் முதல் மாணாக்கர்களுக்கு மேற்படி நிறுவனத்தின் வாயிலாக ஊக்கத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும்.

இரண்டாம் வருடத்தில் மாணாக்கர்களுக்கு மூன்று விதமான கல்லூரிகளில் தகுதியின் அடிப்படையில் பட்டப்படிப்புப் பயில வழிவகை செய்யப்படும்.

அதன்படி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள இந்தியாவிலேயே மதிப்பு மிக்க BITS-PILANI பல்கலைக் கழகத்தில் B.Sc., (Design & Computing) பாடப்பிரிவில் சேர்க்கப்படுவார்கள். இப்படிப்பானது B.Tech.,க்கு சமமான படிப்பாகும். இந்த நான்கு ஆண்டு பட்டப்படிப்பினை HCL நிறுவனத்தில் வேலை செய்துகொண்டே படிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். இக்கல்லூரியில் சேர்வதற்கு 12ஆம் வகுப்பில் இயற்பியல் பாடத்தில் 60 சதவிகிதம் மதிப்பெண் பெற்று இருக்க வேண்டும்.

அதேபோல் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சாஸ்தரா (SASTRA) பல்கலைக்கழகத்தில் மாணாக்கர்களின் தகுதிற்கேற்ப HCL நிறுவனத்தில் வேலை வாய்ப்புடன் BCA 3 வருட பட்டப்படிப்புப் படிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள AMITY பல்கலைக் கழகங்களில் மூன்று வருடம் BCA, BBA., B.Com., பட்டப்படிப்பு படிப்பதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படும்.

மேற்காணும் வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி பெறுவதற்கான தகுதிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினராக இருத்தல் வேண்டும். 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டு பனிரெண்டாம் வகுப்பில் கணிதம், வணிக கணிதம் பாடத்தில் மொத்த மதிப்பெண்களில் குறைந்தபட்சம் 60 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

இதில் தாட்கோவின் பங்களிப்பாக HCL நிறுவனம் நடத்தும் நுழைவுத் தேர்வில் பங்கேற்பதற்குத் திறன் வாய்ந்த நிறுவனங்கள் மூலம் மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். ஒவ்வொரு மாணாக்கருக்கும் பயிற்சிக்கான கட்டணத் தொகையை தாட்கோவே ஏற்கும். பின்னர் தேர்ச்சி பெற்ற மாணக்கருக்கு HCL நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய ரூ.1.18 இலட்சம் கட்டணத் தொகையை முதல் ஆறு மாதப் பயிற்சிக் காலத்தில் தாட்கோ கல்வி கடனாக வழங்கும்.

BITS-PILANI பல்கலைக்கழகத்தில் நான்கு வருடம், சாஸ்தரா (SASTRA), AMITY பல்கலைக்கழகத்தில் 3 வருடம் பட்டப்படிப்பில் சேர்ந்தவுடன் HCL நிறுவனத்தில் முதல் ஆண்டு திறமைக்கு ஏற்றவாறு ஊதிய உயர்வுடன் ஆண்டு வருமானம் ரூ.1.17 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரை வழங்கப்படும்.

மேற்படி நிபந்தனைகளின்படி தேர்வு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு நுழைவுத் திறனுக்கான மூன்று பாடப்பிரிவிற்கு Communication Skill (Basic English), Verbal & Logical Reasoning and Maths (Aptitude Tests) போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டுப் பின்னர் இணையவழி வாயிலாக நுழைவுத் தேர்வு நடத்தப்படும். இத்தேர்வில் மூன்று பாடப்பிரிவுகளிலும் குறைந்தபட்சமாக 10 மதிப்பெண்ணிற்கு 4 மதிப்பெண் பெற்றால் போதுமானதாகும்.

மேலும், இத்திட்டம் தொடர்பான விபரங்கள் மற்றும் பதிவு செய்வதற்கு தாட்கோ இணையதளம் www.tahdco.com என்ற முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.



கல்வியும், மருத்துவமும் அரசின் இரண்டு கண்கள்

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளைக் கல்வி வளர்ச்சி நாள் எனத் தலைவர் கலைஞர் அறிவித்ததே, நாம் கல்வி பெற்றிட அவர் முன்னெடுத்த திட்டங்களைத் தலைமுறைகள் தாண்டியும் எடுத்துக்கூறும்!

போராடிப் பெற்ற கல்வி உரிமையால், அறிவார்ந்த நற்சமுதாயமாய் விளங்கிடுவோம்!

கல்வியும் மருத்துவமும் நமது அரசின் இரண்டு கண்கள்!

தரமான கல்வியும் மருத்துவமும் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் நாம் செயல்படுத்தி வரும் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்திடப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில் உறுதிக்கொள்வோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் வாழ்த்துச் செய்தி (15.07.2022)

படமும்/செய்தியும்

ஜூலை 15 : பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 120ஆவது பிறந்தநாள்

சென்னை அண்ணாசாலை, பல்லவன் இல்லம் அருகில் தமிழ்நாடு அரசின் சார்பில் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 120ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு 15.07.2022 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி துணை மேயர், தமிழ் வளர்ச்சித்துறை அரசுச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

"காவிய நாயகன்"

மாவீரன் அழகு முத்துக்கோன், உயிரைவிட மானம் பெரிதெனப் போற்றிய வீரத்தின் அடையாளம்!

18ஆம் நூற்றாண்டிலேயே விடுதலைக் கனலை மூட்டி, பீரங்கிக்கு உடலைச் சிதறக்கொடுத்து வரலாற்றில் நீங்கா இடமும், மங்காப் புகழும் கொண்ட அரிமா நெஞ்சம் அவரது!

கட்டாலங்குளத்துக் காவிய நாயகன் புகழ் வாழ்க!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு (11.07.2022)

ஜூலை 11 : மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்கள் பிறந்தநாள்

சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில், தமிழ்நாடு அரசின் சார்பில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு 11.07.2022 அன்று மாண்புமிகு அமைச்சர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகரச் சென்னை மாநகராட்சித் துணை மேயர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

செப்டம்பர் 11 : பாரதியார் நினைவு நாள்

‘மகாகவி’

“தேசப் பற்று, தெய்வப் பற்று, தமிழ்ப் பற்று, மானுடப் பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் பாரதியார். நாட்டு விடுதலைக்காகப் போராடியவராக மட்டுமே இருந்திருந்தால் அதற்காக மட்டுமே அவர் நினைவுகூரப்பட்டிருப்பார். அதையும் தாண்டி சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் எழுதியதால்தான் பாரதியார் கவிதை வரிகளாய் உலவி வருகிறார்.”

கடந்த ஆகஸ்ட் 15ஆம் நாள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு உரையாற்றும்போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டன, அவர் மறைந்த ஆண்டின் நூற்றாண்டு என்று இந்த ஆண்டைக் குறிப்பிட்டுக் காட்டினேன். நூறாண்டுகள் கழித்து மட்டுமன்று, ஆயிரமாண்டுகள் கழித்தும் உயிரோட்டமுள்ள கவிதைகளை, பாடல்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு விட்டுச் சென்றவர்தான் மகாகவி என்று போற்றப்பட்ட பாரதியார் அவர்கள்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையிலிருந்து...
(10.09.2021)

செப்டம்பர் 5 : வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாள்

‘கப்பலோட்டியத் தமிழன்’

நமது நாட்டின் விடுதலைக்காகச் சொத்துச் சுகங்களையும், சொந்த பந்தங்களையும் இழந்து போராட்டக் களத்தில் இன்னுயிர் ஈந்த தியாகிகள் ஏராளம். அப்படிப் போராடிய தியாகச் செம்மல்தான் வ.உ.சிதம்பரனார் அவர்கள்.

அரசியலில் தனது குருவாக மதித்த திலகரின் கொள்கைகளைப் பின்பற்றினார். ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அரசியல் ரீதியாக மட்டுமில்லாமல், வணிக ரீதியாகவும் வீழ்த்திட “சுதேசி நேவிகேஷன் கம்பெனி” என்ற கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். அதனாலேயே ‘கப்பலோட்டியத் தமிழன்’ என்று புகழப்பெற்றார்.

தனது வீரம் செறிந்த சொற்பொழிவுகளாலும், அதிரடி நடவடிக்கைகளின் மூலமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அதிர வைத்தார். ஓயாத அரசியல் பணிகளுக்கு நடுவிலும் தீராத தமிழ்த் தாகத்தோடு பணியாற்றி வந்த அவர் பல நூல்களை எழுதியதோடு, தனது நாற்பதாண்டுக் கால வாழ்க்கை வரலாற்றைச் சுயசரிதையாக, கவிதை வடிவில் அமைத்தார். சிறை வாழ்க்கையிலும், சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்பும், இருகட்டங்களாக அவர் இயற்றிய சுய சரிதை அவருடைய மறைவுக்குப்பின் 1946இல் நூலாக வெளியிடப்பட்டது.

– தமிழரசு இதழ் வெளியிட்ட மடிப்பேடிலிருந்து.....

செப்டம்பர் 17 : தந்தைப் பெரியார் அவர்களின் பிறந்தநாள்



‘சமூக நீதிக் கதவைத் திறந்த கைத்தடி’

‘மானமும், அறிவும் மனிதர்க்கு அழகு’ என்பதையே அடிப்படையாகக் கொண்டு சுயமரியாதை இயக்கம் தொடங்கிய தந்தைப் பெரியார் அவர்கள், மானமும் அறிவும் உள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு அறிவுலக ஆசானாக இந்த நாட்டை வலம் வந்தார். அவர் நடத்திய போராட்டங்கள் யாராலும் ‘காப்பி’ அடிக்க முடியாத போராட்டங்கள்; அவர் எழுதிய எழுத்துக்கள் யாரும் எழுதத் தயங்கும் எழுத்துக்கள்; அவர் பேசிய பேச்சுக்கள், யாரும் பேசப் பயப்படும் பேச்சுக்கள்; தமிழர் நலமெல்லாம் தன்னுடைய நலமாகக் கருதினார்; தமிழர்க்கு எதிரானது எல்லாவற்றையும் தனது எதிரியாகக் கொண்டு எதிர்த்திருக்கிறார்.

“மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு இல்லை; ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்,” இவை இரண்டும்தான் அவரது அடிப்படைக் கொள்கைகள். சாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு ஆகிய இரண்டும்தான் அவரது இலக்குகளாக இருந்திருக்கின்றன. அந்த இரண்டுக்கும் எவையெல்லாம் தடையாக இருக்குமோ, அவை அனைத்தையும் கேள்வி கேட்டார்; அறிவியல்பூர்வமாகக் கேள்வி கேட்டார்; தன்னைப் போலவே சிந்திக்கத் தூண்டினார்.

அவரது சுயமரியாதைச் சிந்தனையால் தமிழினம் சுயமரியாதைச் சிந்தனையைப் பெற்றது; அவர் உருவாக்கிய பகுத்தறிவின் கூர்மையால் தமிழினம் சிந்தனைத் தெளிவு பெற்றது. சாதியால் அடக்கி ஒடுக்கப்பட்ட மனிதர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் மேன்மையை அடைவதற்கான சமூக நீதிக் கதவைத் திறந்து வைத்தது அவரது கைத்தடியே ஆகும். தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; இன்று இந்தியா முழுமைக்கும் சமூக நீதிக் கருத்துக்கள் விதைக்கப்பட்டுள்ளன என்றால், அதற்கு அவர் போட்ட அடித்தளமே காரணம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
06.09.2021 அன்று சட்டமன்றப்
பேரவையில் ஆற்றிய உரையிலிருந்து....

செப்டம்பர் 15: பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள்

‘தமிழ் ஒரு செம்மொழி’

❖ தமிழர்கள் தங்கள் மொழியையும் வாழ்வையும் ஒன்றாக இணைத்துக் கொண்டவர்கள்; மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழிநடத்தும் துணைவன், வழிகாட்டும் வழிகாட்டி; பாடம் போதிக்கும் ஆசான்; உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள்.

❖ “தமிழ் மீது நாம் பற்று வைப்பது இயற்கை நியதியாகும். ஆனால் அதற்குமேலே அந்த மொழியை ஒப்பிட்டுப் பார்த்தாலும், தமிழ் ஒரு செம்மொழி என்பது தெரிகிறது. அந்த மொழி மீது வைக்கப்படுகின்ற பற்றின் காரணமாக, அந்த மொழி, எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம். ஏற்றத்திற்குத் தடையாக, ஏதேனும் வருமானால், நம்மையும் அறியாமல் உள்ளம் கொதிப்படைகிறது.”

❖ இப்பொழுது தமிழிலே பாடுகின்ற, தமிழுக்காக உழைக்கின்ற எல்லாக் கவிவாணர்களையும் தமிழ்நாடு வரவேற்கின்றது. எக்கட்சியினராயினும், எம்மதத்தினராயினும், எக்கொள்கையினராயினும் செய்கிற தொண்டு தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பயன்படுகிறதென்றால், தமிழனுடைய உள்ளம் குளிர்கிறது. உடனே கவிகளைக் கட்டி அணைக்கத் தனது இரு கரங்களையும் நீட்டுகிறான்; பாராட்டுகிறான்; பரிசளிக்கிறான். இது நாட்டின் நற்காலத்திற்கோர் எடுத்துக்காட்டு!

– தமிழரசு வெளியிட்ட அண்ணாவின்
பொன்மொழிகள் எனும் நூலிலிருந்து...

செப்டம்பர் 16 : இராமசாமி படையாச்சியார் பிறந்தநாள்

"அன்பு - பாசம்"

1989 ஆம் ஆண்டு தமிழகத்திலே சட்டமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற்ற போது நான் கடலூர் பகுதியிலே பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தேன். அப்போது கூட்டத்திலே அமர்ந்திருந்தபோது படையாச்சியார் அவர்களுக்கு உடல் நலம் சரி இல்லை. அவர் வீட்டிலே தங்கி ஓய்வெடுத்துக் கொள்கிறார் என்று சொன்னார்கள். நான் அந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு அடுத்த ஊருக்குச் செல்லவேண்டிய அவசியம். இருந்தாலுங்கூட அதையும் ஒத்திவைத்துவிட்டு நேராக எஸ்.எஸ்.ஆர். வீட்டிற்குச் சென்று அவரைச் சந்திக்க வருகிறேன் என்று சொல்லி அனுப்பி விட்டுச் சென்றேன்.

அவருடைய பெருந்தன்மையைப் பாருங்கள். நான் வருகிறேன் என்று எதிர்பார்த்து, அப்போது நான் ஒன்றும் ஆட்சிப் பொறுப்பிலே அமைச்சராக இருந்தவன் அல்ல. அவர் வீட்டு வாசலிலே உடம்பு முடியாத நிலையிலேயே, எழுந்து கூட நிற்க முடியாத நிலையிலே அமர்ந்து கொண்டு ஒரு மாலையைக் கையிலே வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். நான் சென்றவுடனே எனக்கு அந்த மாலையைப் போட்டு வரவேற்றார்.

அந்த அளவிற்கு ஓர் அன்பு, பாசம் எனக்கும், அவருக்கும் இடையிலே உண்டு. அதற்கு என்ன காரணம் என்று எண்ணியெண்ணிப் பார்க்கிறேன். ஒன்றும் காரணமல்ல, நானும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன். அவர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இனமும் இனமும் ஒன்று சேருவதிலே ஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருடைய சிலையை இங்கே நான் நிர்மாணித்துத் திறந்து வைத்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் இந்தச் சமுதாயத்திற்காகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக, அதே நேரத்தில் முன்னேறிய சமுதாயத்தை அழிப்போம் என்கிற எண்ணம் இல்லாமல் எல்லா சமுதாயத்தினரோடும் ஒன்றுபட்டு ஒத்துழைத்துப் பேதங்களை மறந்து அனைவரும் பாடுபடுவோம் என்ற உறுதியை எடுத்துக்கொள்வதுதான் எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற நன்றிக் காணிக்கையாக இருக்க முடியும்.

– முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்
21.02.2001 அன்று சென்னையில்
இராமசாமி படையாச்சியார்
திருவுருவச் சிலையைத் திறந்துவைத்து
ஆற்றிய உரையிலிருந்து...

தெரிந்து கொள்வோம்!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையிலான அரசு, மின்சாரத்துறையில் கடந்த ஓராண்டில் 13,32,790 மின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- பழுதடைந்த மின் கம்பங்கள் 27,821 புதிதாக மாற்றப்பட்டுள்ளன.
- தாழ்வாகச் செல்லக் கூடிய மின் கம்பிகள் 74,407 இடங்களில் சரி செய்யப்பட்டுள்ளன.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய 'மின்னகம்' மின் நுகர்வோர் சேவை மையம் 20.06.2021 அன்று துவங்கப்பட்டு, கடந்த ஓராண்டில் 9,07,000 புகார்கள் பெறப்பட்டு 9,02,000 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. இது மொத்தத்தில் 99.41 விழுக்காடு ஆகும்.

தெரிந்து கொள்வோம்!

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிமுகப்படுத்திய மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ இதன் மூலம் அதிக மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டுள்ளனர். சாதாரணக் கட்டணப் பேருந்துகளில் மகளிரின் பங்கு 40 சதவிகிதத்திலிருந்து 62.28 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

★ கடந்த 16.06.2022 வரை 126.10 கோடி மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

" இலக்கியத் திருவிழா "

திரு. **அமர் குஷ்வாஹா,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

ஒரு தனிமனித அளவில், குடும்ப அளவில், சமுதாய அளவில் என 3 விதமான மனஅழுத்தம் ஏற்படுகிறது. அனைத்து விதமான மக்களின் பதற்றம் மற்றும் மனஅழுத்தம் உள்ளிட்ட அனைத்து தீர்வுகளுக்கும், மனநிறைவிற்கும் இலக்கியம் மிகவும் அவசியமாக இருக்கிறது.

அதனடிப்படையில், திருப்பத்தூர் மாவட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட நிருவாகம், திருப்பத்தூர் மாவட்ட இலக்கிய, கலை மற்றும் பண்பாட்டு மன்றம் இணைந்து புத்தகக் கண்காட்சியுடன் இலக்கிய திருவிழாவினை நடத்த மாவட்ட நிருவாகம் வாயிலாகத் திட்டமிடப்பட்டு இலக்கியத் திருவிழா 02.04.2022 முதல் 09.04.2022 வரை நடைபெற்றது.

கடந்த 40 வருடங்களுக்கு முன்பு, ஒரு நிகழ்ச்சி நடைபெற்றால் அடுத்த நாள் செய்தித்தாளைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்வோம். தற்போது தகவல்கள் பரிமாற்றம் உடனுக்குடன் நடைபெறுகிறது. இதனால் நன்மைகளும் இருக்கின்றன, தீமைகளும் இருக்கின்றன. மேலும், இலக்கியத்தை நாம் தெரிந்துகொண்டால் உடல், இருதயம், மனம் ஆகிய முக்கிய உடல் உறுப்புகள் ஒரே சீராகச் சமநிலையில் இருக்கும். இதுவே இலக்கியம் மற்றும் புத்தகத்தின் முக்கியத்துவமாகும். சென்னை, புதுதில்லி, மும்பை, ஜெய்பூர்

உள்ளிட்ட மாநகரங்களில்தான் இதுபோன்ற இலக்கியத் திருவிழா நடைபெறும். அதனடிப்படையில், திருப்பத்தூரில் இலக்கியத் திருவிழா நடத்தப்பட்டது.

குருபவாணிகுண்டா நடுநிலைப்பள்ளிக்கு ஆய்வுக்குச் சென்றபோது அங்குள்ள மாணவர்களிடம், ‘நூலகத்தைப் பார்த்திருக்கிறீர்களா’ என்று கேட்டதற்கு மாணவர்கள் ‘நாங்கள் பார்த்ததில்லை’ என்று கூறினார்கள். உடனடியாக நாட்றம்பள்ளியில் உள்ள நூலகத்திற்குப் பள்ளி மாணவர்களை அழைத்துச் சென்று அங்கு புத்தகங்களைப் படிக்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. நூலகத்திலிருந்து அந்தப் பள்ளி மாணவர்கள் செல்லும்போது அவர்களின் முகத்தில் மனமகிழ்ச்சியைக் காண முடிந்தது. இந்த நிகழ்வே இலக்கியத் திருவிழா மற்றும் புத்தகக் கண்காட்சியை நடத்த உந்துதலாக இருந்தது.

திரு. **ர.திருமலை**
திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் இலக்கியத் திருவிழாவிற்கு 48க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் வருகை புரிந்திருந்தார்கள். மேலும், 200 புத்தகப் பதிப்பாளர்கள் புத்தகக் கடைகள் அமைத்திருந்தார்கள். இந்தப் புத்தகக் கண்காட்சியில் 60க்கும் மேற்பட்ட அரங்கங்களும், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களும் கண்காட்சியில் இடம்பெற்றது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்துகொண்டார்கள். இந்த கண்காட்சியில் 45 இலட்சம் மதிப்பிற்கும் அதிகமாகப் புத்தகத்தை மாணவ, மாணவிகள், பொதுமக்கள் வாங்கிப் பயனடைந்துள்ளனர்.

இலக்கியத் திருவிழா திட்டத்தின்கீழ்ப் பயன்பெற்ற திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ர.திருமலை அவர்கள் தெரிவித்ததாவது:



டாக்டர் **அ.அருண் தம்புராஜ்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்

“எதிர்நீச்சல்”

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முயற்சியில் தனிநபர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் நலன்காக்க, தற்கொலை உணர்விலிருந்து மீட்கும் வகையிலும் காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் சமூக நலத்துறை ஒருங்கிணைந்து ‘‘எதிர்நீச்சல்’’ என்கிற புதிய ஆலோசனை வழங்கும் மையம் 14.03.2022 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது வலிமையான வளமான மனித சமுதாயத்தில் வாழ்ந்திட வேண்டும் என்ற அடிப்படையில் உயர்கல்வி, பொருளாதார முன்னேற்றம், ஆரோக்கியமான வாழ்க்கை நிலையைப் பெற்றிட நாம் அனைவரும் திட்டமிட்ட வாழ்வியல் முறையில் பயணிக்கிறோம். வாழ்க்கைப் பயணத்தில் பாதுகாப்பற்ற மற்றும் எதிர்பார்க்காத பிரச்சினைகளைச்

திருமதி **திவ்யா**
நாகப்பட்டினம் மாவட்டம்

சந்திக்க நேரிடும்போது மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டு, சமுதாயம், உறவினர்கள், நண்பர்களால் நிராகரிக்கப்பட்டுத் தனிமைப்படுத்தப்படும்போது தற்கொலை செய்யவேண்டும் என்ற எண்ண உணர்வுக்கு ஆட்படுகின்றனர். அவ்வாறு பாதிக்கப்பட்ட சகமனிதர்களுக்கு உதவிடும் வகையில், எதிர்நீச்சல் என்ற சிறப்புத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தற்கொலை உணர்விலிருந்து மீட்க உதவும் வகையிலான எதிர்நீச்சல் திட்டத்தின்கீழ் வாழ்வியல், உளவியல், உயர்கல்வி, மறுவாழ்வு, சட்டம் சார்ந்த, வேலைவாய்ப்பிற்கான ஆலோசனையும், கடன், வறுமை, பொருளாதார காரணம், மாணவ, மாணவிகளின் கல்வி சார்ந்த பிரச்சினைகள், சாதி மறுப்புத் திருமணம், காதல் விவகாரம், பாலியல் வன்கொடுமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கும் இம்மையமானது அனைத்து நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை செயல்படும். ஆலோசனை வேண்டுபவர்கள் **91500 57408** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெறலாம். ஆலோசனை மையம் வாயிலாக இதுவரை 22 தொலைப்பேசி அழைப்புகள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது.

எதிர்நீச்சல் திட்டத்தின்கீழ் பயன்பெற்ற நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி திவ்யா அவர்கள் தெரிவித்ததாவது :



அனுப்புநர்
திருமதி. திவ்யா
க/பெ பாலசுப்பிரமணியன்
ஆயக்காரன்புலம் - II
பாப்புரெட்டித்தெற்கு

பெறுநர்
உயர்திரு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்
நாகப்பட்டினம் மாவட்டம்

மதிப்பிற்குரிய அய்யா!

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வணக்கம். நான் 10ஆம் வகுப்பு வரை படித்திருக்கேன். எனக்கு 1 ஆண்டுக்கு முன் திருமணம் நடைபெற்றது. எனது கணவர் பெயிண்டர் வேலை பார்த்து வருகிறார். எனக்கு ஒரு குழந்தை உள்ளது. எனக்கும் என் கணவருக்கும் சண்டை ஏற்பட்டு மனம் மிகவும் வருத்தம் அடைந்து தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துவிட்டேன். வீட்டிலுள்ளவர்கள் என்னை வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். 10 நாட்கள் நான் சிகிச்சை பெற்று வந்தேன் மருத்துவமனையில் எதிர்நீச்சல் விளம்பர பலகையை பார்த்தேன். அதில் இருந்த தொலைபேசி எண்ணிற்கு (91500 57408) தொடர்பு கொண்டு பேசினேன். மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருந்த பணியாளர் பேசினார்கள். உடனடியாக நேரில் என்னை வந்து என்னை சந்தித்து எனக்கு சிறந்த அறிவுரைகள் வழங்கினார்கள். எனது மனவருத்தத்தை நன்னம்பிக்கையை ஏற்படுத்தினார்கள். எனது வாழ்க்கையை மிகப்பெரிய மாற்றத்தையும் நம்பிக்கையும் ஏற்படுத்தி கொடுத்தார்கள். எனக்கு மட்டும் இன்றி என்னை போன்ற கிராமத்து மக்களுக்கு வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும் போது இது போன்ற அறிவுரைகளை வழங்கி தற்கொலை எண்ணத்திலிருந்து போக்கி வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை ஏற்படுத்தும் எதிர்நீச்சல் என்ற திட்டத்தை உருவாக்கி தந்த நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள
P. திவ்யா

சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் 31.07.2022 அன்று தமிழ்நாடு காவல்துறை சார்பாக நடைபெற்ற விழாவில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் திரு.**எம்.வெங்கையா நாயுடு** அவர்கள், குடியரசுத் தலைவரின் கொடியினை வழங்கிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.08.2022 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டுச் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,